

கல்கி
KALKI
18.1.98
ரூ. 4.50
"எதுவுமே ஈஸி இல்லை!"
—ஊர்வசி


HMT
கடிகாரங்கள்
LG GL 63
Rs. 825
LG GG 32
Rs. 955
பெறுவதை விட தருவதே சிறந்தது
என்பார்கள் பெரியவர்கள். ஆனால்
இதற்கில விதிவிலக்குகள் நிச்சயம் உண்டு
SG 005
Rs. 2100
BLS 4
Rs. 2362
56429
Rs. 1600
எச்எம்டி கடிகாரங்கள் 500 க்கும் மேற்பட்ட மாடல்களில் கிடைக்கின்றன. விலைகள் ரூ.450லிருந்து ரூ.19,000 வரை
உங்கள் குவார்ட்ஸ் வாட்ச்சுக்கு எச்எம்டி பவர் செல்லையே கேட்டு வாங்குங்கள்.
Mudra:HMT:1369:97:TAM



# வாழவைக்கும் தேர்தலுக்கு ஜே!


வழக்கமாய் சோப்பு, பற்பசை என்று போட்டி போடுகிற விளம்பர ஏஜென்ஸிகள், இப்போது, இன்னொரு கடுமையான போட்டியில் இறங்குவதற்குத் தயாராகிக் கொண்டு இருக்கின்றன. உபயம் : பாராளுமன்ற இடைத்தேர்தல்!

அரசியல் கட்சிகள், தேர்தலுக்காகச் செய்யவிருக்கும் விளம்பரங்களே இந்த ஏஜென்ஸிக்களின் இலக்கு.



இத்தகைய தேர்தல் விளம்பரங்கள், பத்திரிகைகளில் மட்டுமின்றி, சாடிலைட் சானல்கள், தியேட்டர்கள், போஸ்டர்கள், துண்டுப் பிரசுரங்கள், துணி பேனர்கள் என்று பலவித முகங்கள் கொண்டவை.

தேசிய அளவில், விளம்பர நிறுவனங்களால் தீவிரமாய் அணுகப்படுபவை இரண்டு கட்சிகள்தாம். ஒன்று காங்கிரஸ். இரண்டாவது பா.ஜ.க. இரண்டு கட்சிகளிடமும் தேர்தலுக்குச் செலவழிக்க ஏகப்பட்ட நிதி இருப்பதால், விளம்பர ஏஜென்ஸிகள், அவை இரண்டையே குறிவைத்து முயற்சிக்கின்றன!



சென்ற தேர்தலின் போது, அரசியல் கட்சிகள் அனைத்துமாக, பத்திரிகைகளில் சுமார் பத்து கோடி ரூபாய்க்கு விளம்பரங்கள் செய்தன. இந்தத் தடவை தேர்தலில் வேட்பாளர்கள் செலவு உச்சவரம்பு கணிசமாய் உயர்த்தப்பட்டு இருப்பதால், விளம்பர பட்ஜெட் சுமார் முப்பது கோடியைத் தொட்டுவிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது!



இந்தியாவின் பெரிய விளம்பர நிறுவனங்கள் இரண்டு கூறாகப் பிரிந்து, ஒரு தரப்பு காங்கிரஸ், இன்னொரு தரப்பு பா.ஜ.க. என்று வளைத்துப் போட முயன்று கொண்டிருக்கின்றன. ஒரு சில பிரபல நிறுவனங்கள், பிஸினஸில் கட்சி பேதம் எதற்குப் பார்க்க வேண்டும் என்ற பரந்த(!) நோக்கத்துடன், இருதரப்புக்கும் முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் கேள்வி!

ஏன் இத்தனை பகீரத முயற்சி?

"வழக்கமாய் ஓர் ஆண்டுக் காலத்தில் செய்கிற பிஸினஸை, இந்த எலெக்ஷன் விளம்பரங்கள் மூலமாகக் குறுகிய காலத்தில் பார்த்து விடலாம்! இவையெல்லாவற்றுக்கும் மேலாகத் தாங்கள் விளம்பரம் செய்கிற கட்சி, ஆட்சியைப் பிடித்து விட்டாலோ, கேட்கவே வேண்டாம்!

— கௌதம்



கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com
ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in

## தடி வழியில் தாடி

சோனியா தேர்தல் களத்தில் இறங்குகிறார் என்ற செய்தி வந்த சூட்டோடு, 'பிரியங்கா போட்டியிடுகிறார்', 'சேஷன் காங்கிரஸ் டிக்கெட்டில் நிற்கிறார்,' 'சரத்பவார் புதிய கட்சி துவக்குகிறார்' என்பன போன்ற புரளிகள் தூள் கிளப்பின! இவை உண்மையோ பொய்யோ, சோனியாவின் வருகையால் படுத்துக் கிடந்த உள்ளூர் காங்கிரஸ் எழுந்து உட்கார்ந்திருப்பது நிஜம்! அதை நிற்க வைக்க வேண்டும் என்ற நப்பாசையில், ''நேரு குடும்பத்திற்கொரு சோனியா போல், காந்தி பரம்பரையையும் வளைத்துப் போட்டு விட்டால்...'' என்று கணக்கிட்டு, மஹாத்மாவின் பேரனான துஷார் காந்தியைப் பிடித்திருக்கிறார்கள். நியூயார்க் டைம்ஸ் நடத்தும், 'சென்ற நூற்றாண்டின் சிறந்த மனிதர்' போட்டிக்கு, தன் 'தாத்தாவுக்காகப் பிரசாரம் பண்ணிக் கொண்டிருந்தவரை அழைத்து வந்து, தேர்தல் களத்தில் இறக்கப் போகிறார்களாம். 'தடி' வைத்தவர் சாதித்ததை இந்த 'தாடி' வைத்தவர் சாதிப்பார் எனக் காங்கிரஸார் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

# காங்கிரஸ் ஒரு 'அலிக்கட்சி!

# -தாக்குகிறார் தாக்கரே!


## சூடு பிடிக்கும் பிரசாரம்!

''நிரந்தர நாயகன் பிஸினஸெல்லாம் நடக்காது; ஐந்து வருடத்துக்கொருமுறை உட்கட்சித் தேர்தல் நடத்தியே தீரவேண்டும்'' எனத் தேர்தல் கமிஷனர் கிருஷ்ணமூர்த்தி மீண்டும் முருங்கை மரத்தில் ஏறினாரோ, 'தேர்தல் சமயத்தில் எலெக்ஷன் கமிஷனருடன் வம்பு வளர்த்தால் தகராறாகிவிடும்' என்ற ஞானோதயத்தில், இந்த நிபந்தனையையும் 'under protest' ஏற்றிருக்கிறார் தாக்கரே! ''மக்களாட்சியாயிது? கொடுங்கோலாட்சி தோற்றது'' என முணுமுணுக்கிறார். ஆனால் காங்கிரஸைத் தாக்கும்போது, உரத்த குரலில் உற்சாகமாகப் பொழிகிறார். ''தேர்தல் பிரசாரத்தைப் பற்றி இனி கவலையில்லை! அதுதான் சோனியா வந்து விட்டாரே'' என்று ஒரு தலைவர் (கேசரி) கூறுகிறார்! இவர்களெல்லாம் ஆண்பிள்ளைகள்தானா? ஒரு பெண் பிள்ளையை நம்பிக் கொண்டு ஒரு கட்சி இயங்குகிறதென்றால்... அது ஆளும்கட்சியாக முடியாது; வெறும் 'அலிக் கட்சிதான்' என விமர்சிக்கிறார். பி.ஜெ.பி. காரியதரிசி பிரமோத்மஹாஜன், ''தைரியமிருந்தால் ஒண்டிக்கு ஒண்டி உங்கள் சோனியாவை எங்கள் வாஜ்பாயியுடன் ஒரே மேடையில் மோத விடுங்கள்! பொதுக் கூட்டமோ, தூர்தர்ஷனோ, எங்கேனும் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு இருவரையும் பதிலளிக்கச் சொல்லுங்களேன் பார்க்கலாம்? யார் புலி, யார் எலி என்பது தெரிந்து விடும்!'' என சவால் விடுகிறார்! கூவல்... அறைகூவல்... தேர்தல் சூடுபிடிக்கத் துவங்கி விட்டதே!



• வாஜ்பாய்





• பால்தாக்கரே

• சோனியா

## கோடி வேண்டாம், கேடி போதும்!

**கை**ர்நார் இடி மன்னன் என்றால் சந்திர சேகர் இடிச் சக்கரவர்த்தி! தர்ணா முனிசிபல் கமிஷனரான இவர், சாலைகளை விரிவுபடுத்து கிறேன் பேர்வழி என அந்த வட்டாரத்தையே ஒரு கலக்கு கலக்கி இருக்கிறார். சட்டவிரோத மான ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் பார பட்சமில்லாமல் இடித்துத் தரைமட்டமாக்கி, நிமிட நேரத்தில் இடிபாடுகளை அப்புறப்படுத்தி யும் விடுகிறார். ரோட்டோரக் கடைகள், பல வேகஸ் பார்கள், ரெஸ்டாரண்டுகள் எல்லாமே கோவிந்தா! சில பில்டர்கள் இவரைத் தனிமை யில் அணுகி, "ஐந்து கோடி தருகிறோம், ஊரைப் பார்க்க ஓடுங்கள்" என்றனராம். அதற்கு இவர், "எதற்கு வீண் செலவு? 5 கோடிக்குப் பதில் ஒரு கோடியை ஏதாவது ஒரு டானுக்குக் கொடுத்து, என்னைத் தீர்த்துக் கட்டச் சொல்லுங்களேன்; அது சுலபமாயிருக்கும்" என்றாராம்! சரியான இடி!

## ஏமாறாதே, ஏமாற்றாதே!

**ப**ணத்தைப் பல மடங்காக்குவதாக விளம் பரப்படுத்தும் டுபாக்கூர் கம்பெனிகள், 'கல்ஃப்' ஆசை காட்டும் ஏஜெண்டுகள், சொந்த வீட்டுக் கனவுகளை நனவாக்கப் புறப்பட்டிருக்கும் பில்டர்கள்; "வங்கி ஃப்ராடுகள்" - இவற்றால் ஏமாறாமலிருப்பதற்கு, பொது மக்களுக்கு 55 உபயோகமான டிப்ஸ்களை வழங்கி, "இனி ஏமாற மாட்டோம்" எனப் புது வருடத் தீர்மா னம் நிறைவேற்றும் அறிவுரையுடன், நூதனமான புத்தாண்டு வாழ்த்து அட்டைகளை வெளியிட் டிருக்கிறது மும்பை போலீஸ்! தனது 72 போலீஸ் ஸ்டேஷன்கள் வாயிலாக இந்த வாழ்த்துக்களை எல்லா கம்பெனிகள், குடியிருப்புகள், க்ளப்புகள், சமூக சேவை இயக்கங்கள் முதலியவற்றுக்கு விநியோகிக்கப் போகிறார்களாம். 'சென்ற ஆண்டில் பண மோசடிகள் தொட்ட சிகரங் களைக் கண்டு வெலவெலத்துத்தான், இந்த ஆண்டிலாவது ஏமாளிகளைக் காப்பாற்றியே ஆகவேண்டிய நிர்ப் பந்தத்தில் செயல்பட்டிருக்கிறோம்'' என்கிறார் போலீஸ் கமிஷனர் மென் டோன்ஸா!

## புதிய முகங்கள்

**நா**ற்காலி நுனிகளில், நகம் கடித்து ஊளையிடும் இளசுகள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரிக்க, மும்பை தியேட்டர்களில் "Face off" சக்கைபோடு போடுகிறது! கூடவே நகரின் 'காஸ்மெடிக் சர்ஜன்'களின் பிஸினஸும்! படத்தில், சூப்பர் காம் ட்ரவோல்டாவின் முகம் டான்நிக்கோலஸ் கேஜ் மீதும், டானின் முகம் போலீஸ் மீதும் பொருத்தப்படுவதாகக் காட்டுகிறார்களா? உடனே இவர்களும் தங்களின் இஷ்டநாயகர் களான 'சல்மான்கான்', 'ஆமீர்கான்', 'அக்ஷய் குமார்' முதலானோரின் முகங்களைப் போல் தங்கள் தலைகளில் பொருத்திக் கொள்ளத் துடிக்கிறார்கள். நாயகிகளில் ஜூஹிக்கு டிமாண்டு! "அது ஹைடெக் உடான்ஸ்! 'ரீல்' லைஃபில்லாமல், 'ரியல்' லைஃபில் சாத்திய மில்லை என்றால் லேசில் ஒத்துக் கொள்ள மாட் டேன் என்கிறார்கள்'' என அங்கலாய்க்கிறார் இந்தியன் அஸோஸியேஷன் ஆஃப் காஸ்மெடிக் சர்ஜரியின் பிரசிடெண்ட் விஜய் சர்மா. ஹூம்! ஆசை யாரை விட்டது?

## வெங்காயக் கண்ணீர்

**யா**னை விலை, குதிரை விலைக்கெல்லாம் இப்போது மும்பைக்காரர்கள் அசருவதே யில்லை; வெங்காய விலை என்றால்தான் மயக்கம் போட்டு விடுகிறார்கள். அப்படி, உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டு அசத்துகிறது வெங்காயம்! கிலோ ரூ 19-ல் ஆரம் பித்து, ரூ. 25க்குப் போய், சில 'பாஷ்' இடங்களில் ரூ 27-ல் நிற்கிறது! கேட்டால், காலம் கெட்ட காலத்தில் பேய் மழை, காலம் கடந்த பனி என்கிறார்கள். பருத்தி, திராட்சை எல்லாமே பாதிக்கப்பட, கொத்தவரை, வெண்டைக்காய் விலையேறிக் கிடக்க - 'அட இவையில்லாமல் கூடச் சமாளித்து விடலாம். ஆனால் வடக்கத் திய உணவு வகைகளின் ஆணிவேரான வெங் காயம் இல்லாமல் என்னத்தைச் செய்ய?'' என இல்லத்தரசிகளிலிருந்து ஹோட்டல்காரர்கள் வரை எல்லோருமே வெங்காயக் கண்ணீர் வடிக் கிறார்கள்! ●

— ஜெயஸ்ரீ ராஜ்



# "ஊர்வசிக்கே சிம்மாசனம்!"

**— பானுமதி**

**உங்கள் துறையில், இக்காலத்தில் 'நம்பர் – 1' என்று யாருக்கு கிரீடம் சூட்டி, சிம்மாசனத்தில் உட்கார வைப்பீர்கள்?**

**– அக்கால சூப்பர் ஸ்டாரிணி பானுமதி ராமகிருஷ்ணாவிடம் கேள்வியை முன் வைத்தோம்.**

**சா**வித்திரி, அஞ்சலிதேவி என்று தொடங்கியவர், நம் முகபாவத்தைப் பார்த்து விட்டுப் புன்னகைத்தபடி "இவங்க காலத்தை யெல்லாம் விட்டு விடலாம்னு சொல்ல வந்தேன்" என்றார்.

"ஏதோ டி.வி. புண்ணியத்திலேதான் சினிமாக்களையும், நடிகைகளின் திறமைகளையும் பார்க்கிறேன். மத்தபடி தியேட்டருக்குப் போய், படம் பார்த்து வருஷக்கணக்காகுது" என்றார்.

லட்சுமி, சுஜாதா, சரிதா இவர்களையெல்லாம் டக்கென்று குறிப்பிட்டவர், பிறகு யோசித்தார். ரேவதியின் நடிப்பாற்றல்–முக்கியமாக மௌனத்திலேயே உணர்த்தும் முக பாவங்கள்–பானுமதிகாருவை ரொம்பவும் இம்ப்ரஸ் செய்திருப்பது புரிந்தது.

மிகச் சமீபத்தில் அறிமுகமான கதாநாயகிகள் பற்றிக் கருத்துக் கேட்டபோது, "என்னத்த சார் சொல்றது? சமீபத்திய படங்களை முழுசா நான் பார்த்ததில்லை. அப்படியே பாதி, முக்கால்னு டி.வி.யிலே போட்டால், கதாநாயகி யார்னு கவனிக்கிறதுக்குள்ளே அவங்களை விட்டு கேமரா நகர்ந்திருது. ஆனா அவங்களையும் குறை சொல்ல முடியாது. பொம்மைகள் மாதிரி வந்து, அரைகுறை ஆடைகளோடு அங்கங்களைக் காட்டத்தானே அவங்களைப் பயன்படுத்திக்கிறாங்க? திறமை இருந்தாலும் அதைக் காண்பிக்க ஸ்கோப் எங்கே இருக்கிறது? என்னிடம் அனுப்பச் சொல்லுங்க. அவங்களோட திறமையைப் பட்டை தீட்டிக் காட்டறேன்" என்றார். தொடர்ந்து, "ரெண்டு மூணு படத்திலே

# சினிமாவில் மட்டுமா நடிக்கிறோம்?

**— ஊர்வசி**

*சிறந்த நடிகையாக பானுமதி ராமகிருஷ்ணா தன்னைத் தேர்வு செய்ததை அறிந்து கொண்டதும் ஊர்வசிக்கு ஒரே சந்தோஷம்! "குறையே சொல்ல முடியாத நடிகையாச்சே அவங்க. குரல், நடிப்புத் திறமை எல்லாவற்றிலுமே மற்ற நடிகைகளுக்குப் பொறாமை உண்டாக்கும்படியா இருக்குமே! காதல் காட்சியிலே கூட ராணி போல கம்பீரமாக "நான் இப்படித்தான்; என்னை ரசிகர்கள் இப்படியேதான் ஏத்துக்கணும்"னு உணர்த்தி, அப்படியே நடத்திக் காட்டினவங்களாச்சே! அவங்க என்னைப் பாராட்டினதை ஒரு மிகப் பெரிய விருதாகவே நினைக்கிறேன்" என்றார். பேட்டி தொடர்ந்தது...*

**● மூத்தானை முடிச்சு காலகட்டத்துக்கு அப்புறம் ரொம்ப நாள் தமிழ் சினிமாவிலே உங்களைக் காணோம். இப்போ மீண்டும் ஒரு புதிய வேகத்தோடு ரீ எண்ட்ரீ ஆகியிருக்கீங்க. நடுவிலே ஏன் அந்த இடைவெளி?**

ஐம்பது படங்கள் செய்த பிறகு ஒரு நடிகைக்குக் கிடைக்கக் கூடிய ரோல் 'பரிமளா'வுடையது! அந்தப் பாத்திரத்தை பாக்யராஜ் தொடக்கத்திலேயே எனக்குக் கொடுத்தார். கவர்ச்சி, குணச்சித்திரம், நகைச்சுவை எல்லாமே கலந்த ரோல் அது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக

நடிச்சு நடிப்பில் பக்குவப்பட்ட ஸ்டேஜ் வந்தவுடன், அவளை ஒதுக்கிடுதே பட உலகம்? அடுத்த 'புது' வரவு இல்லே, அவங்களுக்கு அவசியமாயிடுது!''

பிறகு எஞ்சியுள்ளவர்களில், நினைவுக்கு வந்த திறமைசாலிகளை அலசினார்.

''பானுப்ரியா ஓ.கே. குஷ்பு கூட நல்லாத்தான் செய்யறா. சின்னப் பொண்ணா இருந்தாலும் மீனாவும் திறமைசாலி. சில குறிப்பிட்ட வகை ரோல்களிலே சுகாசினி நல்லா நடிப்பா. படாபட் ஜெயலட்சுமி அற்புதமா நடிச்சவ!''– இப்படியெல்லாம் கூறினாலும், அழுத்தமாக அவரிடமிருந்து வெளி வந்த நடிகையின் பெயர் ஊர்வசி!

''ஊர்வசி நடிப்பில் என்னைக் காப்பியடிப்பதாகப் பலரும் சொல்றாங்க. அப்படியிருந்தாலும், அது எனக்குச் சந்தோஷம்தான். இக்கு வாய்க்காரியா அவ ஒரு படத்திலே நடிச்சது அருமை! ''ஒத்தையிலே நின்னவரே'' (வனஜா கிரிஜா) பாட்டுக்கு வெகு அற்புதமா நடிச்சிருந்தா. அருமையா, முகத்தைப் பேச வக்கறா. என் முழுப் பாராட்டுகள், அவருக்குத்தான்!''

அதுக்கப்புறம் என்னை புக் செய்த தமிழ்ப் படங்களில் எல்லாம் என் கவர்ச்சியையே பயன்படுத்திக்க நினைச்சாங்க. அதிலே எனக்கு இஷ்டமில்லே. மலையாளத்திலே மிக நல்ல வாய்ப்புகள் கிடைத்தன. 'பிறகு தெலுங்குப் படங்கள். அப்புறம் கன்னடத்தில் நல்ல ஸ்கோப் உள்ள சில வாய்ப்புகள் கிடைத்தன. அதனாலே கன்னடத்திலும் மலையாளத்திலும் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினேன். முக்கியமாக, 'மழவில்காவடி' படம் எனக்கு ஒரு நல்ல திருப்புமுனை. சிறந்த நடிகை என்ற மாநில விருதைப் பெற்றுத் தந்தது.

● பலவிதத் திறமைகளை வெளிப்படுத்தினாலும் உங்களைக் கவர்ச்சியாகப் பயன்படுத்திக் கொள்ளத்தான் தமிழ்த் திரையுலகத்தினர் விரும்பினதாக சொல்கிறீர்கள். பொதுவாகவே நடிகைகள் என்றால் இளப்பமாகக் கருதும்



போக்கு இங்கே உண்டு. இப்போது அது மாறியிருக்கிறதாக நினைக்கிறீர்களா?

ஒரு நடிகை அழகாக இருந்து, கவர்ச்சிகரமான ஆடை தனக்குப் பொருந்துவதாக நினைத்து அணிந்து கொண்டால், அவளை நான் குற்றம் சொல்ல மாட்டேன். அது அவரவர் விருப்பம். ஆனால் வேண்டா வெறுப்பாக இயக்குநரின் வற்புறுத்தலால்தான் அப்படித் தோன்றுவதாக ஒரு நடிகை சொன்னால் அது அபத்தம்! நடிகைகளைப் பற்றி இமேஜ் குறைந்திருக்கிறதென்றால், அதற்கு அவர்களும் ஒரு முக்கியக் காரணம். ''இந்த உடையை நான் அணிந்து கொள்ள மாட்டேன்; இந்த ஆபாச வசனத்தை நான் பேசமாட்டேன்'' என்று ஒரு நடிகை கூறினால், அவள் உயிருக்கா சேதம் வந்து விடும்? ஒரு படம் நஷ்டம். அவ்வளவுதான். கண்ணியத்தைக் காத்துக் கொள்வது என்பது நம் கையில்தான் இருக்கிறது.

● கண்ணியக் குறைவாக இருக்கிறது என்று கூறி ''கறவை மாடு மூணு காளை மாடு ஒண்ணு'' பாடல் காட்சியில் நடிக்க ரேவதி முதலில் மறுத்தது தெரியும். அதே பாடல் காட்சியில் பங்கேற்ற உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

ரேவதி மட்டுமல்ல. அவருடன் நானும் ரோகிணியும் சேர்ந்தே சென்று இதற்காக இயக்குனர் சிங்கிதம் சீனிவாசராவிடம் உரிமையாக சண்டை போட்டோம். கடந்த பத்து வருடங்களில் 'மகளிர் மட்டும்' போன்ற டூயட் இல்லாத, விரசம் இல்லாத படம் தயாரிக்கப்பட்டதில்லை. அப்படிப்பட்ட ஒரு படத்தில் இது போன்ற பாடலா என்பதுதான் எங்கள் ஆதங்கமாக இருந்தது. ''இதில் நாசர் ஏற்றிருப்பது மகா மட்டமான ஒரு பாத்திரம். அவருடைய நினைப்பாகத்தான் அந்தப் பாடல் வரிகள் உள்ளன. மற்றபடி, படமாக்கும்போது ஒரு துளி விரசமும் அந்தப் பாடல் காட்சியில் தெரியாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று வாக்களித்தார் இயக்குநர். அந்த வாக்கைக் காப்பாற்றியும் விட்டார்.

ஆனால் 'சுப்ரமண்யசாமி' படத்தில் ஒரு கசப்பான அனுபவம். காவடி எடுத்துக் கொண்டு பக்தர்கள் செல்லும் காட்சியில் பாடல் வரிகளும், சில அசைவுகளும் திணிக்கப்பட்டவையாகவும், பக்தர்கள் மனதைப் புண்படுத்துவதாகவும் இருந்தது. கவர்ச்சி வேண்டுமென்றால் அதை நேரடியாகவே காட்டிவிடலாமே? பக்தியுடனும், கடவுளுடனும் அதைச் சம்பந்தப்படுத்துவானேன்?''

● நீங்கள் கொஞ்சம் அலட்சியமாக நடித்திருந்தும் உங்களுக்குப் பெரும் புகழ் வாங்கிக் கொடுத்த படம்னு எதைச் சொல்வீங்க?

''நடிப்புன்னு இல்லை... எதுவுமே ஈஸியான விஷயம் இல்லை... ஆனாலும் மைக்கேல் மதன காமராஜன், நான் காஷுவலா செய்த படம்னு சொல்லலாம். வனஜா கிரிஜாவுக்கும் நான் பெரிதாக ஹோம் ஒர்க் செய்ததில்லை. அதிலே வரும் ''ஒத்தையிலே நின்னவரே'' பாட்டை நான் பாடியதாகவே பலரும் நினைச்சுக்கிட்டிருக்காங்க. (பாடியது சித்ரா). மகளிர் மட்டும் படத்திலே கூட, கொடுத்த பங்கைச் செய்தேன். அவ்வளவுதான். ஆனால் இந்த மூன்று படங்களும் எனக்கு அளித்திருக்கும் புகழ், எனக்கு பிரமிப்பைத் தருது!

● உங்கள் திறமையை உணர்ந்து, தமிழில் உங்கள் மறுபிரவேசத்திற்குப் பாதை அமைத்ததில் கமலஹாசனுக்கு முக்கியப் பங்குண்டு. சமீபத்திய திரையுலகப் பிரச்னையில் அவருக்கெதிரான பல கருத்துகளை பளிச்சென்று சொல்ல எப்படி முடிந்தது?

''நான் ஒரு தரப்பாகப் பேசவில்லை. எதிரணி என்று போகாமல் எங்கள் பக்கமே கமல் இருந்திருக்க வேண்டாமா என்ற ஆதங்கத்தில்தான் என் கருத்துகளைத் தெரிவித்தேன். அவருக்கென்று சில நியாயங்கள் இருந்திருக்கக் கூடும்... மற்றபடி நான் என்றுமே அவரது பரம ரசிகை.

● கேமராவுக்கு வெளியே நடிப்பதுண்டா?

சந்தேகமில்லாமல்! முக்கியமான வேலை செய்யும்போது தொலைபேசி குறுக்கீடாக ஒலிக்கும். உங்க தொலைபேசிக்குத்தான் காத்துக்கிட்டிருந்தேன்'னு கூசாமல் புளுக வேண்டி வரும். ஏதாவது விழாவுக்குப் போனா நமக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காத ஒரு நபர் பக்கத்திலே உட்கார்ந்திருந்தாலும் ஏதோ நெருங்கிய நண்பர் போல, அவருடன் வலிந்து சிரிப்போடு பேசித் தொலைக்க வேண்டும். நடிகர்கள் மட்டுமல்ல, நாம் எல்லோருமே தினசரி வாழ்க்கையில் அற்புதமாக நடிக்கக் கூடியவர்கள்தானே?

● நடிப்பதைத் தவிர வேறு என்ன நீண்ட கால திட்டம் வைத்திருக்கிறீர்கள்?

சென்னையிலிருந்து கொஞ்சம் ஒதுக்குப்புறமாக ஒரு 'இயற்கை சிகிச்சை மையம்' கட்டணும்னு ஆசை. முக்கியமாக ஆயுர்வேத சிகிச்சை முறை அங்கே இருக்கும். இன்றைய வேகமான வாழ்க்கையில் பத்துப் பதினைந்து நாளெல்லாம் எங்கோ தங்கி, இது போன்ற சிகிச்சையை எடுத்துக் கொள்வது பலருக்கும் சாத்தியமில்லை என்று தோன்றுகிறது. சனிக்கிழமை இங்கு சென்றால், திங்கள் காலையில் வழக்கமான வாழ்க்கைக்குத் திரும்பும்படி இருக்க வேண்டும். அப்படி ஒரு திட்டம் கைவசம் இருக்கிறது. ○

பேட்டி : **ஜி.எஸ்.எஸ்.**

அட்டை வண்ணப்படம், படம்: **யோகா**

## மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

| படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம் | கௌரவமான வருமானம் | மரியாதையான சேவை |
|---|---|---|

**வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)**

30 தினம் அதற்கு மேலும் 16% P.A.
எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம்.
புதுப்பிப்பதற்காக வரவேண்டிய அவசியமில்லை.

**மாதப் பென்ஷன் திட்டம் (TM)**

| டெபாசிட் | காலம் | மாதவட்டி ரூ. |
|---|---|---|
| 5000 | 1 வருடம் | 100 |
| 10000 | 1 வருடம் | 200 |

**சேமிப்பு கணக்கு: 16%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.**

**தலைமை காரியாலயம்:** "வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம், Next to DAV School, T. நகர், சென்னை - 17.

கிளை: 11 B, ஒர்க்ஸ் ரோடு, சக்தி கல்யாண மண்டபம் அருகில், நியு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.

கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

மும்பை: 1, தீபால் அபார்ட்மென்ட்ஸ், ஜெய் ஹிந்த் காலனி, குப்தேரோடு, டோம்பிவ்லி மேற்கு - 421 202. Ph: 482448

**உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.**

**மத்திய நிதி மந்திரி என்ன சொல்கிறார்?**

ஜனங்கள் தங்கள் சேமிப்பை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, சர்க்காரின் திட்டங்களிலோ போடலாம், மேலும் பணம் இருந்தால் கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்யலாம்.
ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை 28.12.96. பக்கம் - 6.

# AAAAA Trust (Regd No. 1488)

**ஆல் வேல்டு அக்கவுண்டிங்க் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)**
**All-World Accounting Administrative And Technological Academy.**

# In Education from 1979

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, MCA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, GRE, TOEFL, Business Technology, etc

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர். 200 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள். துபாய், ஷார்ஜா, அபுதாபி, குவைத், பிலிப்பைன்ஸ், ஓமன், சவுதி அரேபியா, சிங்கப்பூர், அமெரிக்கா, பங்களாதேஷ் போன்ற வெளி நாடுகளிலிருந்தும் படிக்கின்றனர்.

*மேலும்* **Spoken English course 3 levels or master of success course** *இலவசம்.*

**AAAAA — பாதுகாப்பின் சின்னம்.**

Prof. V. **விவேகானந்த்**
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB (All India First), EKSAMD (Germany) (Distn), B.L.
**Managing Trustee.**

Dr. **பரமேஸ்வரி**, MBBS,
**Managing Trustee.**

**சொத்து பாதுகா[illegible]த வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.**

**Sunday Working Day**

(TM) :Trade Mark

# கோச்சைக் கொடுங்கள்! கொடி நாட்டிக் காட்டுகிறேன்!

"ஒரு காலத்தில் நானும் இவரும் ஒன்றாக ஆடியிருக்கிறோம் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் காலம் வந்துவிடும் போலிருக்கிறது!" என்கிறார் பிரபல டென்னிஸ்காரர் ரமேஷ் கிருஷ்ணன்.

"உலக அளவில், விளையாட்டுத் துறையில் இந்தியாவின் எதிர்கால வெற்றியே இவர் கையில்தான் இருக்கிறது!" என்கிறார் இந்திய டென்னிஸ் அணியின் கேப்டன் நரேஷ் குமார்.

ஆனால் இத்தனைப் புகழ் மாலைகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் லியாண்டர் பயஸ் பார்ப்பதற்கும் பழகுவதற்கும் குழந்தை போலவே இருக்கிறார். "என் வெற்றி என்று எதுவுமில்லை. எல்லாம் இந்தியாவின் வெற்றி!" என்று தன்னடக்கத்தோடு குறிப்பிடுகிறார். இந்த டென்னிஸ் சூப்பர் ஸ்டார் சமீபத்தில் சென்னை வந்திருந்தபோது கல்கிக்குப் பிரத்தியேகப் பேட்டி அளித்தார்.

**"உங்களின் இந்த வெற்றிக்கு அடித்தளமிட்டவர்கள் யார்?"**

"முதலில் என் பெற்றோர். என்னை டென்னிஸ் விளையாடச் சொல்லி, உற்சாகப்படுத்தியவர்கள் அவர்கள்தாம். பிறகு டென்னிஸின் நுணுக்கங்களை எனக்குப் போதித்த அமிர்தராஜ் சகோதரர்களை மறக்க முடியாது. விஜய் அமிர்தராஜ், தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அவர்தான் என் குரு. பிறகு ரமேஷ் கிருஷ்ணன். ரமேஷும் நானும் முதலில் இரட்டையர் ஆட்டங்கள் ஆடியிருக்கிறோம். இரட்டையர் ஆட்டத்திலுள்ள நுணுக்கமான சில விஷயங்களை போதித்தவர் அவர்தான். அவருக்குப் பின் என்னோடு இப்போது ஆடும் மகேஷ் பூபதி... யப்பா! பூபதி எனக்கு ஜூனியராக இருந்தாலும் என்னை உற்சாகப்படுத்துவதில் மேட்சின்போது பிரத்யேக கவனம் எடுத்துக் கொள்வார். பூபதிக்கு நிகர் அவர்தான்! பிறகு ரசிகர்களுக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும்!"

**"ஒலிம்பிக்கில் பதக்கம் வாங்கும்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?"**

"கொஞ்சம் வருத்தம்தான். ஏனெனில் அரை இறுதியில் அகாஸியை வென்றிருந்தால் ஒரு வேளை தங்கமே வென்றிருக்கலாமே? வெண்கலம்தான் கிடைத்ததென்றாலும் பிறகு தேற்றிக் கொண்டேன். ஒரு காலத்தில் என் தந்தையும் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவர். இன்று நானும் வென்றேன். இது எனக்கும் என் நாட்டுக்கும் பெருமை அல்லவா? இப்படி என்னை நானே உற்சாகப்படுத்திக் கொண்டேன்."


**"இரட்டையர் ஆட்டத்தில் உலகைக் கலக்கினாலும் நீங்கள் ஏன் ஒற்றையர் ஆட்டங்களில் சோபிப்பதில்லை?"**

"முதலில் நல்ல 'ஸ்பான்ஸர்' வேண்டும். ஏனெனில் தனிப்பட்ட முறையில் ஒரு சிறந்த கோச் இல்லாமல் இது சாத்தியமில்லை. ஒரு நல்ல கோச் அமர்த்திக் கொள்ள வேண்டுமென்றால் அவருக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் தெரியுமா? உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் சென்ற (1997) வருடம் நான் சம்பாதித்த மொத்த தொகை போல் இரு மடங்கு தரவேண்டி இருக்கும். பல கோடிகள் ஆகும்! அத்தனை பணத்துக்கு நான் எங்கே போவேன்? நீங்கள் உலகப் புகழ்பெற்ற வீரர்கள் அகாஸி, பெக்கர், சாம்ப்ராஸ், ஸ்டெப்பி, செலஸ் ஆகியோரைக் கவனியுங்கள். அவர்கள் ஒரு மேட்சில் தோற்றால் போதும், உடனே கோச்சை மாற்றிவிடுவார்கள். அந்த அளவுக்கு கவனம் செலுத்த வேண்டும்.

பெக்கர் தமது பன்னிரண்டு வருஷ சர்வீஸில் நான்கு கோச்களை மாற்றி இருக்கிறார் தெரியுமா? அதனால்தான் அவரால் அத்தனை வெற்றி பார்க்க முடிந்தது. இது தவிர பயிற்சிக்கு, நம் நாட்டில் நல்ல ஆடுகளங்கள் இல்லை. எல்லாம் சரியானால் நம்மாலும் உலக அளவில் பிரமாதமாகச் சாதிக்க முடியும்."

**"கோச்சால் மட்டும்தான் வெற்றி தீர்மானமாகிறதா? நம்ப முடியவில்லையே?"**

"நம்பித்தான் ஆக



வேண்டும். ஏனெனில் அவர்கள்தாம் எங்கள் மைனஸ் பாயின்ட்களைக் கண்டு பிடித்து சீர்திருத்துகிறார்கள். ஆடும்போது நாம் எங்கு, எப்படி தவறு செய்கிறோம் என்பதை அவர்கள் கவனித்துத் திருத்தினால்தானே உண்டு? அதே போல எதிராளியின் மைனஸ் பாயின்ட்களையும் கவனித்து நமக்குச் சுட்டிக் காட்டுவார்கள். அது நமது வெற்றிக்கு உதவும். உண்மையில் இதற்கெல்லாமாகச் சேர்த்து, அந்தந்த மேட்சில் நாம் வெல்லும் பரிசுத் தொகையில் பாதிக்கு மேல் கோச்சுக்குக் கொடுக்க வேண்டி இருக்கும்."

**"நீங்கள் இந்தியாவில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் வெளிநாடுகளில்தான் அதிகம் ஜெயிக்கிறீர்கள் என்றொரு கணிப்பு இருக்கிறதே?"**

"அதெல்லாமில்லை. வெளிநாடுகளில்தான் போட்டிகள் அதிகம் நடக்கின்றன. இந்தியாவில் நடப்பது டேவிஸ் கோப்பைப் போட்டி மட்டும்தானே? அதனால் அப்படித் தெரிகிறது."

**"நீங்கள் வியக்கும் டென்னிஸ் வீரர்?"**

"பெக்கர்தான்! எத்தனை முறை தான் தோற்கிற நிலையிலிருந்து போராடிப் போராடி ஜெயித்திருக்கிறார்! 0 - 2 என்று முதல் இரண்டு செட்களில் தோற்று இருப்பார். பிறகு படிப்படியாக ஜெயித்து 3 - 2 என்று வென்றுவிடுவார்! இந்தப் போராட்டக் குணத்துக்காகவே எனக்கு அவரைப் பிடிக்கும்! பெக்கருக்கு அடுத்தது மகேஷ் பூபதிதான்! இவருக்கும் அதே போராடும் வெறி! இதனால் தான் எங்கள் ஜோடி அத்தனை வெற்றி பெற முடிந்தது."

**"உங்களை நீங்களே விமர்சிக்க முடியுமா?"**

"நான் இன்னும் ஒழுங்காக விளையாட வேண்டும். நிறைய கற்க வேண்டும். 97ல் அடைந்த வெற்றிகளையெல்லாம் இப்போதே மறந்து விட்டு, புத்தம்புதிதாக ஆடத் தொடங்க வேண்டும்."

**"உங்கள் லட்சியம்?"**

"விம்பிள்டனில் ஜெயிப்பது! அதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். பயிற்சி அதிகம் வேண்டும். உலக டென்னிஸ் சரித்திரத்தில் இந்தியாவின் பெயரை அழுத்தமாகப் பதிக்க வேண்டும்!"

பேட்டி : **நந்தினி**
படம் : **உமாமணி**

# பத்திரிகையாளருக்கு விருது!

**சமீப் குமார் தாஸ். அஸ்ஸாம் மாநிலத்தின் சில்சார் பகுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர். அஸ்ஸாமி, பெங்காலி, இந்தி பத்திரிகைகள் பலவற்றுக்கும் எழுதுகிற துணிச்சலான 37 வயது இளைஞர். அகில பாரதீய வித்யார்த்தி பரிஷத் என்ற மாணவர் அமைப்பு 1991-ம் ஆண்டு முதல் எழுத்து மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பத்திரிகையாளருக்கு வழங்கும் தேசிய விருது, இவருக்குக் கிடைத்துள்ளது. சென்னை வந்திருந்த சமீப் குமார் தாஸுடன் ஒரு சந்திப்பு :**

"நீங்கள் பத்திரிகையாளரானது எப்படி?"


"கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, எங்கள் மாநிலத்தின் ஒரு பகுதியில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டது. வெள்ள நிவாரணத்துக்காக அனுப்பப்பட்ட நூறு குவிண்டால் அரிசியில் ஒரு சிறு பகுதியை மட்டும் மக்களுக்கு வழங்கிவிட்டு, மீதியை அதிகாரிகள் பங்கு போட்டுக் கொண்டு விட்டார்கள்! மக்களிடம் பேசி, முழு விவரம் அறிந்தபோது, அதிர்ச்சியடைந்தேன்! அங்கே வந்த ஒரு பத்திரிகையாளரிடம் எதேச்சையாக நான் இதைக் கூற, அவர் தன்

# பதினெட்டுப் பெண்களை மீட்க உதவியவர்!

ஆசிரியரிடம் என்னை அழைத்துப் போனார். பத்திரிகை ஆசிரியர், எனக்குத் தெரிந்த விவரங்களையெல்லாம் எழுதித் தரச் சொன்னார். நான் எழுதித் தந்ததை ஒரு புலனாய்வுக் கட்டுரையாக வெளியிட்டார். அது அரசின் கவனத்தைக் கவர, விசாரணை நடத்தப்பட்டது. அதிகாரிகளின் கையாடல் வெளிச்சத்துக்கு வந்தது. அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். இதுதான் பத்திரிகைத் துறைக்கு நான் வரக் காரணமாய் அமைந்தது!"

பல்வேறு பத்திரிகைகளிலும் பணி புரிந்திருக்கும் சமீப் குமார் தாஸின் அனுபவங்கள், திரில்லிங்கானவை. இந்தியா பங்களாதேஷ் எல்லைப்புற கிராமங்களிலிருந்து இந்திய முஸ்லிம் பெண்களை, பங்களாதேஷுக்குக் கடத்திக் கொண்டு போய், அங்கிருந்து அரபு நாடுகளுக்குக் கொண்டு போய் விற்கிற 'பிசினஸ்' பல வருடங்களாய் பெரிய அளவில் நடந்து வருகிறது. இதை அறிந்து, புலனாய்வு செய்ய சமீப் அங்கே போனார். மக்களிடம் பேசி, பல திடுக்கிடும்

• சமீப் குமார் தாஸ்



விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தபோது, ஒரு சிலர் இவரை அணுகி, மிரட்டினார்கள். இவர் பயப்படாமல் புலனாய்வைத் தொடர்ந்தபோது, 'உன் புலனாய்வுப் பணியை மூட்டை கட்டிப் போட்டுவிட்டு, நீ மட்டும் பத்திரமாய் ஊர் போய்ச் சேர்! உனக்கு, இதனால் என்ன பயன்?' என்று கூறி, பெருந்தொகை கொடுத்து வாயை அடைக்க முயன்றார்கள் சிலர். பலனில்லை! கடைசியில், 'சமீப் குமார் தாஸ் தாம் ஒரு சி.பி.ஐ. ஆபீஸர் என்று




• சிறந்த பத்திரிகையாளருக்கான விருது பெறுகிறார்...

சொல்லிக் கொண்டு, பலரையும் மிரட்டிப் பணம் பறிக்கிறார்' என்று பொய்ப் புகார் கூறி, மேலிடத்திலிருந்து பிரஷர் கொடுத்து இவரைக் கைது செய்து, ஜெயிலில் அடைத்து விட்டார்களாம்! முதலில் ஜாமீனும் மறுக்கப்பட்டது.

இதற்குள், பெண்கள் கடத்தப்படுவது குறித்து சமீப் எழுதிய இரண்டு கட்டுரைகள் பத்திரிகையில் வெளியாகி, பரபரப்பூட்டின! இனியும் இவனை கோர்ட், கேஸ் என்று இழுத்தால், தங்கள் வண்டவாளங்கள் கோர்ட்டில் வெளியாகிவிடும் என்று பயந்த கடத்தல் தலைவன், புகாரை வாபஸ் பெற, வழக்கு தள்ளுபடியாகி, சமீப் விடுதலையானார்! அதன் பின்பும் இந்த விஷயம் குறித்து அவர் எழுதுவதை நிறுத்தவில்லை.

"போலீஸ் துறையிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். எனக்குப் பல சமயங்களில் அவர்களே தகவல் கொடுத்து, எழுதுவதற்கு உற்சாகப்படுத்தியுள்ளனர்!" என்கிறார் சமீப்.

ஒருதடவை பதினெட்டு பெண்களை ஒரு குறிப்பிட்ட நாளில் கடத்தப் போகிற செய்தி கிடைத்து, தமது புலனாய்வு மூலம் உறுதிப்படுத்திக் கொண்டார். ஆனால் பத்திரிகையில் உடனே அதை எழுதாமல் போலீஸ் அதிகாரிகளிடம் முழு விவரத்தையும் சொல்லி விட்டார். பத்திரிகையில் எழுதினால் உஷாராகி, திட்டத்தைத் தள்ளிப்போட்டு, கடத்தலை நடத்திவிடுவார்கள் என்பதால் இந்த ஏற்பாடு.

சமீப் சொன்னபடியே, அந்தக் குறிப்பிட்ட தினத்தில் போலீஸ் உஷாராக இருந்து, கடத்தல் கும்பலைப் பிடித்து பதினெட்டுப் பெண்களையும் மீட்டது! அதன் பின் அந்த இன்ஸ்பெக்டர் சொன்னது, தம் புலனாய்வு இரண்டையும் சேர்த்து இவர் பத்திரிகையில் எழுத, அந்த போலீஸ் அதிகாரிக்குப் பதவி உயர்வு கிடைத்தது!

சிவப்பு விளக்குப் பகுதி ஒன்றில் ரெய்டு செய்யப் போன சில போலீஸ்காரர்கள், வந்த கடமையை நிறைவேற்றாமல், அந்தப் பெண்களைப் பயன்படுத்திக் கொண்டதாகத் தகவல் வர, நேரடியாய்ப் புலனாய்வில் இறங்கி உண்மைகளைப் புட்டுபுட்டு வைத்து, போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கே சவுக்கடி கொடுத்த அனுபவமும் சமீப்புக்கு உண்டு.

"உங்களுக்குத் திருமணமாகி விட்டதா? உங்களது புலனாய்வு வேலை குறித்து மனைவி பயப்படுவாரா?" என்று கேட்டோம்.

"திருமணமாகி விட்டது. என்னை என் மனைவி தடுப்பது இல்லை. அதுமட்டுமில்லை; உற்சாகமூட்டுவாள்! இந்த விருது பற்றிய அறிவிப்பு பத்திரிகையில் வந்தபோது, நான், அதை சீரியஸாய் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்தான் கண்டிப்பாய் விருதுக்கு நம் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் என்று கூறி, என் ரிப்போர்ட்களை எல்லாம் பிரதியெடுத்து, அப்ளிகேஷனைப் பூர்த்தி செய்து, அனுப்பி வைத்தார். உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், என் மனைவி 'சமிஸ்தா'தான் எனக்கு இந்த தேசிய விருதைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்!" ●

சந்திப்பு : **கௌதம்**

# இன்று வாழ்வோம் வா!

2

பத்மா ரவிசங்கர்

**போன வாரம்**

**அமைதியான, அன்பான குடும்பத் தலைவன் ஜீவா. முன்னாள் இந்திய உளவாளி. ஆனால் அவன் குடும்பத்தை யாரோ உளவு பார்ப்பது தெரிகிறது. கொலை மிரட்டல் வருகிறது. யார்? எதற்கு?**

தி. நகரிலிருந்து திரும்பினார்கள். அலர்ட்டான ஜீவா கண்களுக்கு, வழியில் ஏதும் தப்பிதமாகத் தென்படவில்லை. அவன் மவுனமாகவே வந்தான். என் உயிர் எவன் கையிலாம்? மிரட்டல்தான். ஏன் என்பதுதான் புரியவில்லை...

காரிலேயே சடுதியில் உறங்கி விட்டிருந்த கௌதமை பூ மாதிரி தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினான். இன்னமும் அவன் கை அந்தப் பொம்மைத் துப்பாக்கியை இறுகப் பற்றியிருந்தது!

நீல விளக்கொளியில் தேவதையாக, ஷீலா. அருகில், மிக அருகில். பாரம் ஏறியிருந்த அவன் மனம்தான் எங்கோ.... அவள் மூச்சுக் காற்று அவன் கன்னத்தில்.

"ஜீவா..."

"ம்?" என்றான் கவனமின்றி.

"என்ன பிரச்னை டார்லிங்?"

"ஒன்றுமில்லை ஷீலா!"

"ப்ளீஸ்... மறைக்காதீர்கள் என்னிடம். உங்களில் பாதி நான்!" என்றாள் கிசுகிசுப்பாக.

"உண்மைதான்!"

"எது? ஏதோ பிரச்னை இருப்பதுதானே?"

"அதில்லைடா. என்னில் பாதி என்பது!"

"ஜ்ஜீவா!" என்று சிணுங்கினாள். அவள் கை அவன் தலைமுடியினுள் ஆதரவாக அளைய, "அவுட் வித் இட் மை லவ்!"

"ஓக்கே. ஒரு விளம்பர கான்ட்ராக்ட் பற்றி மண்டைக் குழப்பம்!" ச்சே... இவ்வளவு வருடத் திருமண வாழ்வில் முதல் பொய்!

"அவ்வளவுதானே! பெட்ரூமிலிருந்து பிரச்னைகளைத் தூர எறியுங்கள்!"

"உத்தரவு!"

"அருகருகே நாம். இந்தக் கணம் நிஜம். வேறு எதுவும் துச்சம். குறையாத காதலில் கரைவோம் வா, ஜீவா!" அவனைக் கட்டிக் கொண்டான். "உலகிலேயே எனக்குப் ப்ரியமான என் ஜீவா! நெருங்கி வா நெருப்பே!"

"என் உயிர் நீ!" என்றான் தன்னை இழந்து. கவலை மறந்தது. காதல் பிறந்தது. பிறகு... பிறகு...

சொல் மறந்தது. சுவை பிறந்தது. மெய் மறந்தது. சுகம் பிறந்தது. உலகம் மறந்தது. நேரம் பறந்தது.

இரவு 10:30. அதற்குள், ஆழ்ந்த தூக்கத்தில் ஷீலா. கடைகளில் அலைந்த களைப்பு, பாவம். மனைவியின் முகத்தில் எவ்வளவு நிறைவு; நிம்மதி. காணக் கிடைக்காதது, அவன் குடும்பம். கவனமாக மிகக் கவனமாகப் பாதுகாப்பான். இவர்களுக்காக, அவன் எதுவும் செய்வான்.

உறக்கம் ஏனோ வரவில்லை. மனம் எதையோ எதிர்பார்த்திருந்தது போல...

போன் ஒலித்தது. எழுந்

தான். சென்றான். எடுத்தான். கேட்டான். அவன்தான்! அகால அன்பன்; மிரட்டல் மகன்!

"கார் ஸ்டிக்கர் எப்படி, ஜீவா? நினைத்த போது, நினைத்த நேரம் உன் உயிர் பறிப்பேன் ஜீவா!"

முகத்தில் அறைவது போல, பட்டென்று போனை வைத்து விட்டான் ஜீவா. உள்ளுணர்வு உந்த, எழுந்து சென்று கதவு திறந்து பால்கனி வழியே பார்த்தான்.

தெருவில் ஒருவன் இருந்தான்! எதிர்ப்புறம், இவன் பங்களாவைப் பார்த்தபடி. சோடியம் வேப்பர் வெளிச்சத்தில் அவன் குறுந்தாடி கூடத் தெரிந்தது. வாவ்! அவன் கையில் செல் போன்! ஆக, அவன்தானா 'அவன்'!

ஜீவா, அலமாரியிலிருந்து கத்தி எடுத்தான்! பட்டன் அழுத்த, விஷ்க்கென்ற சிறலில் ஆறு அங்குல பிளேடு வெளிப்பட்டது. பல வருடங்களாகியும், மங்காத மினுமினுப்பு. ஓர் உளவாளியாக, இக் கத்தியில் சித்து விளையாடியது எப்போதோ போல் இருந்தது. கத்தியை ஒருமுறை லாகவமாகக் காற்றில் சுழற்றினான். அவனுள் ஊறியிருந்த பயிற்சி; தேர்ச்சி. எப்படி மறக்கும்...

லேசாகச் சாகஸ வயப்பட்ட மனத்தைச் சட்டென்று அடக்கினான். நோ! இல்லை இன்னும். இல்லை எப்போதும். அவனைப் 'பிடித்து' விசாரிக்கப் போகிறான். பாதுகாப்பிற்கு இந்தக் கத்தி. அவ்வளவே. கிளம்பினான்.

இருளிலேயே தோட்டத்தைக் கடந்தான். தாவிக் கொண்டு வந்த சீசரை 'உஷ்' என்று



அடக்கி விரட்டினான். தெருவுக்கு வந்தால் –

அவனைக் காணோம்! சிறிது நேரம் தீவிரமாகத் தேடி விட்டுத் திரும்பினான். குறுந்தாடி எப்படியோ உஷாராகி விட்டான்...

படீரென்று வெடித்தது, பலூன்! கௌதமின் விஷமம்.

"அப்படிச் செய்யாதேடா செல்லம்!" என்றான் ஜீவா கொஞ்சலாக. கௌதம் அடுத்த பலூனை அழுத்த முயன்றான்.

"கௌதம்!" என்று அதட்டினாள் ஷீலா. "பிறந்த நாளும் அதுவுமா என்னைத் திட்ட வைக்காதே!" என்றாள் கோபம் போல.

"சாரி மம்மி!" என்று அவள் அருகில் வந்தான்.

"அப்படியே மகன் என்னை மாதிரி! என்னமாக உனக்குப் பயப்படுகிறான் பார்!"

"பூ... பூ– ஜீவா!"

" 'ஐ லவ்' சொல்லாமல் விழுங்கி விட்டாயே அன்பே!"

"கோபமா மம்மி?" என்று குழைந்த கௌதம், ஷீலாவின் கன்னத்தில் தொடர்ந்து முத்தமிட –

"போதுண்டா! முத்தத்தை வேஸ்ட் செய்யாதே கண்ணா."

"ஏன் டாடி?"

"பிற்காலத்தில் நிரம்பத் தேவையாக இருக்கும்!" என்றான் ஷீலாவைப் பொருள் பொதிந்து பார்த்தவாறு.

"சை! குழந்தையிடம் போய்"

"சரி வா! உன்னிடம் வைத்துக் கொள்கிறேன்!" என்று உதடு குவித்து பாசாங்காக முத்தமிடுவது போல அவளை அணுக –

"உங்களை....!" மேலே பேச முடியாமல் அவளிடம் வெட்கம்.

கௌதம் இடைபுகுந்து, "டாடி! பர்த்டே எனக்கு!" என்றான்.

சிரித்தார்கள்.

மாலை. பல்வேறு சைஸ்களில் பலூன்கள். பங்களா முகப்பில், மரங்களில் கண்ணைப் பறித்த வண்ண சீரியல் பல்புகள். சோம்பலாக ஊசலாடும் ஜரிகைச் சரங்கள். ஜோரான காகித ஜோடனைகள். கசியும் இசை. பனீரிட்டத் தோட்டத்தில் பரவலாகப் பாலிமர் ஆசனங்கள். பஃபே டின்னர் அயிட்டங்களுடன் ஓரத்தில் வெண்சீருடைப் பணியாளர்கள்.

முதலில் வந்த காரிலிருந்து இறங்கியவரைப் பார்த்து ஜீவா தம்பதியினர் மலர்ந்தனர். டாக்டர் அப்துல் ஜலால்! இந்தியாவின் தலைசிறந்த கம்ப்யூட்டர் இயல் பேராசிரியர்.

"வெல்கம் அங்கிள்!"


பிப்ரவரி '98 இதழில்

இந்தக் கடலில் மிதக்கலாம்!

கோகுலின் நாய்க்குட்டி!

ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்க முடியுமா?


விளையாட்டு நாயகர்கள் – 1997

• ஹைடர் ஜக்கு • பிங்கி–பாங்கி– படக்கதைகள்

கோகுலம்

முழுமையான சிறுவர் மாத இதழ்

விலை ரூ. 5/-



வரவேற்ற ஜீவாவை அணைத்துக் கொண்ட ஜலால், "என்ன ஜீவா, என் மகள் ஷீலுக் குட்டியைச் சந்தோஷமாக வைத்துக் கொள்கிறாயா?"

"பார்த்தாலே தெரியவில்லையா புரொபசர்?"

"ஷீலா, ஒரு பெரும் பொக்கிஷம்! அரிய பெண்! அவளை அடைய, போன பிறவிகளில் டன் கணக்கில் புண்ணியம் செய்திருக்கிறாய் ஜீவா!"

"மாற்றிச் சொல்கிறீர்கள்! ஜீவாவுடன் வாழ நான்தான் புண்ணியம் சேர்த்திருக்கிறேன்!"


"கணவனை விட்டுக் கொடுக்க மாட்டாயே! என் பர்த்டே பிரசண்ட்! குட்டிப் பையனுக்கு ஒரு சுட்டிப் பொம்மை! நானே ஸ்பெஷலாகப் ப்ரோகிராம் செய்து தயாரித்தது. இதனுள் ஒரு மைக்ரோ கம்ப்யூட்டர். இது என்னவெல்லாம் செய்யும் தெரியுமா? இதோ, ஜலாலின் ஜாலம்...!"

ஆர்வமாக ஷீலா, கௌதம். விளக்கும் புரொபசரையே பார்த்தான் ஜீவா. ஜலால், இந்தியாவின் பெருமிதம். கேட்ஸும், ஐபிஎம்மும் கூடையில் பெரும் பணமுடன் வலை விரித்தும் பால் மாறாத தேசியவாதி. உலக அளவில், பெயர். இருந்தும், அந்த எளிமை... நடுவகிடு எடுத்த நரைத்த தலை. அனுபவச் சுருக்கங்கள் மீறி ஒளிரும் முகம். விஞ்ஞானத்திற்கு அர்ப்பணித்துக் கொண்ட பேச்சிலர். ஷீலா குடும்பத்திற்குப் பல வருடங்களாகப் பழக்கம். அவள் தந்தை இறந்ததும், அந்த ஸ்தானத்தை விருப்பமுடன் வகிக்கும் பாசமுள்ள புரொபசர். அபூர்வ மனிதர். இவர் தொடர்பு தன் அதிர்ஷ்டம்.

"உங்களைப் பார்ப்பது அரிதாகி வருகிறதே அங்கிள்?"

"உனக்கு மட்டும் ஒரு ரகசியம் ஜீவா! முக்கியமான ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறேன். நான் நினைத்தபடி, இது முடிந்து விட்டால் நம் தேசத்தைப் பிடிக்க முடியாது!" ஜலாலின் கண்கள் கனவில்; தொலைவில்.

அடுத்த அரை மணியில், சென்னையின் பல தொழிலதிபர்கள் மற்றும் பல விஐபிக்கள் அங்கே. கார்களால் தெருவே அடைந்திருந்தது. சென்னையின் நம்பர் ஒன் நிறுவனமான ஜீவாவின் பாரத் ஆட்ஸுடன் அங்கிருந்த அனேகர் தொடர்புடையவர்கள். ஆசை மகனின் பிறந்த நாள் அமர்க்களமாகக் கொண்டாடுவது; தன் நிறுவன நாளைய வளர்ச்சியையும் மனதில் கொண்டுதான் அத்தனை பேரையும் அழைத்திருந்தான். விளம்பர உலகில் விமரிசையான பார்ட்டி சகஜம். Grand Get together...



"உன் சம்சாரமும் அம்மாவும் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைச்சிருக்காங்களா? அதெப்படி?"

"எனக்கு வர்ற பொங்கல் போனஸ்ல ரெண்டு பேரும் புடைவை வாங்கிக்கிறதுக்கு திட்டம் போட்டு, கொஞ்ச நாளா சண்டை போடாம ஒற்றுமையா இருக்காங்களே!"

– தேவந்தி துரைராஜ்

ஆங்காங்கே கையில் தட்டுக்களுடன் முடிச்சு முடிச்சாக. சன்னமாகப் பேசியபடி. பகட்டாக உடுத்திய ஆண்களும் பெண்களுமாக. அவர்களிடையே, மகா சுறுசுறுப்பாக விருந்தோம்பி உற்சாகமாக ஊடாடும் ஷீலா, மின்னல் மாதிரி இருந்தாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம், ஜீவாவுக்கு ஓர் அடி உயரமான உணர்வு!

அவனுக்குப் பிடித்த ஆகாய நீலப் புடைவை. சிறு மெரூன் பொட்டு. ஒரு தங்க ஆரம். வேறு விசேஷ அலங்கார மெனக்கெடல்கள் ஏதுமில்லை. இருந்தும், தனியாளாகத் தேவதையாக... என்ன பெண் இவள்... எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல... எங்கிருந்தாலும் சற்றைக்கொருதரம் இருவர் கண்களும் சந்தித்தவாறு இருந்தன.

மறுபடி ஷீலாவின் கண்கள் இவனிடம் வந்து லயிப்புடன் வசமாக, ஜீவா சட்டென்று தன் வலது காதை ஆட்காட்டி விரலால் தடவிக் கொண்டான்!

குப்பென்று பரவச மின்சாரம் ஏற, ஷீலா தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். பொது இடங்களில் அவர்களுக்குள் இருந்த 'சங்கேதம்' அது! அவ்வாறு தடவினால், 'இப்போது நான் உன்னை முத்தமிடுகிறேன்!' என்று பொருள். ஜீவா சிரித்துக் கொண்டான். உளவிலும் காதலிலும் 'சங்கேதம்' எவ்வளவு முக்கியம்!

திடீரென்று பலமாக அதிர்ந்தான் ஜீவா. அங்கே... அங்கே... உலகத்தின் உச்சியில் போலிருந்த உணர்வு சரேலென்று இறங்கி விட்டது. கேட்டின் வழியாக உள்ளே வந்த அவனைப் பார்த்து நிலைதடுமாறினான். அவன்... அவன்...

குப்தா! இந்திய உளவுத் துறை ஏஜெண்ட்! உடன் வேலை செய்தவன் முகம் எப்படி மறக்கும்? ஜீவாவுக்கு ஏதும் புரியவில்லை.

என்ன நடக்கிறது இங்கே? அழையாமலே வந்த அந்த உளவு ஏஜெண்ட்டிற்கு இங்கே என்ன வேலை?

குப்தா இவனைப் பார்க்காதவன் போல் சென்று கூட்டத்தில் கலந்தான். எப்போதும் தெரிந்ததாகக் காண்பித்துக் கொள்ளாதே! உளவில் பால பாடம். குப்தா நினைவுபடுத்துகிறான். முழுவதுமாகத் தலைமூழ்கியாகி விட்டது என்று நிம்மதியாக நினைத்திருந்த வேளையில், திடுமென்று பூதம் கிளம்பும் என்ன உளவு உரசல் இது?

ஜீவா, இயல்பாக இருக்க முயன்றான். ஹலோ, வெல்கம். வந்ததில் எவ்வளவு மகிழ்ச்சி. மகன் ஸ்டேட்ஸில் நலமா. ப்ளீஸ். இதெல்லாம் எதற்கு? ஓ... அந்த விளம்பரமா. ஷீலா இவர்தான். எல்லாம் இவன்தான். உங்கள் நலத்திற்கு இந்த சூப். வந்தனம் கனவானே. சுருதி மாறாத சொற்கள். அதீதமானப் புன்னகையுடன் உபசரிப்பு. இனிய இயந்திரமாகக் கைகுவிப்பு; கைகுலுக்கல். எல்லாம் திரும்பத் திரும்ப. ஆனால், அவன் கண்களின் ஓரம் குப்தா மீதுதான்.

சில நிமிடங்களில், ஒரு பரிசு கவரை கௌதமிடம் தந்து விட்டு குப்தா கமுக்கமாக வெளியேறுவதைப் பார்த்தான். காஷுவலாகச் சென்று, பரிசுக் குவியலிலிருந்து குப்தாவின் கவரை மட்டும் கவர்ந்து கொண்டான். ஓரம் ஒதுங்கினான். பிரித்தான். ஒரு தாள். இரண்டே வரிகள் :

'உஷாராயிரு.

பின்னர், உன்னைத் தொடர்பு கொள்வேன்.

காத்திரு ஜீவா.'

ஷீலா நெருங்கிப் படுத்தாள். காத்திரு ஜீவா. எதற்காக குப்தா?

"பார்ட்டியில் அந்த ஜீன்ஸ், சிவப்புக் கட்டச் சட்டையில் நீங்கள் எவ்வளவு ஹாண்ட்சம் தெரியுமா? முரட்டுக் குதிரை மாதிரி..."

குப்தா அப்படியேதான் இருக்கிறான்!

க்ளுக்கென்று சிரித்த ஷீலா, "பாவம் உங்கள் வலது காது என்னமாகச் சிவந்திருக்கிறது! எவ்வளவு முறை தடவி விட்டீர்கள்!"

எதற்காக எச்சரிக்கிறான்? திரும்பவும் தொடர்பு கொள்வானாமே...

"மாலை, காற்றில் பறந்த முத்தங்களை இப்போது நிஜமாக்குவோமா ஜீவா?"

வேண்டாம். விட்டு விலகு குப்தா. என் நினைவிலிருந்து. என் வாழ்விலிருந்து...

ஜீவாவிற்குத் திடீரென்று விழிப்பு தட்டியது. சீசர் குரைப்பது மழுப்பலாகக் கேட்டது. சுவர்க் கடிகாரம் நடுநிசி என்றது. பக்கத்தில் பார்த்தான். என்ன உறக்கம்! தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு விசேஷ வரம் வாங்கி வந்தவர்கள்....

விளக்கைப் போடாமலே ஹாலுக்கு வந்தான் ஜீவா. விடாமல் சீசரின் குரைப்பு. ஏதோ தவறு. எவரோ அத்துமீறி இருக்கிறார்கள். தோட்டத்திலிருந்து தட்தட்டென்று வினோதமாகக் கேட்டது. என்ன ஓசை அது? வெளியே என்னதான் நடக்கிறது?

ஜன்னல் கர்ட்டனை சற்றே விலக்கிப் பார்த்தான். தொலைவில், இருளில் மசமசப்பாக ஓர் உருவம்! இனி, தாமதிக்கக் கூடாது.

கதவு திறந்து, வெளியே வந்தான் ஜீவா. அவன் கையில் கத்தி. பாக்கெட்டில் சிறிய டார்ச். இருட்டு கண்களுக்குப் பழகக் காத்திருந்து விட்டுக் கிளம்பினான்.

காற்றில் ச்சில். சில் வண்டுகளின் ரொய்ங். எங்கோ ஒரு நாய் ஊளை. ஏனோ சீசரின் குரைப்பு நின்றிருந்தது.

அந்த மாஜி உளவாளியிடம், தற்சமயம் ஒருவிதப் பூனைத்தன்மை வந்திருந்தது. பதுங்கப் பாயத் தயாராக... சருகுகளைத் தவிர்த்து ஓசையின்றி முன்னேறினான்.

துப்புரவாகத் தோட்டத்தின் முன்புறம் துழாவியதில் ஏமாற்றம். அத்துமீறிய அந்த உருவத்தைக் காணோம்! சட். தெரிந்து மறைந்து நெருங்கி விலகி... என்ன மாய ஆட்டம் இது....

மெல்லப் பின்புறம் வந்தான் ஜீவா. திடுக்கென்று நின்றான். காலில், பிசுபிசுவென்று வினோத உணர்வு. டார்ச் அடித்துப் பார்த்தான்.

கொழ கொழவென்ற ரத்தம்! சில அடிகள் தள்ளி செடி மறைவில், அது என்ன? டார்ச்சை உயிர்ப்பித்தான். அங்கே, கால் பரத்தி மல்லாந்து –

குரூரமாக இறந்திருந்தது சீஸர்!

(தொடரும்)


"பத்திரிகையில் போடறதுக்கு வெயிட்டான விஷயம் ஏதாவது கொண்டு வாங்கன்னு நிருபர் கிட்ட சொன்னது தப்பாப் போச்சு..."



"என்ன ஆச்சு?"

"எல்லா நடிகர், நடிகைகளோட எடையும் எத்தனை கிலோன்னு எழுதி சேகரிச்சு கொண்டு வந்திருக்காரு!"

– என். உஷா







1998 ஜனவரி 18
ஈசுவர தை 5
மலர் : 56
இதழ் : 25

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




# வெள்ளிவிழாவில் பித்தளை அறிக்கைகள்!


அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் நெல்லையை நான்கு நாட்களுக்கு ஸ்தம்பிக்கச் செய்திருக்கின்றன! நிகழ்ச்சிகளை மலர் தூவி ஆரம்பித்து வைத்து, மங்களம் பாடி முடித்து வைத்திருக்கிறார் ஜெயலலிதா!

எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்து வைத்துவிட்டு கூட்டத்தை நோக்கி மலர்களை வீசியிருக்கிறார். நினைவு நாளன்று 'கண்மணி' 'மாங்கனி' என்று தொண்டர்களை வாழ்த்திப் பாடி நிகழ்ச்சிகளை நிறைவு செய்திருக்கிறார்!

ஒரு கட்சியின் வெள்ளிவிழா என்பது அக்கட்சியின் அமைப்பையும் செயல்பாடுகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய தருணம். எதிர்காலத் திட்டங்களை வகுத்து, கொள்கைகளை விவரித்து, பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்க வேண்டிய காலகட்டம்.

அதுவும், நாடு தேர்தலை எதிர்நோக்கியிருக்கிற ஒரு சமயத்தில், வரலாறு காணாத ஒரு புதிய கூட்டணியை பி.ஜே.பி.யுடன் அமைத்துக் கொண்டிருக்கிற சந்தர்ப்பத்தில், கட்சித் தலைமை பல முக்கியமான கேள்விகளுக்கு விடையளிக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், அ.தி.மு.க மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் எல்லாமே வழக்கமான வாய்ச்சவடால் தீர்மானங்கள்தாம்!




திருக்குறள் தேசிய நூலாக வேண்டும்; கங்கை - காவிரி இணைப்பு முயற்சிகள் தொடர வேண்டும், கச்சத்தீவை மீட்டு சேது - சமுத்திரம் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டும் போன்ற பழைய கோஷங்களே பெரும்பாலும் ஒலித்திருக்கின்றன.

'மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி' 'ஜெயின் கமிஷன் அறிக்கை குற்றம் சாட்டியதன் அடிப்படையில் கருணாநிதி ராஜினாமா செய்ய வேண்டும். அவருடன் சேர்ந்து புலிகளை ஆதரித்தவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டனை பெற வேண்டும்'... போன்ற சில புதிய பல்லவிகளும் ஒலித்திருக்கின்றன.

இந்த வாதப்படி, இன்று அ.தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றுள்ள புலி ஆதரவாளர்களும்கூட விசாரணைக்குட்படுத்தப்பட்டு தண்டனை பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள்!


யானைப் படை, குதிரை அணிவகுப்பு என்று ஆடம்பரம் காட்டிய புரட்சித் தலைவி பத்திரிகையாளர் கூட்டத்தில் பதில் கூறத் திணறியிருக்கிறார்.

சட்டசபைத் தேர்தலின்போதும் பி.ஜே.பி.யுடன் கூட்டு தொடருமா என்ற அடிப்படையான, முக்கியமான கேள்வியை, 'விஷமத்தனமான வினா' என்று முதலில் சாடிவிட்டு, பின்னர் 'தொடரும்' என்று நம்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

'நிலையான ஆட்சி, திறமை மிக்க பிரதமர்' என்ற கோஷத்துக்கு மேலாக ஒரு நியாயமான, தெளிவான விளக்கத்தை கூட்டணி குறித்து ஜெ அளிக்கவில்லை...

'அடிப்படைக் கொள்கைகளில் ஒத்துப் போகாத கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டிருப்பவர், திராவிட பாரம்பரியத்துக்கு விரோதமான அக் கொள்கைகளை ஏற்கிறாரா...? எந்த அளவுக்கு ஏற்கிறார்?' என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை இல்லை.

அ.தி.மு.க.வின் இதர கூட்டணிக் கட்சிகளும் தங்களது தி.மு.க விரோதத்தைப் பறை சாற்றவே இந்த வெள்ளிவிழா மேடையைப் பயன்படுத்தியிருக்கின்றன.




சு.சுவாமி, தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்கு வழக்கம் போல் கெடு குறித்திருக்கிறார்!

வை.கோ, தேர்தலின்போது தி.மு.க.வினர் வன்முறையில் ஈடுபடுவார்கள் என்று அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்திருக்கிறார்!

ராம்தாஸ், 'தி.மு.க அரசு ஈழத் தமிழர்களைக் காப்பாற்றத் தவறிவிட்டது' என்று சாட,

வாழப்பாடியோ 'நாங்கள் தி.மு.க.வைத் தோற்கடிப்பதற்காகத்தான் ஒன்று சேர்ந்துள்ளோம்' என்று வாக்குமூலமே கொடுத்திருக்கிறார்.

மாநாட்டில் சேர்ந்த கூட்டமே கண் துடைப்புத்தான்; பேரணியில், வந்தவர்களே மீண்டும் மீண்டும் வந்து நீண்ட நேரம் அது நீடித்தது போன்ற பொய்யுணர்வை ஏற்படுத்தினார்கள் என்றெல்லாம் இந்த மாநாடு குறித்து விமர்சிக்கப்படுகிறது.

எனவே, தொண்டர்களின் பங்கேற்பும் ஈடுபாடும் எந்த அளவுக்கு இருந்தன என்பதைக்கூட சரியாக எடை போடுவதற்கில்லை.

'தம் பேரில் போடப்பட்ட அத்தனை வழக்குகளும் பொய் வழக்குகள்; தாம் நிரபராதி; அரசியல் விரோதத்தினால் கருணாநிதி வழக்கு மேல் வழக்கு தொடுத்துத் தம்மைப் பழி வாங்குகிறார்' என்று சோக கீதம் பாட இந்த மாநாடு ஜெயலலிதாவுக்கு மேடை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு உரிய தண்டனையை வழங்கும் என்று கருணாநிதி சொன்னபோது, 'அவ்வாறு கூறுவது நீதிமன்ற அவமதிப்பு' என்று குறிப்பிட்டார் ஜெயலலிதா. அப்படியானால் 'தாம் நிரபராதி' என்று ஜெயலலிதா கூறிக் கொள்வதும்கூட நீதிமன்ற அவமதிப்புத்தான்!

யானை, குதிரைகளைக் கொண்டு வந்து நிறுத்தினாலும், ராட்சஸப் பந்தல் போட்டுப் பிரகடனம் செய்தாலும், உயர்நீதி மன்றம் ஏற்கெனவே சில வழக்குகளில் ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்பு வழங்கியுள்ளதை மறைக்க முடியாது. உண்மைகளைப் பொய்யாக்க முடியாது.

இதை வாக்காளர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டி விடும்.

# கல்கி வாசகர்கள் கஞ்சர்கள் இல்லை!

✉ ரோட் ரோலர், புல்டோசர் ஆகிய இயந்திரங்கட்கு பா.ஜ.க., ஜெ.வை ஒப்பிட்டுத் தாங்கள் தீட்டியுள்ள தலையங்கம் தேசியக் கண்ணோட்டமும், செல்லக் கண்டிப்பும் இணைந்த மனோ தத்துவ உரையாய் மிளிர்கிறது! தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸார் ஒன்றுக்குப் பன்முறை படித்துணர வேண்டிய பாடமாகவும் திகழ்கிறது!
இனாம் மணியாச்சி, ச. ஆ. கேசவன்.

✉ 'சின்னத் திரை'யின் மார்க்கண்டேயினியின் 'நியூ இயர் ஸ்பெஷல் சந்திப்பான' இனிமைக்கு ஓர் உமாவின் பேட்டி 'வெற்றியின் வலிமைக்கு' ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. 'அழகு + அறிவு + இனிமையான குரல் = உமா என்று எங்கள் மனத்தில் இடம்பிடித்த 'உமா'வின் வண்ணப்படத்தையும், பேட்டியையும் வெளியிட்ட கல்கிக்கு நன்றி.
திருச்சி - 17, உஷாமுத்துராமன்.

✉ 'சன் டீவி. உமா', திருமதி என்பதை அறிந்து ஆச்சரியத்தில் வாய்பிளந்தேன்!
மதுரை, நெல்லை. வி. சிவா.

✉ 'பத்திரிகைகள் என்னை வேதனைப்படுத்துகின்றன' என்று ஜக்கி சாமியார் புலம்பினாலும் இதே பத்திரிகைகள்தாம் பல போலிச் சாமியார்களைத் தோலுரித்துக் காட்டி இருக்கின்றன என்பதையும் அவர் மறந்துவிடக் கூடாது.
நாயுடுபுரம், 'கொடை' த. காமராசு.

✉ நெல்லை மாநாட்டை நேரில் போய்த்தான் பார்க்க வேண்டுமா என்ன! அந்த அற்புத (!) உணர்வை ஊட்டியது உங்களது முன்னோட்ட ரிப்போர்ட்!
சென்னை - 30, புளியரை கணேசன்.

✉ 'டெஸ்ட் பந்தயங்களிலும் ஜெயித்துக் காட்டுவோம்' என்று இலங்கை கிரிக்கெட் அணியின் துணை கேப்டன் அரவிந்த் டிசில்வா அளித்த பேட்டியைப் படித்தேன். தங்கள் அணியிலுள்ள குறைநிறைகளைச் சொல்லி, அதை உணர்ந்து ஆடுவதால்தான் இலங்கை அணி சாம்பியனாகத் திகழ முடிகிறது. நம் இந்திய அணியும் இம்மாதிரி உணர்ந்து ஆடினால் என்ன?
லால்குடி, எம். இராஜேந்திரன்.

✉ சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கும், சர்க்கரை வியாதி இருக்குமோ... என்று அச்சம் கொள்பவர்களுக்கும் மிகவும் பயனுள்ள தகவல்களைத் தந்தது 'சர்க்கரை வியாதியைச் சமாளிப்பது எப்படி...?' கட்டுரை. பாராட்டுக்கள்.
சூரனூர், எஸ். காளிதாஸ்.

✉ 'எதிலும் இனிமை' தமிழன்பனின் கவிதை இனிமை. அக்கவிதை வெளியான கல்கி இதழ் வெளிவந்த முகூர்த்தத்தில் தமிழன்பனுக்குக் கலைஞர் விருது கிட்டிய செய்தி வந்தது இன்னும் இனிமை!
தக்கலை, லீலா இராம்.

✉ ஐம்பது காசு விலை ஏற்றத்தைத் தெரிவிக்க அரைப்பக்க விளக்கம் ஏன்? கல்கி வாசகர்களைக் கஞ்சர்கள் என்றா நினைத்தீர்கள்? சகஜமான ஒரு சமாசாரத்துக்குத் தயக்கம் ஏன்? குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் விரும்பிப் படிக்கும் கல்கியை, விலையேற்றத்தால் கைவிடுவோமா?
தூத்துக்குடி, கே. சுதர்ஸன்.

✉ கல்கி 4.1.98 இதழில் இசை விழாக்கள் பற்றிய பல செய்திக் குறிப்புகளினிடையில் 'தமிழிசைச் சங்கத்தில் கூட்டம் குறைவாக இருந்ததற்கு நிர்வாகக் கோளாறு காரணமா?' என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

பொதுவாகவே கர்நாடக இசைக் கச்சேரிகளுக்கு இன்று கூட்டம் குறைவாகத்தான் உள்ளது. சிறிய அரங்குகள் அது காரணமாகவே கணிசமான அளவில் நிரம்பி விடுகின்றன. ஆனால் ராஜா அண்ணாமலை மன்றம், மியூசிக் அகாடமி, கிருஷ்ணகான சபை போன்ற பெரிய அரங்குகளில் கூட்டம் குறைவாக இருப்பது 'பளிச்'சென்று தெரிகிறது. பாரம்பரியமான கர்நாடக இசையைக் கேட்க வரும் ரசிகர்கள் குறைவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இதற்கு சபா நிர்வாகிகளைக் குறைகூறவே முடியாது. கூட்டம் குறைவாக இருந்தாலும் விடாப்பிடியாகக் கச்சேரிகளை நடத்துகிற அவர்கள் ஆர்வத்தைப் பாராட்ட வேண்டும்.
சென்னை - 34, கே. ராஜகோபாலன்.

# “ஹீரோவாக இருந்த ராமதாஸ், ஜீரோவாகி விட்டார்!”

## தீரன் பேட்டி

**பாட்டாளி மக்கள் கட்சியின் சிந்தனை ஊற்றாக இருந்தவர் அதன் தலைவர் பேராசிரியர் தீரன். அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. இணையக்கூடாது என்று எதிர்ப்புக் குரல் கொடுத்ததற்காக, இன்று கட்சியில் இருந்தே நீக்கப்பட்டிருக்கிறார். இந்தத் தமிழ்ப் பேராசிரியர், “1977-ல் இருந்தே டாக்டரை எனக்குத் தெரியும். தன்மானமுள்ள, கொள்கைப் பிடிப்புற்ற தலைவராக அவரை மக்கள் முன் நிறுத்தினோம். ஆனால் இன்று ஒவ்வொரு பா.ம.க. தொண்டனும் தலை குனிந்து நிற்கிறான்!” என்று உணர்ச்சிக் குவியலோடு பேசத் தொடங்குகிறார் தீரன்....**

• தீரன்



கல்கி : கலைஞர் எங்களை என்றுமே மதித்ததில்லை என்று டாக்டர் ராமதாஸ் சொல்லியிருக்கிறாரே!

தீரன் : சுத்தப் பொய். பழைய விஷயங்களைச் சொன்னால்தான் மக்களுக்கும் உண்மை புரியும். 1967லிருந்தே பார்த்தீர்களானால், தமிழகத்தில் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்தே தேர்தலைச் சந்தித்து வந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் பா.ம.கவும் கூட்டணியில் இணைந்து செயல்பட்டால்தான் ஜனநாயக அமைப்புகளில் பா.ம.க.வின் குரல் அழுத்தம் திருத்தமாக ஒலிக்கும் என்பதை உணர்ந்து 1991-ம் ஆண்டு தி.மு.க.வுடன் கூட்டணியாக இணைந்து தேர்தலைச் சந்திக்கத் தயாரானோம். பதினைந்து சட்டமன்ற இடங்களையும் இரண்டு பாராளுமன்ற இடங்களையும் எங்களுக்கு விட்டுக் கொடுத்தார்கள். ஆனால் டாக்டர் (ராமதாஸ்) அவர்கள் 'பொதுக் குழுவைக் கூட்டி முடிவு செய்கிறோம்' என்று சொல்லி விட்டார்கள். பொதுக் குழுவில் தனித்து நிற்பதற்கும், தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கவும் சமமான ஆதரவு கிடைத்தது. ஆனால் டாக்டர் “தனித்தே நிற்கலாம்” என்று முடிவு செய்து விட்டார். அதே போல 1996-ல் இருபத்தைந்து சட்டமன்றத் தொகுதிகளும், இரண்டு பாராளுமன்றத் தொகுதிகளும் தி.மு.க. தருவதாகச் சொன்னது. நாங்கள் 40 சட்டமன்றத் தொகுதிகளையும் 5 பாராளுமன்றத் தொகுதிகளையும் கேட்டோம். இந்தப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது, காங்கிரஸிலிருந்து மூப்பனார் பிரிந்து வந்து தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க, இந்தத் தடாலடித் திருப்பங்களால் நாங்கள் ஓரங் கட்டப்பட்டோம்.

டாக்டர் அவர்கள் செய்த தாமதம் காரணமாக தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க முடியாமல் போய்விட்டது. அதே போல இந்தத் தேர்தலின் போதும் தி.மு.க.வோடு கூட்டணி பற்றிப் பேச என்னையும், ஜி.கே. மணியையும் அனுப்பினார் டாக்டர். பூர்வாங்கப் பேச்சுவார்த்தையின் போது, கலைஞர் 'ஒண்ணும் பிரச்னையில்லை, பார்த்துக்கலாம்' என்று கூறினார். கடந்த மாதம் 18, மற்றும் 19-ம் தேதிகளில் டாக்டரைத் தொடர்பு கொள்ளக் கலைஞர் முடிவு செய்

மாவீரன் நெப்போலியனை மதகுரு ஒருவர் சந்தித்து, ''சாம்ராஜ்ய ஆசை கொண்டு அலைகிறாயே! நீ இறந்து போன பின்பு உன்னுடைய சாம்ராஜ்யம் உன்னுடையதாக இருக்கப் போவதில்லையே'' என்று கூறினார். வாய்விட்டு சிரித்த நெப்போலியன், ''உண்மைதான்! சாம்ராஜ்யம் என்னுடையதாக இருக்காது. ஆனால் சாம்ராஜ்யத்தை எப்படி அமைக்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்குக் காரணமாக இருந்த என்னுடைய வீரமும், அந்த வீரத்தினால் ஏற்பட்ட புகழும் இந்த்உலகம் இருக்கும் வரை என்னுடையதாக இருக்கும்!'' என்று கூறினான்.

''மேதைகளின் கருத்துக் களஞ்சியம்'' என்ற நூலிலிருந்து. — ருக்மணி குழந்தைவேல்

தார். ஆற்காடு வீராச்சாமியும் பொன்முடியும் மிகத் தீவிரமாக இவரைத் தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். ஆனால் ஓட்டலில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லி விட்டு, அன்று இரவே அ.தி.மு.கவுடன் கூட்டணி என்று அறிவித்து விட்டார். அதற்கு ஒரு வாரம் முன்புதான் வேலூர் பொதுக் குழுவின் முடிவில், இட ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பாளர்கள், மத வெறியாளர்கள் உள்ள கூட்டணியில் பா.ம.க. இணையாது' என்று சொன்னார். இடையில் என்ன நடந்தது? வாழப்பாடி ராமமூர்த்தியுடன் டெல்லி சென்று வந்தார். அன்று டாக்டர் விலை போய் விட்டதாகப் பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். பா.ம.க. தொண்டர்கள் அவமானத்தால் கூனிக் குறுகி நிற்கின்றனர். எங்களுக்கு ஹீரோவாக இருந்தவர் இன்று ஜீரோவாக ஆகிவிட்டார்.

**கல்கி** : கூட்டணி வைத்து தேர்தலைச் சந்திப்பது நடைமுறை ஆகிவிட்டதால், அதிமுகவுடன் கூட்டணி வைப்பதில் என்ன தவறு என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**தீரன்** : 1992-ல் எங்களைத் தடை செய்யச் சட்டசபையில் தீர்மானம் இயற்றியவர்தான் ஜெயலலிதா. அது மட்டுமா? செல்வகணபதி போன்ற அமைச்சர்கள் மூலம், ஏராளமாகப் பணம் செலவழித்து எங்கள் கட்சியை உடைக்கப் பார்த்தவர்கள் அவர்கள். அ.தி.மு.க. அரசில் எங்கள் தொண்டர்கள் மீது ஆயிரக்கணக்கான பொய் வழக்குகள் போடப்பட்டன. இது தவிர மகாபலிபுரம் அருகே வன்னியப் பிரமுகர் ஆளவந்தார் டிரஸ்ட் பொறுப்பில் இருந்த நிலங்களை முறைகேடாக வளைத்துப் போட்டார் ஜெயலலிதா. இதைவிடக் கொடுமையான விஷயம் என்னவென்றால், டாக்டர் ஜெயிலில் இருந்தபோது, அவரது மனைவி அவரிடம் (ஜெயலலிதா) ஏதோ சலுகைகள் கேட்டதாகச் சொல்லிக் கேவலமாகப் பேசினார். அப்போது எங்கள் ரத்தம் கொதித்தது. டாக்டருக்காக பொறுத்துக் கொண்டோம். அப்படிப்பட்ட கட்சியோடு எப்படிக் கூட்டு வைத்துக் கொள்ள முடியும்? மாறாக, கலைஞர் எங்கள் மீது போடப்பட்டிருந்த 484 பொய் வழக்குகளை வாபஸ் பெற்றார். செங்கல்வராயன் அறக்கட்டளையை வன்னியர் வசம் மீண்டும் ஒப்படைத்தார். அதைவிட மிக முக்கியமாக, ஐம்பது சதவீதத்தில், 20 சதவீத இடங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனியாக ஒதுக்கித் தந்தாரே, அதை மறக்க முடியுமா? விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கே டாக்டர்களும் என்ஜினியர்களும் வந்து கொண்டிருந்த சமூகத்தில் இருந்து இன்று நூற்றுக்கணக்கில் வருகிறார்களே. இதற்குக் காரணம் கலைஞர்தானே! இன்று டாக்டர் இணைந்துள்ள கூட்டணியில் உள்ள பா.ஜ.க. மதவெறியாளர்கள் கட்சி மட்டுமல்ல; சமூக நீதிக்கு எதிரானதும் கூட. பா.ம.க.வின் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமான கூட்டணியில் இணைந்திருக்கிறார் டாக்டர். இதையெல்லாம் சொன்னால் என்னைக் கட்சியை விட்டு நீக்குகிறார். கருத்துக்குக் கருத்து மோதுவதை விட்டு விட்டு, அடியாட்களை ஏவிவிட்டு என்னை பயமுறுத்துகிறார். நான்காம் தர அரசியல்வாதி போல என் குடும்ப விஷயங்களைச் சொல்கிறார். ரொம்பவும் குழம்பித்தான் போயிருக்கிறார்.

**கல்கி** : அவரைக் கொலை செய்ய சதி நடப்பதாகவும், நீங்கள் பத்திரமாக இரண்டு முதல்வர்களின் (பாண்டிச்சேரி முதல்வரையும் சேர்த்து) பாதுகாப்பில் இருப்பதாகவும் டாக்டர் கூறியிருக்கிறாரே!

**தீரன்** : சமீபத்தில் நடந்த பொதுக்குழுவில் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குரு, என் தலையைக் கொய்து விடுவதாகப் பேசினார். அதைக் கேட்டு ரசித்தவர்தான் டாக்டர். வெளிநாட்டில் இருக்கும் என் மருமகன் அவரைக் கொலை செய்து விடுவதாக மிரட்டினான் என்று கதை விடுகிறார். கலைஞர் என்னைப் பிரித்து விட்டதாகச் சொல்கிறார். இந்த தீரனைப் பிரித்து தி.மு.க.வில் சேர்ப்பதனால் என்ன பயன் இருக்கிறது? லட்சக் கணக்கான தொண்டர்களைக் கொண்ட வலுவான கட்சி தி.மு.க. ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆதலால் எனக்கு முறைப்படி பாதுகாப்புக் கொடுக்கப்படுகிறது. நானாவது இரண்டு முதல்வர்களின் பாதுக்காப்பில் இருக்கிறேன் என்று வாதத்திற்காக ஒப்புக் கொள்வோம். இவர் யாருடைய பாதுகாப்பில்; தயவில் இருக்கிறார்?...

**கல்கி** : உங்கள் அடுத்த நடவடிக்கை என்ன?

**தீரன்** : ஆதரவாளர்களோடு பேசி, நல்ல முடிவு எடுப்பேன். இந்தத் தேர்தலின் போது ஐக்கிய முன்னணியின் மேடைகளில் தீவிரப் பிரசாரம் செய்ய இருக்கிறேன். மதவெறியாளர்களையும், இட ஒதுக்கீட்டு எதிர்ப்பாளர்களையும் மண்ணைக் கவ்வச் செய்ய வேண்டும். அதுதான் இப்போதைய அவசரத் தேவை. ◯

பேட்டி : **ப்ரியன்**

# கடம் காசெட்!



டிராம்ஸ், புல்லாங்குழல், மிருதங்கம், மோர்சிங் என்று தம்முடன் பலர் இணைந்து வாசிக்க, இசையில் ஒரு புதிய பரிசோதனை செய்திருக்கிறார் கடம் கலைஞர் சுரேஷ். இந்த காசெட் முயற்சியின் பெயர் 'யத்தி'.

அதில் புல்லாங்குழலில் அமிருதவர்ஷிணி ராகம் நிழல் மாதிரி தொடர, இவர் கடம் வாசித்திருப்பதும், ஜலதரங்கம் மாதிரி பத்து கட வாத்தியங்களை வைத்துக் கொண்டு 'சின்னச் சின்ன ஆசை'யை கட-தரங்கத்தில் வாசித்திருப்பதும், புதுமை மட்டுமல்ல, சாதனைதான். 'அமிர்தவர்ஷிணி'யைக் கொஞ்சம் லயித்துக் கேட்டால், மழைக்காலத் தவளைகளின் சாதகம் கூடக் கேட்பது போல் தோன்றும்!

காசெட்டின் ஆரம்பத்தில் டிரம்ஸின் உற்சாகத் தட்டலில் 'ஃப்ரீடம்'. கடம் இடை இடையே நுழைந்து நுழைந்து, இழை மாதிரி பின்னிப் பின்னி வருகிறது. 'நாத தனும் அனிசம்' மிருதுவாகவே வருகிறது. "என் குரு டிவிஜி, ஜாஸ் இசை எல்லாம் நிறைய நடத்தி வாசித்திருக்கிறார். புதுசா எது செய்தாலும் பாராட்டுவார். அவர்தான் என்கரேஜ் பண்ணினார்!" என்றார் சுரேஷ்.

"சாதாரணமாக பக்க வாத்தியமாக, ரெக்கார்டிங்குக்கு முன்னால் ரிகர்சல் பார்த்துவிட்டு வாசித்துவிடுவேன். இதில் பாலன்ஸிங் பார்த்து, மிக்ஸிங் பார்த்து ஒரு நாள் முழுக்க சிரமப்பட்டது ஒரு புது அனுபவம்!" என்றார்.

"புல்லாங்குழல் வாசித்திருக்கும் பாலசாயி திரை இசை அனுபவமும் உள்ளவர். இதை எப்படி அமைக்கணும்னு அவர் ரொம்பவும் உதவி பண்ணினார்!"

"யத்தி என்றால் என்ன, சுரேஷ்?"

"யத்தி என்றால் pattern. அமைப்பு. தாளத்தை எப்படிப் பிரயோகிக்கணும் என்பதற்கு 'தாள தச பிராணா' பத்து விதிகள் இருக்கு. அதில் வருவதுதான் 'யத்தி' என்ற சொல்!"

கனடா போகுமுன் சில காசெட்டுகளைக் கேட்டார்களாம், அங்கே கச்சேரிகள் ஏற்பாடு செய்தவர்கள். தாம் பக்க வாத்தியமாக கடம் வாசித்திருந்த சில கர்னாடக இசை காசெட்டுகள் அனுப்பினார் சுரேஷ்.

'நீங்கள் தனியாக கடம் வாசித்த காசெட் ஏதும் இல்லையா?' என்று அவர்கள் கேட்டார்களாம். தனியாக வெறும் கடம் மட்டும் வாசித்து காசெட்டாக எடுத்துக் கொண்டு போனால் சரிப்படாது என்று தோன்றிற்றாம்.



• சுரேஷ்

"அதற்காக என்றே ஒரு புது முயற்சியாக இதைச் செய்து கொண்டு கனடா கொண்டு போனேன். அங்கே நல்ல வரவேற்பு. உலகம் முழுக்க இனி இந்த காசெட் கேட்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அதற்கான விற்பனை ஏற்பாடுகள் பற்றியும் பேசிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் சுரேஷ்.

சந்திப்பு : **சாருகேசி**

**புதுமை - 1**



# டெலிபோனில் இட்லி மாவு!



• சேத்னா

திடீரென்று கணவர் இறந்து விட்டார். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி சேத்னா லோடியாவை நிலை குலையச் செய்து விட்டது! ஆனால் பத்து வயதுப் பையன், ஐந்து வயதுப் பெண் இருவரையும் பார்த்த போது, அதிர்ச்சியிலேயே ஆழ்ந்து, அவநம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்று அவருக்குத் தோன்றியது. தீவிரமாக யோசித்தார்.

கணவர் நடத்தி வந்த ரெடிமேட் ஆடைகள் தயாரிப்பை மேற்கொண்டார். ஆனால், போதுமான படிப்பறிவு இல்லாததால் (பத்தாம் வகுப்பு) அதைச் சிறப்பாகச் செய்ய இயலவில்லை..

இதன் பிறகு, பல நாட்களுக்கு சேத்னா பல சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது விடிவெள்ளியாக ஒரு சமூக சேவகி இவருக்கு ஆதரவளித்தார். அவருடைய துக்கத்தைத் தெரிந்து கொண்டு, அதிலிருந்து மீளவும், இரண்டு குழந்தைகளுடன் வாழ்க்கையை கௌரவமாக நடத்திச் செல்லவும் அவருக்கு ஒரு யோசனையைச் சொன்னார்.

அது - இட்லி, தோசை, வடைக்கான மாவு தயாரித்து விற்பனை செய்வது!

ஆரம்பத்தில் இந்த யோசனை சற்று வித்தியாசமாகப் பட்டாலும், தாம் சார்ந்திருந்த குஜராத்தி சமூகத்தினர் பெரும்பாலும் இட்லி, தோசையை விரும்பி உண்பதை உணர்ந்து, அவர்களுக்காக மிகவும் சுத்தமான முறையில் மாவு தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார்.

இப்போது குஜராத்தி குடும்பங்கள் தவிர பல தமிழ்க் குடும்பங்களில் இவர் தயாரித்துத் தரும் மாவுதான் இட்லி, தோசை, வடை என்று காலை உணவுப் பிரச்னையைத் தீர்க்கிறது! - இங்கல்ல; மும்பை காட்கோபாரில்!


தொலைபேசி மூலம் நமக்கு இன்ன மாவு, இன்ன அளவில் வேண்டும் என்று சொல்லி விட்டால் போதும், குறித்த நேரத்தில் சேத்னாவின் பணியாளர் ஒருவர் வீட்டிற்கே கொண்டு வந்து கொடுத்து விடுவார்! ஒரு கிலோ மாவு 24 ரூபாய்; வீட்டிற்கே கொண்டு வந்து கொடுக்க, கூடுதலாக 2 ரூபாய்.

"அரிசி, உளுந்தெல்லாம் நான் மொத்த விலைக்கு வாங்குவதில்லை. விலை குறைவாக இருக்குமே என்று அப்படி வாங்கினால் தரம் குறைவாகவே இருக்கிறது. ஆகவே, நல்ல தரமுள்ள பொருட்களாக, தேவைக்கு ஏற்றாற் போல மட்டுமே வாங்கிக் கொள்கிறேன்" - தம்முடைய வியாபார நடைமுறையைச் சொல்கிறார்.

ஜெயின் சமூகத்தவர்கள் முந்தைய நாள் உணவுப் பொருளை மறுநாள் பயன்படுத்த மாட்டார்கள் என்பதால், அந்த ஆசாரத்தைப் பொதுவாக எல்லா வாடிக்கையாளர்களுக்காகவுமே கடைப்பிடிக்கிறார் சேத்னா. அதாவது, முந்தின நாள் இரவு, தேவையான அளவுக்கு அரிசி, பருப்பு வகைகளை தனித் தனிப் பாத்திரங்களில் போட்டு வைத்து விடுகிறார்; பிறகு இரவு ஒரு மணிக்கு எழுந்து தண்ணீர் ஊற்றி, ஊற வைக்கிறார். காலை ஆறு மணி முதல் அரவை (வெட் கிரைண்டரில்தான்) ஆரம்பமாகிறது.

சுத்தமான வெள்ளைவெளேறென்ற மாவு, பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்டு வேக வேகமாக சப்ளை ஆவதைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது!

— பிரபுசங்கர்



• ஊசியை உருக்கும் கருவி

# உபயோகித்த ஊசி எங்கே? போயே போச்சு! இட்ஸ் கான்!

நம்மிடம் ஒரு டிஸ்போஸலின் ஊசி மற்றும் சிரிஞ்ஜை நீட்டினார் ஜானகி வெங்கட்ராமன். "இந்தப் பகுதியில் இதை செலுத்துங்கள்" என்று அங்கிருந்த சிறிய, கச்சிதமான கருவி ஒன்றைக் காட்டினார். அப்படியே செய்தவுடன் உள்ளே சில நொடிகள் ஏதோ ஓர் ஓசை; கூடவே உள்ளுக்குள் ஓர் ஒளிக்கிற்று. மீண்டும் வெளியே எடுத்த போது ஊசி மாயமாய் மறைந்துவிட்டிருந்தது!

"ஊசி உள்ளே உருகி சாம்பலாகி விட்டது. ஊசியை உள்ளே செலுத்தியவுடன் உள்ளே படர்ந்த உஷ்ணம் 1700 டிகிரி சென்டிகிரேடாச்சே!" என்றார். கூடவே இந்தக் கருவியை முதல்முறையாக இந்தியாவுக்கு அறிமுகப் படுத்தியிருக்கும் பரத் அஸோஸியேட்ஸ் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரதிநிதி எனும் வகையில் மேலும் பல விவரங்களை அடுக்கினார்:

"வழக்கமாக மருத்துவமனைகளில் ஒருமுறை பயன்படுத்தியவுடன் ஊசியை அருகிலிருக்கும் குப்பைத் தொட்டியில் போடுகிறார்கள். பிறகு அதை மொத்தமாகக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் பயன்படுத்தப்பட்ட பஞ்சு, போன்றவற்றோடு எரித்து விடுவது வழக்கம். எய்ட்ஸ் அல்லது ஹெபடிடிஸ் பி ஆகிய கிருமிகளால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடலில் ஊசி மருந்து செலுத்தும்போது அதிலிருந்து ஓரிரு ரத்தத் துளிகள் ஊசியில் ஒட்டிக் கொண்டிருந்தாலே போதும். அதைக் கையாளும் மருத்துவமனை ஊழியர்களுக்கும் அது பரவ வாய்ப்பிருக்கிறது. ஆனால் டாக்டரின் கண்ணெதிரிலேயே ஊசி எரிந்து விடுவதால், நோய் பரவ வாய்ப்பில்லை! அதைத்தான் எங்கள் கருவி செய்கிறது!

"தவிர நம் நாட்டிலேயே செய்யப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக இதே கருவியை பாட்டரியின் மூலம் இயங்குமாறும் வடிவமைத்திருக்கிறோம். (அவ்வளவு வெப்பத்தை வெளிப்படுத்தக் கூடிய, பிரம்மாண்டமில்லாத பாட்டரியைத் தயாரிப்பது சுலபமாக இருக்கவில்லை) ஆபரேஷன் தியேட்டர் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்குள்கூட இதைக் கையிலேயே சுமந்து செல்ல முடியும். இது ஒரு மிக அவசியமான, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் வைத்திருக்க வேண்டிய கருவி. ஹரியானா மாநிலத்தில் ஊசிகளை மருத்துவர் உடனடியாக அழித்து விட வேண்டும் என்று சட்டமே இயற்றியிருக்கிறார்கள். சீக்கிரமே மற்ற மாநிலங்களிலும் இது நடைமுறைக்கு வரும் என்று நம்புகிறோம்" என்றார்.

இக்கருவி குறித்து சுந்தரம் பாஸனர்ஸ் நிறுவனத்தில் மருத்துவ அதிகாரியாக இருக்கும் டாக்டர் ஆர். பார்த்தசாரதியிடம் கருத்துக் கேட்டோம்:

குப்பைத் தொட்டியிலுள்ள ஊசியைக் கையாள்வதன் மூலம் எய்ட்ஸ் பரவும் என்று சொல்லிவிட முடியாது. ரத்த நாளத்தில் ஊசி மருந்தை ஏற்றினால்தான் இது சாத்தியம். ஆனால் மிகப் பயங்கரமான ஹெபடிடிஸ் பி (மஞ்சள் காமாலையின் ஒரு பிரிவு) கிருமிகள் மேலும் ஆபத்தானவை. ரத்தம் வெளியே எடுக்கப்பட்ட ஓரிரு மணி நேரங்களுக்காவது இவை உயிரோடு இருப்பதால் நோய் பரவ வாய்ப்பு அதிகம்.

"முக்கியமாக மருத்துவமனை ஊழியர்களுக்கு இந்தக் கருவி நல்ல பாதுகாப்பு. அதே சமயம் ஊசி மட்டுமல்ல; சிரிஞ்ஜின் முனையும்கூட அழிந்துவிடும்படி ஓர் அதிகப்படி ஏற்பாட்டை இவர்களால் செய்ய முடிந்தால் மேலும் சிறப்பு" என்றார். ●

— ஜி.எஸ்.எஸ்



Sarali

| Sr | Gm | Pd | NS | SN | dP | mG | rS |
|---|---|---|---|---|---|---|---|
| உண்மை | பேணும் | உள்ளம் | கோயில் | உந்தன் | உள்ளே | வாழும் | தெய்... |

Exercise - 1

| Sr | Sr | Sr | Gm | Sr | G |
|---|---|---|---|---|---|
| கலை | களின் | அறு | பலம் | மனம் | [illegible] |
| SN | SN | SN | dP | SN | |
| இயற | கையின் | அதி | சயம் | எழி... | |

Exercise...





• டாக்டர் சுப்பிரமணியன்

மேற்படி சரளி - ஜண்ட்டை - அலங்காரக் கவிதை வடிவ காசெட்டை வெளியிட்டிருக்கிறார். அமெரிக்காவில் வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் இசை ஆராய்ச்சி செய்து டாக்டரேட் பெற்று, இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறைப் பேராசிரியராக இருந்து வருகிறார்.

ஸ்வர ஒலிகளுக்குப் பதிலாக, தமிழில் கவிதையாகப் பிரித்துப் பிரித்துக் கொடுத்துவிட்டால், பயலுவதற்கு எளிது என்று முடிவு செய்ததும், புதுக் கவிதைக் கவிஞர் எஸ். வைதீஸ்வரனிடம், இதற்கு உதவ முடியுமா என்று கேட்டிருக்கிறார். 'முயன்று பார்க்கிறேன்' என்றார்

# சரளி வரிசைக்கு சாகித்யம்!

கர்நாடக இசையில் ஆரம்பப் பாடமாக சரளி வரிசை, ஜண்ட்டை, அலங்காரம் என்று இருக்கிறதல்லவா?

இவற்றை சரிகமபதநிச - சநிதபமகரிச என்று அதனதன் ஸ்வர ஒலிப்படி சொல்லிப் பாருங்கள். சங்கீதம் கற்பிக்கும்போது, அப்படித்தானே சரளி வரிசையில் சொல்லித் தருகிறார்கள்?

ஆனால் அவற்றுக்குப் பதிலாகத் தமிழ் வார்த்தைகளைக் கவிதை வடிவில், அந்தந்த ஸ்வர ஒலிகளுக்குக் கொடுத்து விட்டால் கற்றுக் கொள்ள வருகிற குழந்தைகளுக்கு சரளி வரிசை வெகு எளிதாக மனப்பாடம் ஆகி விடுகிறது! அதேமுறையில் ஜண்ட்டைக்கும், அலங்காரத்துக்கும், எளிமையான கவிதை வரிகள்!

காரைக்குடி சாம்பசிவய்யர் பரம்பரையில் வந்த வீணைக் கலைஞர் பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணியன், 'பிருஹத்வனி' என்ற தமது சங்கீத ஆராய்ச்சி அமைப்பின் மூலமாக, வைதீஸ்வரன். தமிழும், இசையும் சேர்ந்து பயிலுவிக்க இது ஓர் அபூர்வ சந்தர்ப்பம் அல்லவா?

''அர்த்தமுள்ளதாகவும் இருக்கணும், உணர்ச்சிபூர்வமாகவும் இருக்கணும், இயற்கையாகவும் அமையணும்!'' என்று டாக்டர் சுப்பிரமணியன் சொன்னதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டார் கவிஞர் வைதீஸ்வரன்.


இரண்டு மூன்று மாதங்கள் ஆயிற்றாம், ஸ்வரங்களுக்குக் கவிதை வடிவம் கொடுக்க. ''எனக்குள் இருந்த இசையைக் கண்டுபிடித்து வெளிக் கொண்டு வந்தவர் டாக்டர் சுப்பிரமணியன்!'' என்கிறார் வைதீஸ்வரன்.


குரலோடு வீணையும் மிருதுவாக ஒலிக்கிறது. ''ஸ்தான சுத்தத்தோடு சொல் சுத்தமும் வர, வீணை உதவுகிறது!'' என்கிறார் டாக்டர் சுப்பிரமணியன்.

— சித்தார்த்

புதுமை – 5

# கோலங்கள்





கலாக்ஷேத்ராவில் அசத்தலாக ஒரு விழா. அந்தப் புத்தகத்தை சிலாகித்து வெளியிட்டவர் பிரபல சங்கீத மேதை டி.கே. பட்டம்மாள். எனில் அது இசை தொடர்பான நூலா என்றால் இல்லை. கோலப் புத்தகம்.

கடைகளில் மானாவாரியாகக் கிடைக்கிற புள்ளிக் கணக்குக் கோலங்கள் இல்லை அவை.

கோலத்தைக் கலையாக மட்டுமல்லாமல் தெய்வீகமாகத் தரிசித்து உணர்வுகளை விரலில் இறக்கி வரையப்பட்டிருந்தன.

வரைந்தவரின் வீட்டுக்காரர் சாதாரணமானவரில்லை. தேசம் முழுக்கத் தெரிந்தவர். பெரிய கலைஞர், சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர். அவரது மனைவியின் கோலங்கள் கலையழகோடு இருப்பதில் வியப்பென்ன?

மிக கனமான, இருநூற்றைம்பது ரூபாய் விலையுள்ள, நேர்த்தியான தாள், அட்டையுடன் ஒரு என்ஸைக்ளோபீடியா கெட்டப்பில் கோலப் புத்தகம் வெளிவருவது அநேகமாக இது முதல் தடவை.

இனியும் உடைக்காமல் இருப்பது முறையல்ல. கோலங்களை வரைந்தவர் பெயர் திருமதி ருக்மிணி கிருஷ்ணமூர்த்தி. அமரர் கல்கியின் துணைவியார் என்றால் சுலபமாகப் புரியும்.

பி.கு: புத்தக விற்பனை மூலம் வசூலாகும் தொகையை, அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு அளிக்கப் போகிறார்கள்!

– ஜீண்டு

# இன்டர் நெட் தெரியும், டெம்பிள் நெட்?




"சின்ன வயசிலேயே இவனுக்குக் கோவில் என்றால் கொள்ளை ஆசை" என்றார், கன்னிகேஸ்வரனின் தந்தை.

அந்த 'கொள்ளை ஆசை' இன்றைக்கு கம்ப்யூட்டரில் டெம்பிள் நெட் என்று புதுமையான வடிவமெடுத்திருக்கிறது.

இன்று அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் கணிப்பொறியில் டேட்டா பேஸ் நிர்வாகியாக உயர் பதவி வகிக்கும் கன்னிகேஸ்வரன், நம்ம ஊர்க்காரர். அறிவியல் ஆசையோடு ஆலய ஆசையும் இவருக்கு அலாதி!

"டெம்பிள் நெட்' என்பது நான் ஆலயங்களுக்காகவென்றே அமைத்துள்ள பிரத்யேக 'வெப்ஸைட்'.

இதற்குள் புகுந்தால் இன்றைய தேதியில் இரண்டாயிரத்து ஐம்பது கோயில்களைத் தரிசிக்கலாம்.

ஒவ்வொரு கோயிலின் இருப்பிடம், அது பாடல் பெற்ற ஸ்தலமா, அல்லவா என்ற விவரம், வழிபடு தெய்வத்தின் பெயர், வழிபாட்டு முறை, சுருக்கமான ஸ்தல புராணம், அக்கோவிலைக் கட்டியவர் யார், வரலாற்றுச் சிறப்பு, கட்டடக் கலையின் மேன்மை, சிற்பங்களின் தனித் தன்மை என்று அவ்வளவு விவரங்களும் கணிப்பொறித் திரையில் கண்சிமிட்ட வைத்திருக்கிறா 'கன்னிக்ஸ்'!

அந்தந்தக் கோவிலில் நடைபெறும் முக்கிய உற்சவங்கள் பற்றிய சுருக்கத்தையும் தெரிந்து கொள்ள முடியும்.

இந்த இளைஞரின் நான்கு வருடத் தனி முயற்சி இது.

உலகிலேயே இன்டர் நெட்டில் இப்படி ஒரு புதுமையான முயற்சி மேற்கொள்ளப் பட்டிருப்பது இதுவே முதல் தடவை. எனவே கடல் கடந்து வாழும் பக்தர்களுக்கு விரல் நுனியில் கிடைக்கும் இந்த விவரங்கள், ஐஸ் க்ரீமாக இனிக்கிறது என்பது கன்னிகேசவரனுக்கு வரும் பாராட்டுகளிலிருந்து தெரிகிறது.


தனது 'டெம்பிள் நெட்' தகவல் வலைக்குள் வருபவர்கள் என்றேனும் ஒரு நாள் அந்த ஆலயங்களை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் இந்தியப் பயணம் மேற்கொள்ளும் டூரிஸ்டாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை மண்டிக் கிடக்கிறது இந்த இளைஞரிடம். சுற்றுலா வளர்ச்சி அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தங்கச் சுரங்கம் அல்லவா?

கன்னிக்ஸ் தெரிவிக்கும் விருப்பம்:

"எந்தக் கோவிலைப் பற்றிய எந்த விவரம் உங்களில் யாரிடம் இருந்தாலும் எனக்குத் தாருங்கள். சிறிய கோவிலா, பெரியதா என்பதல்ல; இந்தியாவில் ஒரு கோயில் என்பதுதான் முக்கியம். புகைப்படம் இருந்தால் அனுப்புங்கள். டெம்பிள் நெட்டில் ஒரு தகவல் சேர உதவியாக இருந்த புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும்."

- ராணிமைந்தன்

**புதுமை—6**



# றுப்புப் பணமேவ ஜெயதே!

நிதியமைச்சரின் முயற்சிகளுக்குப் பலன் கிடைத்திருக்கிறது. வருமானவரி செலுத்தாமல் பதுக்கி வைத்திருந்தவர்களுக்குச் சலுகை காட்டி, கிட்டத்தட்ட 10050 கோடி ரூபாய் வரித் தொகை பெற்றிருக்கிறது அரசாங்கம். 33,000 கோடி ரூபாய் கணக்கில் வந்ததன் மூலம் பெறப்பட்டது இத்தொகை.

இத்திட்டம் ஆரம்பத்தில் அதிக வரவேற்புப் பெறவில்லை. ஆனால் திட்டத்தின் முடிவு தேதி (டிசம்பர் 31) நெருங்க நெருங்க, அரசு நூதன முறைகளில் திட்டத்தை விளம்பரப்படுத்தியது. இந்த விளம்பரங்களுக்கு நல்ல பலனும் இருந்திருக்கிறது. டிசம்பர் 31 அன்று நள்ளிரவு வரை வருமானவரி அலுவலகங்கள் இயங்கியிருக்கின்றன. அன்றைய இரவு, ப. சிதம்பரம் சென்னை வருமானவரி அலுவலகத்திற்கு நேரில் சென்று பார்த்திருக்கிறார்!

இத்திட்டத்தின் மூலம், எதிர்பாராத அளவுக்குத் தொகை கிட்டியிருப்பது பல பிரச்னைகளைத் தீர்க்கும் என்கிறார்கள். Vdis வருவாயாகக் குறிப்பிடப் படும் 10050 கோடி முழுவதும் அரசிடம் வந்து சேர்ந்துவிட்டதா? அல்லது தங்கள் வருமான கணக்குகளைச் சமர்ப்பித்தவர்களுக்கு, வரி செலுத்த மார்ச் 31 வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதா என்பது தெளிவாக இல்லை.

எப்படியிருந்தாலும் நிதியமைச்சகம் சந்தோஷமடையத்தான் செய்யும். பல தரப்புகளிலிருந்தும் எதிர்பார்த்த வருவாய் மிகவும் குறைந்து போயிருக்கிற இந்த நிதியாண்டில், எதிர்பாராத அளவுக்கு Vdis திட்டம் கைகொடுத்திருக்கிறது.

ஆனால், சத்யமேவ ஜெயதே என்கிற வாசகத்தை தேசிய கோஷமாகக் கொண்டுள்ள நமது நாட்டில், கறுப்புப் பணத்தை வெளிக் கொணரவும் வரி வசூலிக்கவும் சலுகைகளை அளிக்க வேண்டியிருந்த தென்பது உறுத்தலான விஷயம்தான்.

ஆண்டு தோறும் ஒரு லட்சம் கோடி ரூபாய் கறுப்புப் பணம் இந்தியாவில் உருவாகிறது என்று ஜோதி பாசு ஒரு முறை கூறினார். அதை ஒப்பு நோக்க 33,000 கோடி என்பது கண்டைக்காய் தொகை!

மேலும் Vdis இன் வெற்றி என்பதே நமது வரி வசூல் அமைப்பின் தோல்வியைத்தான் பறைசாற்றுகிறது. தனி நபர்கள் மட்டுமின்றி, கம்பெனிகளும் உண்மையான வருவாயை மறைத்து வைத்துள்ளன; வரியே செலுத்தவில்லை - என்கிற அதிர்ச்சி தரும் விவரம் உறுதியாகிறது.

விடிஐஎஸ் மூலம் கிடைக்கும் தொகை என்பது நாட்டின் பொருளாதார பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வும் அல்ல. இந்தக் கூடுதல் வருமானம் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கிடைக்கப் போவதில்லை.

எனவே, நிதியமைச்சக அதிகாரிகள் மகிழ்ச்சியில் மூழ்கிவிடாமல் எதிர்காலம் பற்றி யோசிக்க வேண்டும். வரி விதிப்புச் சட்டங்களை எப்படி அமல்படுத்தினால் கம்பெனி வரிகள் ஒழுங்காகச் செலுத்தப்படும் என ஆராய வேண்டும்.

அடிப்படை உண்மை என்னவெனில், பொருளாதாரம் முன்னேறாவிட்டால் அரசுக்கு வருவாய் கூடப் போவதில்லை.

கறுப்புப் பணம் அதிகரிப்பதற்கு சினிமா, ரியல் எஸ்டேட் ஆகிய இரு துறைகளே முக்கிய காரணம் என்று நம்பப்படுகிறது. இவற்றைச் சீர் செய்ய அரசு முயற்சி செய்தால், நீண்டகாலத் தீர்வு கிடைக்கும்.

— வி. கோபாலன்

**— முதல் முறையாக வாய் திறக்கிறார் சேஷன்!**

**சமீபத்தில் சென்னை வந்திருந்த முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷனிடம், "எப்படி சார் இருக்கிறது ரிடையர்டு வாழ்க்கை?" என்று கேட்டதும், தமக்கே உரிய கம்பீரமான குரலில், தமிழிலும் ஆங்கிலத்திலுமாய்க் கலந்து பேச ஆரம்பித்தார்:**

"பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின், கடந்த பனிரெண்டு, பதிமூனு மாதங்களாய் குறிப்பிட்டு, எந்த வேலையும் இல்லை என்பது வாஸ்தவம். ஆனாலும் நான் பிஸியாகவே இருக்கிறேன். 'தேசபக்தி' இயக்கப்பணி, இடையில் ஜனாதிபதி தேர்தல், இன்னமும் தினத்துக்கு இருபது மணிநேரம் பிஸிதான்!"

**"தேசபக்தி டிரஸ்ட்' என்ற இயக்கத்தை எதற்காகத் துவக்கியிருக்கிறீர்கள்?"**

"ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், தேச புனருத்தாரணம்தான் அதன் நோக்கம். ஆங்காங்கே, தேச நலனில் அக்கறை கொண்ட எவரும் சேர்ந்து, கிளையை ஆரம்பிக்கலாம். ஒருவருக்குப் பத்து ரூபாய் சந்தா. உறுப்பினர்கள் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்று விதிமுறைகள் உண்டு! ஊழலை எதிர்த்துப் போராடலாம்: ஊழல் அதிகாரிகளிடம், 'நாங்கள் உங்களைப் கண்காணிக்கிறோம்' என்று எச்சரிக்கலாம். நேர்மையான அதிகாரிக்கு சங்கடங்கள் வந்தால், அதனைத் தீர்க்க உதவலாம். குடி தண்ணீர், மின்சார வசதி, டெலிபோன், ரேஷன் என்று பொதுப் பிரச்னைகள் குறித்த மக்கள் குறைகளைத் தீர்க்க, சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். அவசியமானால் சத்யாகிரகம் கூடச் செய்யலாம். கோர்ட்டுக்குக் கூடப் போகலாம். செய்யக் கூடாதவைகளில் மிக முக்கியமானது வன்முறைதான். வார்த்தைகளில் கூட வன்முறையைக் கையாளக் கூடாது!"



**"நீங்கள் எதிர்பார்த்தாற்போல், இந்த அமைப்புக்கு மக்களிடம் வரவேற்பு உள்ளதா?"**

"எப்போதும், எதிலும், எதிர்பார்ப்பு அளவுக்கு யதார்த்தம் அமைவதில்லை. ஆனாலும் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. தமிழகம், கேரளா,

# அரசு வீட்டை இன்னும் காலி செய்யாதது ஏன்?

மகாராஷ்டிரா, மேற்கு உ.பி. போன்ற பகுதிகளில் தேசபக்தி இயக்கத்தின் கிளைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. நாக்பூர், ஜாம்ஷெட்பூர் போன்ற நகரங்களிலும் நல்ல ரெஸ்பான்ஸ். நாட்டின் பல பகுதிகளிலும் இன்னும் இந்த இயக்கம் பரவி, வளரவில்லை என்றால் அதற்கு நாங்கள் சரிவர முயற்சி எடுக்கவில்லை என்பதே காரணம். காலப்போக்கில், தங்கள் பொறுப்புகளை உணர்ந்து, தமக்காக மக்கள் தாமே போராட வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுதான் எங்கள் நோக்கம்!"

**"சுதந்தரமடைந்த கடந்த ஐம்பது வருடங்களில் லஞ்சமும், ஊழலும் அதிகரித்துப் போயிருப்பதற்கு என்ன காரணம்?"**

"பல காரணங்களைச் சொல்லலாம். அடிப்படையில் மக்களுக்குத் தங்கள் உரிமைகளைப் பெறுவதில் இருக்கிற ஆர்வம், தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்பதில் இல்லை. எது என்றாலும் குறுக்குவழியில் காரியத்தை முடிக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். பையன் பரீட்சையில் பாஸ் பண்ண வேண்டுமா, ஸ்கூல் சீட் வேண்டுமா, ஆஸ்பத்திரியில் இடம் தேவையா? லைசென்ஸ் வாங்க வேண்டுமா? அங்கீகரிக்கப்பட்ட பிளானை மாற்றி வீடு கட்ட வேண்டுமா? எதுவானாலும் பணம் கொடுத்து சாதித்து விடலாம் என்ற எண்ணம் வந்து விட்டது!"



**"அதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?"**

"அடிப்படையில் கேரக்டர் கெட்டுப் போச்சு! தர்மம்தான் அடிப்படை என்ற எண்ணம் போய் விட்டது. மனிதனுக்கும், மிருகத்துக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம், மனிதனால், எது சரி, எது தவறு என்று பகுத்து அறிய முடியும். ஆனால் இன்றைக்கு ஒரு காரியம் தவறு என்று தெரிந்தே அதைச் செய்கிற மென்டாலிடி வந்து விட்டது. அரசாங்க அதிகாரி, போலீஸ், ஜர்னலிஸ்ட், இஞ்சினியர், டாக்டர், சார்டர்டு அக்கவுண்டெண்ட், இப்படி எல்லாரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் 'கரப்ட்' ஆகி விட்டார்கள். ஆனால் மக்களிடையே விழிப்புணர்ச்சி வந்தால், தர்மத்தைக் கடைப்பிடிக்கிற மனப்பான்மை வந்தால், லஞ்ச, ஊழலைப் பெருமளவில் கட்டுப்படுத்தி விடலாம். இதை மனத்தில் வைத்துக் கொண்டுதான், அடுத்த தலைமுறையினரிடம், நம்பிக்கையுடன் கல்லூரிகள் பலவற்றுக்கும் போய் உரையாற்றுகிறேன். அவர்களும் பாஸிடிவாக எடுத்துக் கொள்ளுகிறார்கள்."

**"நீங்கள் தலைமைத் தேர்தல் கமிஷனர் என்ற முறையில் ஆரம்பித்து வைத்த சீர்திருத்தங்கள், இப்போது கொஞ்சம் பலனளிக்கத் துவங்கியுள்ளது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"**

"அது பற்றி நான் நினைக்க என்ன இருக்கிறது? புதுக்கோட்டையில் இடைத் தேர்தல் நடந்த போது, மறுபடி மைக், போஸ்டர் எல்லாம் பழையபடி ஆகி விட்டதாக அரசல் புரசலாய் நியூஸ். நான் பார்க்கவில்லை. அது நிஜமா இல்லையா என்று ஆராய்வதிலும் இன்ட்ரஸ்ட் இல்லை. நான் கண்டிப்புக் காட்டிய விதிகளையெல்லாம், கடைப்பிடிக்கிறார்களா, எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கிறார்கள் என்று, இந்தத் தேர்தல் முடிகிற போது தெரிந்து விடுமே! சேஷனின் பணிக்கு நூத்துக்கு ஐம்பது மார்க் போட்டால், இப்போது நாற்பது மார்க் தருவதா, ஐம்பது தருவதா, இல்லை அறுபது தருவதா என்று நீங்களே பார்த்து முடிவு செய்யலாமே!"

**"ஜனாதிபதி தேர்தலில் ஜெயிப்பதற்கு துளியும் வாய்ப்பு இல்லை என்ற போதிலும் கூட போட்டியிட முடிவெடுத்தீர்களே! என்ன காரணம்?"**

"இரண்டு காரணங்கள், ஒன்று என்னாலும் போட்டி போட முடியும் என்று காட்டுவதற்கு. இரண்டாவது உலகின் பெரிய ஜனநாயக நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க, நம்நாட்டு அரசியல் கட்சிகள் ஜன

நாயகம் அற்ற முறையைக் கடைப்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது! காங்கிரஸ், பா.ஜ.க. மார்க்சிஸ்ட் என்று எந்தக் கட்சியாவது, ஜனநாயக முறையில், தங்கள் கட்சி எம்.பி., எம்.எல்.ஏ.களின் கருத்துக்களை அறிந்து, ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்தார்களா? இதுதான் ஜனநாயகமா? இதற்கு என் எதிர்ப்பைக் காட்டும் விதமாகத் தான் தேர்தலில் நான் போட்டியிட முடிவு செய்தேன். சிவசேனா என்னை ஆதரித்தது. நான் போட்டியிடுகிறேன் என்றதும், வேட்பு மனுவை ஐம்பது பேர் முன்மொழிய வேண்டும், ஐம்பது பேர் வழிமொழிய வேண்டும் என்று அரசாங்கம் சொன்னது. எனக்காக அப்படி மாற்றினார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு வேட்பாளரை ஐம்பது பேர் வழிமொழிய வேண்டும் என்பதே அசிங்கம். திரு. கே.ஆர். நாராயணன் மீது எனக்கு மிகுந்த மரியாதை, அபிமானம் உண்டு. அவர் அறிவு ஜீவி! நேர்மையான உயரதிகாரி! நாணயஸ்தர்! தேசபக்தர்! அவரை 'தலித்' என்ற ஒரே தகுதிக்காக ஜனாதிபதியாக்க வேண்டுமென்று சிலர் சொன்ன போது எனக்கு வருத்தமாக இருந்தது!"

**"தேர்தல் கமிஷனராக இருந்தபோது அரசியல் கட்சிகளிடம் ரொம்ப கெடுபிடியாக நடந்து கொண்டதுதான், அரசியல் கட்சிகள் உங்களை ஆதரிக்காமல் போனதற்குக் காரணமா?"**

"என்னோட போட்டி என்பது ஒரு டோக்கன் புரொட்டெஸ்ட். அவ்வளவுதான். எனக்கு ஏன் கட்சிகள் வோட்டுப் போடவில்லை என்று நான் ஆராயவில்லை அதற்கு நேரமும் இல்லை."

**"அகில இந்திய அளவில் முதல் ரேங்க் வாங்கிய ஐ.ஏ.எஸ்.காரர் என்ற அடிப்படையில் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள். தமிழ் நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ்ஸில் தேர்வு பெறுகிறவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறதே! இதற்கு என்ன காரணம்!"**

"இங்கே முதலில் இங்கிலீஷைக் குட்டிச்சுவர் பண்ணினார்கள். அப்புறம் கல்வியின் தரத்தையே குட்டிச்சுவர் பண்ணினார்கள். ஒரு வரி தப்பில்லாமல் இங்கிலீஷ் பேச, எழுதத் தெரியவில்லை. பின்தங்கிய மாணவர்களை முன்னேற்றுகிறேன் பேர்வழி என்று, அவர்களை மேலே கொண்டு வராமல் எல்லாரையும் கீழே பிடித்து இழுத்து விட்டார்கள். நான் சொல்வதற்கும், இட ஒதுக்கீட்டுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்!"

**"பதவியிலிருந்து ஓய்வு பெற்று ஒருவருடத்துக்கு மேலாகியும், இன்னும் அரசாங்க வீட்டை நீங்கள் காலி செய்யவில்லை என்று ஒரு விமர்சனம் எழுந்துள்ளதே?"**

"அது பெரிய கதை. ராஜீவ் காந்தியின் செக்யூரிடியை கவனிக்க ஆரம்பித்தது முதல் எனக்கும் அரசு பாதுகாப்புத் தர ஆரம்பித்தது. தலைமைத் தேர்தல் கமிஷனரான பின்னர் எனக்கு இஸட் பிளஸ் (Z Plus) பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்தப் பிரிவு பாதுகாப்புப் பெறுபவர்கள் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசுதான் பாதுகாப்பான வீடு வழங்க வேண்டும் என்பது கோர்ட் தீர்ப்பு. நான் ரிடையர் ஆனவுடனேயே, எனக்கு மாற்று வீடு தருகிறீர்களா என்று கேட்டு கடிதம் எழுதி விட்டேன். இன்று வரை பதில் இல்லை."

**"சென்னையில் செட்டில் ஆகப் போவதாய்க் கேள்விப்பட்டது உண்மைதானா?"**

"சென்னையில் எனக்குச் சொந்த வீடு இருக்கிறது. அதில் ரிப்பேர் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு மாதத்தில் வீடு ரெடியாகி விடும். என் மனைவிக்கும் சொந்தமான வீடு ஒன்று பெங்களூரில் உள்ளது. அதுவும் குடியேறத் தயார் நிலையில்தான் உள்ளது. சென்னையிலா, பெங்களூரிலா எங்கே செட்டில் ஆவது என்று இன்னும் முடிவு செய்யவில்லை."

**"உங்களோட பொழுது போக்கு என்ன?"**

"இன்டர்நெட் எனக்கு ரொம்ப ஆர்வமான விஷயம். கர்நாடக இசையில் ஆர்வம் உண்டு. அப்புறம் கம்ப்யூட்டர் ஜோதிடம். இன்ன சப்ஜெக்ட் என்று இல்லாமல் நிறைய எழுதுகிறேன். யார் புத்தகமாய் வெளியிடப் போகிறார்கள் என்று தெரியாது. நிறையப் படிக்கிறேன். நிறைய இளைஞர்கள், ஆலோசனை கேட்டு கடிதம் எழுதுகிறார்கள்; நேரில் வருகிறார்கள்... அவர்களுக்கு உதவுகிறேன்."

**"பாராளுமன்றத்துக்குப் போட்டியிடப் போகிறீர்களாமே?"**

"இன்னும் அது பற்றி முடிவு செய்யவில்லை.

**"சிவசேனை ஆதரவில் மும்பையிலிருந்து போட்டியிடப் போகிறீர்கள் என்று..."**

"இப்போதைக்கு என் மனைவியே இந்தக் கேள்வியைக் கேட்டாலும் கூட, என் பதில் 'இன்னும் முடிவு செய்யவில்லை' என்பது தான்." ●

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படங்கள் : **யோகா**




# சீடன் தயாராகும்போது குரு தோன்றுவார்!

அமெரிக்காவின் பிரபல செனட்டர் (பாராளுமன்ற உறுப்பினர்- மொத்தம் உள்ள நூறு பேரில் ஒருவர்) புல்பிரைட். அவர் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி அமெரிக்க மாணவர்கள், பேராசிரியர்கள் வெளிநாடுகளில் சென்று மேல் படிப்பு படிக்கவும் அதே போல இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் உள்ள படித்த மாணவர்கள், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் படிக்கவும் அமெரிக்கா, நிதி உதவும் திட்டம் அது. இதன் மூலம் நமது நாட்டு சிறந்த மாணவர்களும் பேராசிரியர்களும் அமெரிக்கா சென்று டாக்டர் படிப்பை மேற்கொள்ளலாம்; டாக்டர் பட்டம் இருந்தால் மேற்கொண்டு ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம். 'புல்பிரைட் அறிஞர்' என்ற பெருமை இதற்குண்டு. இத்திட்டத்தின்படி அமெரிக்கா சென்று படிக்க 1962ல் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போது நான் கிண்டி பொறியியல் கல்லூரியில் (இன்றைய அண்ணா பல்கலைக்கழகத்தில்) உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எனது வாழ்வின் சுவாரஸ்யமான காலகட்டம் அது.

அமெரிக்கா செல்வது, அதுவும் புல்பிரைட் திட்டத்தில்- ஒன்றும் சுலபமான காரியமல்ல. 1952ல் முதன் முதலாக இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இளங்கலைப் பட்டப்படிப்பு போதும் என்று தகுதியைக் குறிப்பிட்டிருந்தார்கள்.

1952ல் நான் அமெரிக்கா செல்ல விண்ணப்பித்தேன். கிடைக்கவில்லை. அடுத்த ஓராண்டில் வெறும் இளங்கலைப் பட்டம் போதாது, விண்ணப்பிப்பவர்கள் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று தகுதியை உயர்த்தி விட்டார்கள். நான் விடவில்லை. 1955ல் என் தகுதியை உயர்த்திக் கொள்ள மேல்படிப்புக்கு அண்ணாமலையில் சேர்ந்தேன். வேதியலில் எம்.ஏ. பட்டம் பெற்றேன். மீண்டும் 1960ல் சென்னை பல்கலைக்கழகத்தில் மற்றுமோர் எம்.எஸ்ஸி பட்டம் (ORGANIC CHEMISTRY) பெற்று- அதாவது இரண்டு முதுகலைப் பட்டங்கள்- பெற்று மீண்டும் விண்ணப்பித்தேன்.

அமெரிக்கா செல்ல என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். எனக்கு வயது 34 அப்போது. வயதாகிவிட்டதே என்று நான் கவலைப்படவில்லை. அமெரிக்காவுக்கு நான் சென்றபோது கல்லூரிப் படிப்பை நேரடியாக முடித்து விட்டு 22 வயது, 23 வயதில் அமெரிக்கா வந்த, பல பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இருந்தார்கள். நாம் ஏதாவது பேசினால், உடனே "நீங்களெல்லாம் பழங்காலம் சார். பழைய கதையைப் பேசுகிறீர்கள்" என்று வாய்க்கு வாய் எனக்கு வயதாகி விட்டதை சுட்டிக் காட்டினார்கள். எனக்குக் கோபம் வந்தது. நான் அவர்களைக் கேட்டேன்: "என்ன ஐயா இது! இளவயதிலேயே அமெரிக்கா வந்து நீங்கள் என்ன ஞான

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

சம்பந்தர் மாதிரி பதிகமா பாடிவிட்டீர்கள்?" என்றேன்.

"இந்த வயதிலாவது வருவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்ததே என்று நான் சந்தோஷப்படுகிறேன்."

அதற்குப் பிறகு அவர்கள் வாய் திறப்பதில்லை. அதுமட்டுமல்ல; இன்னும் கூட ஏதோ அவர்களில் பலர் வருமானம் என்பதற்காக பேராசிரியர் வேலைபார்க்கிறார்களே தவிர, ஏதும் அதிலும் முத்திரை பதித்துவிடவில்லை.

மேல்படிப்புக்கு அமெரிக்கா செல்ல ஆசைப்படும் பலர், தங்கள் பெற்றோருடன் என்னைப் பார்க்க வருவார்கள். ஒரு சிலரே "அமெரிக்காவுக்கு மேற்படிப்புக்கு செல்ல என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்பவர்கள். பெரும்பாலானோர் மேற்படிப்புக்கு வேலை பார்த்துக் கொண்டே படிக்க நீங்கள் சிபாரிசு செய்ய முடியுமா என்றுதான் கேட்பார்கள். இன்னும் சிலர் ஒருபடி மேலே தாண்டி "உங்கள் கம்பெனியில் வேலை கொடுங்கள்" என்று கேட்பார்கள். அவர்கள், பெற்ற பிள்ளையை நம்மிடம் தள்ளிவிட்டு "உங்கள் பிள்ளை போல் பாவிக்க வேண்டும்" என்று சொல்வார்கள்! எனக்கு சிரிப்புத்தான் வரும்.

நான் அவர்களிடம் சொல்வதெல்லாம் இதுதான். "நடப்பு விஷயம் தெரியாது, ஏதோ நான் அவர்களுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்து அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவிட முடியும் என்று எதிர்பார்த்து வருகிறீர்கள். அது அப்படி முடியாது. நீங்கள் ஏமாற்றத்துடனே தான் திரும்புவீர்கள்!'' என்று சொல்வேன்.


மேல்படிப்புக்குச் செல்ல விரும்புபவர்கள், பொதுவாக, நல்ல மார்க் வாங்கி இருக்க வேண்டும். அமெரிக்கப் பல்கலைக் கழகம் வைக்கும் மொழித் தேர்விலும், தகுதித் தேர்விலும் தேற வேண்டும். மிக முக்கியமாக, தங்கள் தகுதிகளை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். போதுமான மேற்படிப்புப் பட்டம் உள்ளவர்கள், ஏதாவது தொழில் துறையில் அனுபவமோ அல்லது ஆராய்ச்சித் துறையில் பட்டம் பெற்றிருக்கவோ வேண்டும். அப்படித் தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ளாமல், இருப்பதை வைத்துக் கொண்டே அதே நிலையில் இருந்து கொண்டு அதிர்ஷ்டமில்லை என்று அங்கலாய்ப்பவர்கள்தான் நம் ஊரில் அதிகம்.

நான் பெருமுயற்சி செய்து மேற்படிப்பு படித்து என்னைத் தயார் செய்து கொண்டேன்.

இன்னும் எனக்கு நன்கு நினைவிருக்கிறது. எனது மாணவராய் இருந்த ஏ.சி. முத்தையா ஒரு கடிதத்தில் "நான் உங்களது சளைக்காத மனம் கண்டு வியக்கிறேன்'' என்று எழுதியிருந்தார். 1952ல் அமெரிக்கா செல்ல விண்ணப்பித்த நான், பத்தாண்டுகள் கழித்து 1962ல் அமெரிக்கா சென்றேன். பத்தாண்டுகள் போயிற்றே என்று நான் கவலைப்படவில்லை. பத்தாண்டுகள் கழித்தாவது போக முடிந்ததே என்கிற சந்தோஷம் தான், இன்னும்.

லூயிஸ் பாஸ்டியூர் என்ற பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானி, கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் காற்றில் மிதக்கின்றன, தண்ணீரில் இருக்கின்றன என்று (மைக்ராஸ்கோப்) நுண்தரிசினி மூலம் உலகிற்குச் சொன்னவர். அவர் சொல்வார்: "அதிர்ஷ்டம் என்பது என்ன? அதிர்ஷ்டம் என்பது இரண்டும் இரண்டும் நான்கு என்கிற கணக்கு போல. அதாவது தயார் நிலை+வாய்ப்பு= அதிர்ஷ்டம்'' என்பார். முதலில் தயார் நிலையில் நீங்கள் இருக்க வேண்டும்; அறிவு, அனுபவம், படிப்பு என்று எல்லா விதங்களிலும் நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதாவது உங்கள் தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்தத் தயார் நிலையில் இருக்கும்







போது வாய்ப்பு வருமானால், நீங்கள் உடனடியாக அதைக் கவ்விப் பிடித்துக் கொள்ளலாம்; அதுதான் அதிர்ஷ்டம். தயார் நிலையில் நீங்கள் இல்லாதபோது தகுதி இல்லாத போது-எத்தனையோ வாய்ப்புக்கள் அந்தத் துறையில் இருந்தாலும் உங்களை அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள். நீங்கள் தயார் நிலையிலிருந்தால் வாய்ப்பு இன்றில்லாவிட்டால் நாளை நிச்சயமாக வரும். ஒரு வாய்ப்பு தவறினாலும் மறு வாய்ப்பில் பலன் கிடைக்கும். ஆகவேதான் எப்போதும் தயார் நிலையில் நம்மை வைத்துக் கொள்ள வேண்டும்.

இதையே வேத உபநிடதங்களில் அழகாகக் கூறுவார்கள்- ''சீடன் தயாராக இருக்கும்போது குரு தோன்றுவார்'' என்று. பலர் ஆன்மீகத் தேடலில் ஈடுபடுகிறார்கள். சரியான குரு கிடைக்கவில்லையே என்று அலைவார்கள்; சீடன் உண்மையிலேயே மிகுந்த ஆர்வம் கொண்டு, ஒரு ஆன்மீக தாகத்துடன் இருக்கும் போது, குரு தானே தோன்றுவார் என்பது உபநிடத உண்மை மட்டுமல்ல; அனுபவ உண்மையும் கூட.

அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலின் மருந்தைக் கண்டு பிடித்தார் என்றால் அவர் தயார் நிலையில் இருந்தார் என்பதை நாம் உணர வேண்டும். முந்திய நாள் சுட்ட இட்லியை மூடி வைத்துவிட்டுப் போனால் அதில் பச்சை நிறக்காளான் வளர்வதை தினமும் நீங்களும் நானும் நம் வீட்டுப் பெண்மணிகளும் தான் பார்க்கிறோம். ஆனால் அலெக்சாண்டர் பிளெமிங் அதைப் பற்றிய அறிவுடன் தயார் நிலையில் இருந்தார். எனவே அவர் பார்த்த பூஞ்சைக்காளான் அவருக்குப் பெரிய கண்டுபிடிப்பாயிற்று. எனவே நினைவில் கொள்வோம்: எதை நாம் விரும்புகிறோமோ, அதற்கு முதலில் நம்மைத் தயார் செய்து கொள்வோம். அதன்பின் அது தானாகவே வரும், நம்மை நோக்கி!

(வளரும்)



''சார் பிச்சை போடுங்க...''

''சில்லறை இல் லேப்பா.''

''இருபது நாளா இதையே சொல்றீங்க. தினம் அரை ரூபா கணக்கு போட்டா பத்து ரூபாய் ஆகுது. அதனால இன்னிக்கு நோட்டா குடுத்திடுங்க!''

- விஎஸ். அனந்தராமன்



"நம்ம தலைவர் மாதிரி அறுவை ஜோக் அடிக்க யாராலும் முடியாது!"

"என்ன சொன்னாரு?"

''பத்திரிகைக்காரங்க, 'குண்டு வெடிப்புக்கு யார் காரணம்'னு கேட்டப்ப, 'அதை வைச்சவங்க தான்'னு பிளேடு போட்டாரே!"

- பா. ஜெயக்குமார்

“எனக்கு கனடா பிடிக்கவில்லை. இந்தியா போகிறேன். என்னைத் தேட வேண்டாம்.”

என்று எழுதினார் ராதாகிருஷ்ணன். மெசேஜ் பேடில் மாட்டினார். பெட்டியை எடுத்துக் கொண்டார். பாஸ்போர்ட், டிக்கெட்டை சரிபார்த்தார். பெரிய பெட்டியை உருட்டிக் கொண்டே நடந்தார். லிஃப்டில் இறங்கி, கீழே வந்தார். ரோட்டில் கார்கள் பறந்து கொண்டிருந்தன. ராதாகிருஷ்ணனுக்குப் பரபரப்பாக இருந்தது. யாரும் பார்த்து விடக் கூடாதே என்று தோன்றியது. மகன், மருமகள் வரும் நேரமல்ல. ஆனால் பேத்தி வரும் நேரம். அவள் பார்த்து விட்டால், "ஹேய் கிராண்ட்பா. வேர் ஆர் யூர் கோயிங்?" என்று கழுத்தறுத்து விடுவாள். ராதாகிருஷ்ணன் ரோட்டைப் பார்த்தார். ஒரு டாக்சி கண்ணில் படவில்லை. பஸ்ஸில் ஏறி பஸ் ஸ்டாண்ட் போய்விடலாமா என்று தோன்றியது. அங்கிருந்து டாக்ஸி பிடித்துக் கொள்ளலாம். பஸ்ஸில் பெட்டியை ஏற்றுவது கஷ்டம். யாராவது பார்த்துவிடப் போகிறார்களோ என்று பயந்து கொண்டிருந்தார். ஒரு டாக்ஸி கிடைத்தது. பெட்டியை ட்ரங்கில் போட்டார். வண்டியில் ஏறி உட்கார்ந்தவுடன் நிம்மதியாக மூச்சு விட்டார்.

"ஏர்போர்ட்." என்றார்.


"ஓ யூ ஆர் லீவிங் டொரான்டோ. யூ டோன்ட் லைக் டொரான்டோ?"

என்று கேட்டு ஏதோ ஹாஸ்யம் சொன்னது போல் டாக்ஸி டிரைவரே சிரித்துக் கொண்டான்.

"எஸ். ஐ டோன்ட் லைக் டொரான்டோ. ஐ டோன்ட் லைக் கனடா."

என்று கத்த வேண்டும் போலிருந்தது. இவனிடம் கத்தி என்ன பிரயோஜனம்? மகனுக்கும், மருமகளுக்குமே புரியவில்லை. அவர்களுக்குப் புரிந்திருந்தால், இப்படித் திருட்டுத்தனமாக ஓடிப் போக வேண்டாம். எத்தனை முறை சொல்லியும் விடவில்லை.

"வயதான காலத்தில் இந்தியாவில் தனியாக இருக்க வேண்டாம்" என்று சொல்லியே கழுத்தறுத்து விட்டார்கள். 'வயதான' என்ற வார்த்தையைக் கேட்டாலே எரிச்சல் வருகிறது. இப்படித்தான் ஆபீஸில் ஒரு நாள் வயதாகிவிட்டது என்று ரிட்டயர்மென்ட் கொடுத்து விட்டார்கள். ரிட்டயராகி பன்னிரண்டு வருஷமாகிவிட்டது. இப்போது கொடுத்தாலும், எந்தப் பெரிய கம்பெனியின் கணக்கு வழக்குகளைப் பார்க்க முடியும். யார் விடுகிறார்



# சந்ததி

கள்? 'வயதான காலத்தில்' என்று சொல்லியே ஒழித்து விடுகிறார்கள். ஐம்பத்தியெட்டில் ரிட்டையர்மெண்ட் என்று முடிவு செய்தவனைச் சுட வேண்டும். எழுபத்தி ஐந்து வயது வரை மனிதன் ஆரோக்கியமாய் இருக்கிறான். வாழ்க்கையை இருபது வருடத்தை வெறுமனே கழிக்கச் சொல்கிறார்களே படுபாவிகள் என்று மனதுக்குள் ஏசிக் கொண்டிருந்தார். ஏர் போர்ட் வந்து விட்டது.

டாக்சியை விட்டு இறங்கினார். பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, உள்ளே போய் லக்கேஜைப் போட்டு, போர்டிங் பாஸ் வாங்கினார். போர்டிங் பாஸ் வாங்கியவுடன் கவலையேயில்லாமல் படு காஷுவலாக நடந்து போனார்.

உள்ளே போன பிறகு ஃபோன் பண்ணலாமா என்று தோன்றியது. எதற்குப் பண்ண வேண்டும்? எத்தனை முறை நமக்கு இப்படி மெஸேஜ் எழுதி வைத்துவிட்டு எங்காவது வெளியே போயிருப்பார்கள். 'சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார்' என்று புலம்



புவார்கள். நன்றாகப் புலம்பட்டும்.

ஏரோப்ளேனில் ஏறி உட்கார்ந்தார். அது அல்-இடாலியா ப்ளைட். முதலில் டொரான்டோவிலிருந்து ரோம் நகரத்திற்குப் போகும். ரோமில் ஒரு நாள் தங்க வேண்டும். அதற்கான ஹோட்டல் கூப்பன் இருந்தது. பிறகு பாம்பேக்கு நேரடியான ப்ளைட். முழுதாக ஒரு நாள் ரோமில் தங்க வேண்டும்.

சாப்பாடு வந்தது. திறந்தார். சிப்ஸ், சாலட், மஞ்சள் நிறத்தில் அரிசியாயிருக்கும் சாதம்... ஏர்-ஹோஸ்டஸைக் கூப்பிட்டு 'நன்றாக இரு' என்று அட்சதை வேண்டுமானால் தூவலாம். 'வெஜிடேரியனாக'ப் பிறந்ததற்கு வருத்தப்பட்டார். ஜானகி இருந்த வரையில் விதவிதமாய்ச் சமைத்துப் போடுவாள். வெங்காய வடகம் போட்டு வத்தக் குழம்பு, அவியல் என்றாலும் சரி. பாக்ரா ரைஸ் வைத்து பெங்காலி குருமா என்றாலும் சரி. பிரமாதமாய் சமைப்பாள். விதவிதமாய் சமைப்பாள். சமைப்பதில் அப்படி ஓர் ஆர்வம். ராதாகிருஷ்ணன் நாக்கை வளர்த்து விட்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள்– வசனம் போல்

பிருதிவிராஜ்

சொல்லுவதாகயிருந்தால், 'பூவோடும் பொட்டோடும்' போய்விட்டாள். ஒரே பையனும் டொரான்டோவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ராதாகிருஷ்ணன் ரிட்டயரானவுடன் சென்னையிலேயே இருந்து விடலாம் என்று நினைத்தார். ஆனால் தனியாக ஒரு ப்ளாட்டிலிருக்க போரடித்தது. யாராவது, எப்போதாவது தலையைக் காட்டுவார்கள். மற்றப்படி பல நேரம் தனிமை. பையன் வந்து 'வயதான காலத்தில் தனியாக இருக்க வேண்டாம்' என்று வற்புறுத்தி கூட்டிக் கொண்டு போய் விட்டான்.

கனடாவில் 'ஓல்ட் ஏஜ்' பென்ஷன் கொடுத்தார்கள். இந்திய மதிப்பில் பார்த்த போது, இவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தை விட நாலு மடங்கு அதிகம். ரொம்ப சந்தோஷமாயிருந்தது. அந்தப் பணம் இவர் அக்கௌன்ட்டிற்குப் போய்விடும். பையன் தனியாக ஒரு கிரெடிட் கார்டு வாங்கிக் கொடுத்திருந்தான். அதெல்லாம் பிரச்னையில்லை. ஆனால் எந்தத் தனிமைக்குப் பயந்து சென்னையை விட்டுப் போனாரோ, அந்தத் தனிமை அவரை அங்கும் துரத்தியது.

மகன் காலையில் ஆறரைக்கு வீட்டை விட்டுக் கிளம்பினால், ராத்திரி எட்டரை ஒன்பது மணிக்குத்தான் வருவான். பிள்ளையுடைய படிப்பிற்காக டௌன்-டவுனில் வீடு எடுத்திருந்தான். எனவே அவன் ஆபிஸிற்கு ஒன்றரை மணி நேரம் டிரைவ் பண்ண வேண்டும். மருமகளோ, அவன் கொண்டு வருவது போதாதென்று, இன்ஷூரன்ஸ் ஏஜெண்டாக இருந்தாள். கார் இன்ஷூரன்ஸ், ஹெல்த் இன்ஷூரன்ஸ் என்று அலைந்து கொண்டிருப்பாள். எப்போதாவது சமைப்பாள். திடீரென்று ஃபோன் பண்ணி,

"மாமா! நான் வர நேரமாகும். வந்து சமைக்க முடியாது. பேசாமல் பீட்ஸா ஆர்டர் பண்ணிவிடுங்க" என்று சொல்லி விடுவாள். ரசம் வைத்து அப்பளம் மட்டுமாவது பொரிக்கக் கூடாதா என்று கேட்கத் தோன்றும். என்ன செய்வது? பீட்ஸாவை ஆர்டர் பண்ணுவார்.

சன்டே ஒரு நாள்தான் எல்லோரும் வீட்டிலிருப்பார்கள்.

"டேய்! ரிச்மண்ட் ஹில்ஸ் கோவிலுக்குப் போகலாம்டா."

"அப்பா! எத்தனை தடவைப்பா போறது?"

"அது கோவில்டா! அதென்ன பிக்னிக் ஸ்பாட்டா. எத்தனை தடவைன்னு சொல்றதுக்கு" என்று சொல்லுவார். சில சமயம் கிளம்புவான். சில சமயம் 'விடுங்கப்பா! இன்னிக்கு வேண்டாம்' என்று டீவியில் மூழ்கி விடுவான். போச்சு! இனி அடுத்த வாரம்தான் வெளியே போக முடியும். "ஊருக்குப் போகிறேன்" என்றால் விடமாட்டார்கள். வெறுத்துப் போய்விட்டது. கையில் ஏகமாய் பணமிருக்கிறது. சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிவிட்டார்.

**வி**மானம் ரோமில் இறங்கியது. ஒரு நாள் ரோமில் தங்க வேண்டும். லக்கேஜ் எடுத்துக் கொண்டு வெளியே போனார். ஹோட்டலுக்குப் போக வேண்டும். கூப்பன் கொடுத்திருந்தார்கள். தெரியாத ஊர். டாக்ஸியில் போவதை விட, ஹோட்டல் கோச்சில் போவது உசிதம். எங்கே விசாரிக்கலாம் என்று தேடியபோது, 'கல்கி' பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு லக்கேஜுடன் ஓர் இளைஞன் நின்று கொண்டிருந்தான். 'ஆஹா! நம்மூர்க்காரன்.' நேராக அவனிடம் போனார்.

"ஹோட்டலுக்குப் போகிற பஸ்ஸெல்லாம் எங்க நிற்கும்?"

"எந்த ஹோட்டல்?"

"லீ... பேலஸ்."

"நானும் அதே ஹோட்டல்தான் போகணும். என்கூட வாங்க. எதிர்த்த பக்கம் போக வேண்டும்."

"பை தி பை. என் பேரு சடகோபன். ரிசர்ச் ஸ்காலராக வாட்டர்லூ யுனிவர்சிடியில் ஜாயின் பண்ண கனடா போய்க் கொண்டிருக்கிறேன்" என்றான்.

"எனக்கு கனெக்ஷன் ப்ளைட் மிஸ்ஸாகி விட்டது. அதனால் ஹோட்டல் ஸ்டே. நீங்க?"

"கனடாவிலிருந்து இந்தியா போய்க் கொண்டிருக்கிறேன்." என்று மட்டும் சொன்னார்.

பஸ் வந்தது. பஸ்ஸில் பெட்டியைத் தூக்கிப் போட்டான். இவர் பெட்டியையும் ஏற்றினான். ஏறி உட்கார்ந்தார்கள்.

"ஊர்ல என்ன விசேஷம்?"

"சுதந்தரப் பொன்விழாதான் விசேஷம்."

"அதிலென்ன விசேஷம்?"

"என்ன சார்! அப்படிச் சொல்றீங்க. மக்களே கொண்டாடின சுதந்தர தினமில்லையா?"

"என்ன பெரிய சுதந்தரம்! நாம எதிர்பார்த்

---

"மறைந்த தலைவர் பெயரைச் சொல்லியே ஓட்டு கேட்கிறீங்களே, இன்றைய தலைவர் பெயரைச் சொல்லிக் கேட்பதுதானே?"

"இன்றைய தலைவர்மீதுதான் கட்டுக் கட்டா லஞ்ச ஊழல்புகார் இருக்கே! அவர் பெயரைச் சொல்லி நாங்க மக்களை ஏமாத்த விரும்பலை!"

– நிர்மலா நாதன்

---



தது என்ன கிடைக்கிருக்குது?''

"சார். வேண்டாம். எங்கிட்ட அரசியல் பேசாதீங்க. ஏற்கெனவே ரிசர்ச் பண்ணி பேப்பர் சப்மிட் பண்ணியவன். இப்பவும் அது சம்பந்தமாகத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்."

"அட நீ என்னப்பா ரிசர்ச் பண்ணினே. என் அனுபவத்தில் சொல்றேன். எப்படிப் பட்ட தலைவர்கள் இருந்த நாடு. கண்ட பயல்கலெல்லாம் அரசியல்ல வந்துவிட்டான். ஒரே ஊழல் மயம். அந்தக் காலத்திலேயெல்லாம் இப்படிக் கிடையாது."

ராதாகிருஷ்ணன் ரொம்ப பேசினார். "காலம் போலிகளை உதிர்த்து விடும். நல்ல விஷயங்கள் மட்டும்தான் நினைவில் நிற்கும். அதனாலதான் அந்தக் காலம் பொற்காலம்னு சொல்லுவது. ஏன்னா அப்ப நடந்த மோசமான விஷயங்கள் நினைவில் நிற்பதில்லை. ஆனால் என்னை மாதிரி எல்லாத்தையும் தோண்டுபவர்களுக்கு விஷயம் தெரியும்."

"என்ன தெரியும் உனக்கு?"

"உங்க பொற்காலத்தில் பட்டினிச் சாவு இருந்தது. இப்ப இல்லை. ஒரு குண்டூசி தயாரிக்க முடியாது. இப்ப நாம சாட்டிலைட் லான்ச் பண்ணறோம். நல்ல அரசியல்வாதிகள் தான் சரித்திரத்தில் நிற்பார்கள். உங்க பொற்காலத்தில் ஜாலியன் வாலாபாக் படுகொலையை ஆதரித்து அறிக்கைவிட்ட அரசியல்வாதிகளெல்லாம் இருந்திருக்காங்க.

"இது எல்லாமே மாறுதல்தான். மோசமான மாறுதல்கள் காலத்தில் அழிந்து போய்விடும். நல்ல மாறுதல்கள் நிலைத்து நிற்கும். இதைப் புரிந்து கொண்டால் பிரச்னையில்லை..." என்றான் சடகோபன். ராதாகிருஷ்ணன் எதுவும் பேசவில்லை. அவன் சொன்னதையே யோசித்துக் கொண்டிருந்தார்.

**ஹோ**ட்டல் வந்தது. அவன் ரூமில் போய்க் குளித்துவிட்டு வந்தான். சாப்பிட இருவரும் சேர்ந்து போனார்கள். வெஜிடபிள் சூப் வந்தது. சாப்பிட்டுக் கொண்டே கேட்டான்.

"கனடாவில யார் இருக்கா?"

"என்னோட ஒரே பையன்."

"இந்தியாவில யாருமேயில்லையென்றால் ஏன் போறீங்க."

நல்ல கேள்வி. ராதாகிருஷ்ணனுக்கு யாரிடமாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. சடகோபன் பேச்சு பிடித்திருந்தது. அவனிடம் சொல்லலாம் என்று தோன்றியது. முழு விவரம் சொன்னார்.

"சார்! சொல்லாமலா வந்துட்டீங்க!"

"ஆமா."

"அது தப்பில்லையா? நீங்க இந்தியாவில தனியாக இருக்கக் கூடாதுன்னு கூட்டிட்டுப் போனவங்களுக்கு, இப்படிப் பண்ணலாமா? உங்க மேல அக்கறையில்லையென்றால் கூட்டிட்டுப் போயிருப்பாங்களா?"

"என்னை என்ன கவனிச்சாங்க?"

"உங்களை என்ன சார் கவனிக்கணும். கூட வைத்திருந்தால் போதாதா?"

"நான் அவனை எப்படியெல்லாம் வளர்த்தேன் தெரியுமா?"

"அதான் அவங்க இந்த நிலைமையில இருக்காங்க. இன்னிக்கு அவங்க நேரம், காலம் பார்க்காமல் ஓடினால்தான் அவங்க பிள்ளை நல்லாயிருப்பான். உங்களுக்கு ஒரு கதை தெரியுமா? ஒரு குருவிக் குஞ்சு தண்ணியில விழுந்துட்டுது. அதோட தாய்க்குருவி கேட்டுது. 'நீ பெரிசானவுடன் இப்படி உதவி பண்ணுவியா?' உடனே குருவிக்குஞ்சு சொன்னது. 'ஆமா! செய்வேன். என்னோட குருவிக் குஞ்சுக்கு' என்றது."

ராதாகிருஷ்ணன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இதுதான் சார் வாழ்க்கை. நீங்க உங்க பையனை அப்படி கவனிச்சீங்க. வாஸ்தவம் தான். இப்ப அவர் அவரோட குழந்தையைக் கவனிக்கிறாரு. இந்த மாறுதலில் அவர் உங்களைப் புறக்கணித்திருந்தால் தப்பு. அது இல்லாத பட்சத்தில் உங்க கோபத்தின் காரணம் புரியவில்லை."

சடகோபன் பேசி முடித்தான். அறைக்குத் திரும்பி வந்தார்கள். ராதாகிருஷ்ணன் யோசித்துக் கொண்டேயிருந்தார். பல விஷயங்கள் புரிந்தது போலிருந்தது.

"ஹலோ அல்-இடாலியா ஆபீஸ். என்னுடைய பெயர் ராதாகிருஷ்ணன். நாளை பாம்பே ப்ளைட்ல புக்கிங் இருக்குது. ஆனால் நான் என்னோட ட்ரிப்பை கான்சல் பண்ணி விட்டேன். திரும்ப கனடாதான் போகப் போகிறேன். நாளை டொரான்டோ ப்ளைட்ல புக்கிங் கொடுங்க. டிக்கெட்டை மாற்றிக் கொடுங்க. என்ன வித்தியாசமோ, அதை விசா கார்டில் செலுத்துகிறேன்" என்றார். ●

NACOLAM NACOLAM NACOLAM NACOLAM NACOLAM

# NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT

## Offers ONE YEAR DIPLOMA Courses

- BUSINESS MANAGEMENT
- BUSINESS ADMINISTRATION
- EXPORT & IMPORT MANAGEMENT
- HIRE PURCHASE & LEASING BUSINESS
- TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000
- QUALITY ASSURANCE & QS 9000 / ISO 9000
- ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
- PRODUCTION MANAGEMENT
- MATERIALS MANAGEMENT
- FINANCIAL MANAGEMENT
- MARKETING MANAGEMENT
- PERSONNEL MANAGEMENT & INDUSTRIAL RELATIONS
- HUMAN RESOURCES DEVELOPMENT
- ADVERTISING & PUBLIC RELATIONS
- INDUSTRIAL SAFETY

Each Diploma course has 7 written papers ( I Semester - 3 papers; II Semester - 4 papers). No formal qualification is required. Total fee Rs. 1500/- (payable in two instalments). Examination will be held in all major cities in India. For application and prospectus, kindly send Rs. 6/- postal stamp to:

**NATIONAL COUNCIL FOR LABOUR MANAGEMENT**

25, Mada Church Road, II Floor, Mandaveli, Chennai - 600 028.
Ph: 044-4952719/4852572. Fax: 044-4940066/4933259

**BANGALORE:** Mr. K. Manoharan, 220, Jakkasandra Extn.., 1st Main, 1st Block, Koramangala, Bangalore - 560 034.

NACOLAM NACOLAM NACOLAM NACOLAM NACOLAM

சமைப்பது கஷ்டமா ? யார் சொன்னது ?



"கல்யாணமாகி மூன்றே மாதங்களில் சமைப்பதில் நான் எக்ஸ்பர்ட் ஆகிவிட்டேனாம். எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

'கொஞ்சம் வெயிட் போட்டுட்டேன். இல்லேன்னு அவரும்கூட வெட்கத்துடன் கேட்கிறார்.

நான் பயந்த மாதிரி சமைப்பது கஷ்டமே இல்ல. SMB இருந்தால் போதும்; எல்லாமே எளிது எனக்கு மட்டுமில்லை; உங்களுக்கும்தான்"

SMB ரவை, மைதா, கோதுமை மாவுகள். தரமானவை. சுவையானவை. ஆரோக்கியமானவை. சமைக்கவும் எளிதானவை."

SMB

இல்லத்தரசிகளின் இனிய நண்பன்



தயாரிப்பாளர்கள் :

சக்தி முருகன் ரோலர் ப்ளவர் மில்ஸ் பி. லிட்.

தபால் பெட்டி எண். 15, அவினாசி - 641 654,
கோவை மாவட்டம், போன் : 52991, 52992, 52993, 52994

# கல்கி கலெக்ஷன்





# பொன்னியின் செல்வன்

## மூன்றாம் அத்தியாயம்

## விண்ணகரக் கோயில்

சில சமயம் சிறிய நிகழ்ச்சியிலிருந்து பெரிய சம்பவங்கள் விளைகின்றன. வந்தியத்தேவன் வாழ்க்கையில் அத்தகைய ஒரு சிறிய நிகழ்ச்சி இப்போது நேர்ந்தது.

சாலையோரத்திலே நின்று பழுவேட்டரையரின் பரிவாரங்கள் போவதை வந்தியத்தேவன் பார்த்துக் கொண்டிருந்தான் அல்லவா? அவன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்திலேயே அவனுடைய குதிரை நின்று கொண்டிருந்தது.

பழுவேட்டரையரின் ஆட்களிலே கடைசியாகச் சென்ற சிலரின் பார்வை அக் குதிரை மீது சென்றது.

"அடே! இந்தக் குருதையைப் பாரடா!" என்றான் ஒருவன்.

"குருதை என்று சொல்லாதேடா! குதிரை என்று சொல்!" என்றான் இன்னொருவன்.

"உங்கள் இலக்கோண ஆராய்ச்சி இருக்கட்டும்; முதலில் அது குருதையா அல்லது கழுதையா என்று தெரிந்து கொள்ளுங்கள்!" என்றான் இன்னொரு வேடிக்கைப் பிரியன்.

"அதையும் பார்த்து விடலாமடா!" என்று சொல்லிக் கொண்டு, அந்த ஆட்களில் ஒருவன் குதிரையை அணுகி வந்தான். அதன் மேல் தாவி ஏற முயன்றான். ஏறப் பார்க்கிறவன் தன் எஜமானன் அல்ல என்பதை அந்த அறிவுக் கூர்மையுள்ள குதிரை தெரிந்து கொண்டது. அந்த வேற்று மனிதனை ஏற்றிக் கொள்ள மாட்டேன் என்று முரண்டு பிடித்தது!

"இது பொல்லாத குதிரையடா! இதன் பேரில் நான் ஏறக் கூடாதாம்! பரம்பரையான அரசகுலத்தவன்தான் இதன் மேல் ஏறலாமாம். அப்படியென்றால் தஞ்சாவூர் முத்தரையன் திரும்பி வந்துதான் இதன் மேல் ஏறவேண்டும்!" என்று அவன் சமத்காரமாய்ப் பேசியதைக் கேட்டு மற்ற வீரர்கள் நகைத்தார்கள்.

ஏனென்றால், தஞ்சாவூர் முத்தரையர் குலம் நசித்துப் போய் நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது சோழர்களின் புலிக்கொடி தஞ்சாவூரில் பறந்து கொண்டிருந்தது.

"குதிரையின் எண்ணம் அவ்விதம் இருக்கலாம். ஆனால், என்னைக் கேட்டால், செத்துப் போன தஞ்சாவூர் முத்தரையனைக் காட்டிலும் உயிரோடு இருக்கிற தாண்டவராயனே மேல் என்பேன்!" என்றான் மற்றொரு வீரன்.

"தாண்டவராயா! உன்னை ஏற்றிக் கொள்ள மறுக்கும் குதிரை நிஜக்

குதிரைதானா என்று பார்த்துவிடு! ஒருவேளை, பெருமாளின் திருநாளுக்கு வந்த பொய்க்கால் குதிரையாயிருந்தாலும் இருக்கலாம்!'' என்றான் மற்றொரு பரிகாசப் பிரியன்.

"அதையும் சோதித்துப் பார்த்து விடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டு குதிரை மீது ஏறப்போன தாண்டவராயன் அதனுடைய வாலை முறுக்கினான். ரோஸமுள்ள அக்குதிரை உடனே பின்னங்கால்களை நாலு தடவை விசிறி உதைத்துவிட்டு ஓட்டம் பிடித்தது.

"குருதை ஓடுகிறதடா! நிஜக் குருதை தானடா!" என்று அவ்வீரர்கள் கூச்சலிட்டு, "உய்! உய்!" என்று கோஷித்து, ஓடுகிற குதிரையை மேலும் விரட்டினார்கள்!

குதிரை, திருநாள் கூட்டத்துக்கிடையே புகுந்து ஓடிற்று. ஜனங்கள் அதன் காலடியில் மிதிபடாமலிருப்பதற்காகப் பரபரப்புடன் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களில் சிலர் உதைபட்டு விழுந்தார்கள். குதிரை நெறிகெட்டு வெறி கொண்டு ஓடியது.

இவ்வளவும் வந்தியத்தேவன் கண்ணெதிரே அதி சீக்கிரத்தில் நடந்து விட்டது. அவனுடைய முகத் தோற்றத்திலிருந்து குதிரை அவனுடைய குதிரை என்பதை ஆழ்வார்க்கடியான் கண்டு கொண்டான்.

"பார்த்தாயா, தம்பி! அந்தப் பழுவூர்த் தடியர்கள் செய்த வேலையை! என்னிடம் நீ காட்ட வந்த வீரத்தை அவர்களிடம் காட்டுவதுதானே!" என்று குத்திக் காட்டினான்.

வந்தியத்தேவனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. எனினும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்தான். பழுவூர் வீரர்கள் பெருங்கூட்டமாயிருந்தனர். அவ்வளவு பேருடன் ஒரே சமயத்தில் சண்டைக்குப் போவதில் பொருள் இல்லை. அவர்கள் இவனுடன் சண்டை போடுவதற்காகக் காத்திருக்கவும் இல்லை. குதிரை ஓடியதைப் பார்த்துச் சிரித்து விட்டு, அவர்களும் விரைந்து மேலே நடந்தார்கள்.

குதிரை போன திசையை நோக்கி வந்தியத்தேவன் சென்றான். அது கொஞ்ச தூரம் ஓடிவிட்டுத் தானாகவே நின்று விடும் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. பழுவேட்டரையரின் அகம்பாவம் பிடித்த ஆட்களுக்கு என்றைக்காவது ஒருநாள் நன்றாகப் புத்தி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தது.

புளியந்தோப்புக்கு அப்பால், ஜன சஞ்சாரமில்லாத இடத்தில் குதிரை சோகமே வடிவாக நின்றுகொண்டிருந்தது. வந்தியத்தேவன் அதன் அருகில் சென்றதும், குதிரை கனைத்தது. 'ஏன் என்னை விட்டுப் பிரிந்து சென்று, இந்தச் சங்கடத்துக்கு உள்ளாக்கினாய்?' என்று அந்த வாயில்லாப் பிராணி குறைகூறுவது போல் அதன் களைப்புத் தொனித்தது. வந்தியத்தேவன் அதன் முதுகைத் தட்டிச் சாந்தப்படுத்தலானான். பிறகு அதைத் திருப்பி அழைத்துக் கொண்டு சாலைப் பக்கம் நோக்கி வந்தான். திருவிழாக் கூட்டத்தில் இருந்தவர்கள் பலரும் அவனைப் பார்த்து, "இந்த முரட்டுக் குதிரையை ஏன் கூட்டத்தில் கொண்டுவந்தாய், தம்பி! எத்தனை பேரை அது உதைத்துத் தள்ளி விட்டது?" என்றார்கள்.

"இந்தப் பிள்ளை என்ன செய்வான்? குதிரைதான் என்ன செய்யும்? அந்தப் பழுவேட்டரையரின் முரட்டு ஆட்கள் அல்லவா இப்படிச் செய்துவிட்டார்கள்?" என்று இரண்டொருவர் சமாதானம் சொன்னார்கள்.

ஆழ்வார்க்கடியான் இன்னமும் சாலையில் காத்துக் கொண்டு நின்றான். "இதேதடா சனியன்? இவன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே!" என்று எண்ணி வந்தியத்தேவன் முகத்தைச் சுளுக்கினான்.

அமரர் கல்கி

"தம்பி! நீ எந்தப் பக்கம் போகப் போகிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"நானா? கொஞ்சம் மேற்குப் பக்கம் சென்று, பிறகு தெற்குப் பக்கம் திரும்பி, சிறிது கிழக்குப் பக்கம் வளைத்துக் கொண்டு போய் அப்புறம் தென் மேற்குப் பக்கம் போவேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"அதையெல்லாம் நான் கேட்கவில்லை. இன்று ராத்திரி எங்கே தங்குவாய் என்று கேட்டேன்."

"நீ எதற்காக அதைக் கேட்கிறாய்?"

"ஒருவேளை கடம்பூர்ச் சம்புவரையர் அரண்மனையில் நீ தங்குவதாயிருந்தால், எனக்கு அங்கே ஒரு வேலை இருக்கிறது..."

"உனக்கு மந்திரதந்திரம் தெரியுமா, என்ன? நான் கடம்பூர் அரண்மனைக்குப் போகிறேன் என்பதை எப்படி அறிந்தாய்?"

"இதில் என்ன அதிசயம்? இன்றைக்குப் பல ஊர்களிலிருந்தும் பல விருந்தாளிகள் அங்கே வருகிறார்கள். பழுவேட்டரையரும் அவர் பரிவாரமும் அங்கேதான் போகிறார்கள்."

"மெய்யாகவா?" என்று வந்தியத்தேவன் தன் வியப்பை வெளியிட்டான்.

"மெய்யாகத்தான்! அது உனக்குத் தெரியாதா, என்ன? யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம், எல்லாம் கடம்பூர் அரண்மனையைச் சேர்ந்தவைதான். பழுவேட்டரையரை எதிர்கொண்டு அழைத்துப் போகின்றன. பழுவேட்டரையர் எங்கே போனாலும் இந்த மரியாதையெல்லாம் அவருக்கு நடைபெற்றே ஆக வேண்டும்."

வந்தியத்தேவன் மௌன யோசனையில் ஆழ்ந்தான். பழுவேட்டரையர் தங்குமிடத்தில் தானும் தங்குவதென்பது எளிதில் கிடைக்கக் கூடிய வாய்ப்பு அல்ல. அந்த மாபெரும் வீரருடன் பழக்கம் செய்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம். ஆனால் அவருடைய முரட்டுப் பரிவாரங்களுடன் ஏற்பட்ட அனுபவம் இன்னும் அவனுக்குக் கசந்து கொண்டிருந்தது.

"தம்பி! எனக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று ஆழ்வார்க்கடியான் இரக்கமான குரலில் கேட்டான்.

"உனக்கு நான் செய்யக்கூடிய உதவி என்ன இருக்க முடியும்? இந்தப் பக்கத்துக்கே நான் புதியவன்."

"உன்னால் முடியக்கூடிய காரியத்தையே சொல்வேன். இன்றிரவு என்னைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ!"

"எதற்காக? அங்கே யாராவது வீர சைவர் வருகிறாரா? 'சிவன் பெரிய தெய்வமா? திருமால் பெரிய தெய்வமா?' என்று விவாதித்து முடிவு கட்டப் போகிறீர்களா?"

"இல்லை, இல்லை. சண்டை பிடிப்பதே என் வேலை என்று நினைக்க வேண்டாம். இன்றிரவு கடம்பூர் மாளிகையில் பெரிய விருந்து நடைபெறும். விருந்துக்குப் பிறகு களியாட்டம், சாமியாட்டம், குரவைக் கூத்து - எல்லாம் நடைபெறும். குரவைக் கூத்துப் பார்க்கவேண்டும் என்று எனக்கு ஆசை!"

"அப்படியிருந்தாலும், நான் உன்னை எப்படி அழைத்துப் போக முடியும்?"



"என்னை உன் பணியாள் என்று சொன்னால் போகிறது."

வந்தியத்தேவனுக்கு முன்னால் ஏற்பட்ட சந்தேகம் வலுப்பட்டது.

"அந்த மாதிரி ஏமாற்று மோசடிக்கெல்லாம் நீ வேறு யாரையாவது பார்க்க வேண்டும். உன்னைப் போன்ற பணியாளன் எனக்குத் தேவையில்லை. சொன்னால் நம்பவும் மாட்டார்கள். மேலும், நீ சொன்னதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் என்னையே இன்று கோட்டைக்குள் விடுவார்களோ என்ற சந்தேகம் உண்டாகிறது.''

"அப்படியானால், நீ கடம்பூருக்கு அழைப்புப் பெற்றுப் போகவில்லையென்று சொல்லு!"

''ஒருவகையில் அழைப்பு இருக்கிறது. சம்புவரையர் மகன் கந்தமாறவேள் என்னுடைய உற்ற நண்பன். இந்தப் பக்கம் வந்தால் அவர்களுடைய அரண்மனைக்கு அவசியம் வர வேணுமென்று என்னைப் பலமுறை அழைத்திருக்கிறான்."

"இவ்வளவுதானா? அப்படியானால் உன் பாடே இன்றைக்குக் கொஞ்சம் திண்டாட்டமாகத்தான் இருக்கும்!"

இருவரும் சிறிது நேரம் மௌனமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

"ஏன் என்னை இன்னும் தொடர்ந்து வருகிறாய்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''அந்தக் கேள்வியையே நானும் திருப்பிக் கேட்கலாம். நீ ஏன் என்னைத் தொடர்கிறாய்? உன் வழியே போவதுதானே?"

"வழிதெரியாத குற்றத்தினால்தான். நம்பி! நீ எங்கே போகிறாய்? ஒருவேளை கடம்பூருக்குத்தானா?"

"இல்லை; நீதான் என்னை அங்கு அழைத்துப் போக முடியாது என்று சொல்லிவிட்டாயே? நான் விண்ணகரக் கோயிலுக்குப் போகிறேன்."



"வீரநாராயணப் பெருமான் சந்நிதிக்குத்தானே?"

"ஆம்."

"நானும் அந்த ஆலயத்துக்கு வந்து பெருமாளைச் சேவிப்பதற்கு விரும்புகிறேன்."

"ஒருவேளை விஷ்ணு ஆலயத்துக்கு நீ வர மாட்டாயோ என்று பார்த்தேன். பார்க்க வேண்டிய கோயில்; தரிசிக்க வேண்டிய சந்நிதி. இங்கே ஈசுவரமுனிகள் என்ற பட்டர், பெருமாளுக்குக் கைங்கரியம் செய்து வருகிறார். அவர் பெரிய மகான்."

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரே கூட்டமாயிருக்கிறதே! கோயிலில் ஏதாவது விசேஷ உற்சவம் உண்டோ?"

"ஆம்; இன்று ஆண்டாள் திருநட்சத்திரம். ஆடிப் பதினெட்டாம் பெருக்கோடு ஆண்டாளின் திருநட்சத்திரமும் சேர்ந்து கொண்டது. அதனால்தான் இவ்வளவு கோலாகலம். தம்பி! ஆண்டாள் பாசுரம் ஏதாவது நீ கேட்டிருக்கிறாயா?"

"கேட்டதில்லை."

"கேட்காதே! அதைக் காதினாலேயே கேட்காதே!"

"ஏன் அவ்வளவு வைஷம்யம்?"

"வைஷம்யம் இல்லை; விரோதமும் இல்லை. உன்னுடைய நன்மைக்குச் சொன்னேன். ஆண்டாளின் இனிய பாசுரத்தைக் கேட்டு விட்டாயானால், அப்புறம் வாளையும் வேலையும் விட்டெறிந்து விட்டு என்னைப் போல் நீயும் கண்ணன் மேல் காதல் கொண்டு விண்ணகர யாத்திரை கிளம்பி விடுவாய்!"

"உனக்கு ஆண்டாள் பாசுரங்கள் தெரியுமா? பாடுவாயா?"

"சில தெரியும்; வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் பாசுரங்களில் சில தெரியும். பெருமாள் சந்நிதியில் பாடப் போகிறேன். வேணுமானால் கேட்டுக் கொள்! இதோ கோவிலும் வந்து விட்டது!"

இதற்குள் உண்மையிலேயே வீரநாராயணப் பெருமாள் கோயிலை அவர்கள் நெருங்கி வந்து விட்டார்கள்.

விஜயாலய சோழனின் பேரனான முதற் பராந்தக சோழன் 'மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பரகேசரி' என்ற பட்டம் பெற்றவன். சோழப் பேரரசுக்கு அஸ்திவாரம் அமைத்தவன் அவனே. தில்லைச் சிற்றம்பலத்துக்கு அவன் பொன் கூரை வேய்ந்து சரித்திரப் புகழ்பெற்றவன். சோழ சிகாமணி, சூரசிகாமணி முதலிய பல விருதுப் பெயர்களோடு வீரநாராயணன் என்னும் சிறப்புப் பெயரையும் அவன் கொண்டிருந்தான்.

பராந்தகனுடைய காலத்தில் வடக்கே இரட்டை மண்டலத்து ராஷ்டிரகூட மன்னர்கள் வலிமை பெற்று விளங்கினார்கள். மானிய கேடத்திலிருந்து அவர்கள் படையெடுத்து வரக் கூடுமென்று பராந்தகன் எதிர்பார்த்தான். எனவே, தனது முதற் புதல்வனாகிய இளவரசன் இராஜாதித்தனை ஒரு பெரிய சைன்யத்துடன் திருமுனைப்பாடி நாட்டில் இருக்கச் செய்தான். அந்தச் சைன்யத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான வீரர்கள் வேலையின்றிச் சும்மா இருக்க நேர்ந்த காலத்தில் இராஜாதித்தன் ஒரு யோசனை செய்தான். குடிமக்களுக்கு உபயோகமான ஒரு பெரும் பணியை அவர்களைக் கொண்டு செய்விக்க எண்ணினான். வட காவேரி என்று பக்தர்களாலும் கொள்ளிடம் என்று மற்றவர்களாலும் அழைக்கப்பட்ட பெருநதியின் வழியாக அளவில்லாத வெள்ள நீர் ஓடி வீணே கடலில் கலந்து கொண்டிருந்தது. அதில் ஒரு பகுதியைப் பயன்படுத்த எண்ணித் தன் வசமிருந்த வீரர்களைக் கொண்டு கடல் போன்ற விசாலமான ஏரி ஒன்றை அமைத்தான். அதைத் தன் அருமைத் தந்தையின் பெயரால் வீரநாராயண ஏரி என்று அழைத்தான். அதன் கரையில் வீரநாராயண புரத்தை ஏற்படுத்தி அதில் ஒரு விண்ணகரையும் எடுத்தான். விஷ்ணுக்கிருஹம் என்பது அந்நாளில் விண்ணகரம் என்று தமிழாக்கப்பட்டு வழங்கிற்று. ஸ்ரீமந் நாராயண மூர்த்தி நீரில் பள்ளிகொண்டு நீர்மயமாக இருப்பவர் அல்லவா? எனவே, ஏரிகளைக் காத்தருளுவதற்காக ஏரிக் கரையையொட்டி ஸ்ரீநாராயண மூர்த்திக்குக் கோயில் எடுப்பது அக்காலத்து வழக்கம். அதன்படி வீரநாராயணபுர விண்ணகரத்தில் வீரநாராயணப் பெருமாளைக் கோயில்கொண்டு எழுந்தருளச் செய்தான்.

அத்தகைய பெருமாளின் கோயிலுக்குத்தான் இப்போது வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் சென்றார்கள். சந்நிதிக்கு வந்து நின்றதும் ஆழ்வார்க்கடியான் பாட ஆரம்பித்தான். ஆண்

டானின் பாசுரங்கள் சிலவற்றைப் பாடிய பிறகு நம்மாழ்வாரின் தமிழ் வேதத்திலிருந்து சில பாசுரங்களைப் பாடினான் :-

"பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக் கிங்குயாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டுகொள்மின்
கடல் வண்ணன் பூதங்கள்
மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழி தரக் கண்டோம்!




கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்!
தொண்டீர் எல்லீரும் வாரீர்!
தொழுது தொழுது நின்றார்த்தும்!
வண்டார் தண்ணந் துழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடிநின்றாடிப்
பரந்து திரிகின்றனவே!"

இவ்விதம் பாடி வந்தபோது ஆழ்வார்க்கடியானுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகித் தாரை தாரையாய் அவன் கன்னத்தின் வழியாக வழிந்தோடியது. வந்தியத்தேவன் அப் பாடல்களைக் கவனமாகவே கேட்டு வந்தான். அவனுக்குக் கண்ணீர் வராவிட்டாலும் உள்ளம் கசிந்துருகியது. ஆழ்வார்க்கடியானைப் பற்றி அவன் முன்னர் கொண்டிருந்த கருத்தும் மாறியது. 'இவன் பரம பக்தன்!' என்று எண்ணிக் கொண்டான்.

வந்தியத்தேவனைப் போலவே கவனமாக அப் பாசுரங்களை இன்னும் சிலரும் கேட்டார்கள். கோவில் முதலிமார்கள் கேட்டார்கள். அர்ச்சகர் ஈசுவரபட்டரும் கண்ணில் நீர் மல்கி நின்று கேட்டார். அவருக்கு அருகில் நின்று கொண்டு அவருடைய இளம் புதல்வன் பால்மணம் மாறாப் பாலகன் ஒருவன் கேட்டிருந்தான்.

ஆழ்வார்க்கடியான் பத்துப் பாசுரங்களைப் பாடிவிட்டு,

"கலி வயல் தென்னன் குருகூர்க்
காரி மாறன் சடகோபன்
ஒலி புகழ் ஆயிரத்து இப்பத்து
உள்ளத்தை மாசறுக்குமே"

என்று பாசுரத்தை முடித்தான்.

கேட்டிருந்த பட்டரின் குமாரனாகிய பாலகன் தன் தந்தையிடம் ஏதோ கூறினான். அவர் மல்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "ஐயா! குருகூர்ச் சடகோபர் என்னும் நம்மாழ்வார் மொத்தம் ஆயிரம் பாடல்கள் பாடியிருப்பதாகத் தெரிகிறதே? அவ்வளவும் உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.


"அடியேன் அவ்வளவு பாக்கியம் செய்யவில்லை. சில பத்துக்கள் தான் எனக்குத் தெரியும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"தெரிந்தவரையில் இந்தப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்க வேணும்" என்றார் ஈசுவரமுனிகள்.

பின்னால், இந்த ஊர் பல பெருமைகளை அடையப் போகிறது. பால் வடியும் முகத்தில் தேஜஸ் பொலிய நின்று நம்மாழ்வார் பாசுரங்களைக் கேட்ட பாலகன் வளர்ந்து, நாதமுனிகள் என்ற திருநாமத்துடன் வைஷ்ணவ ஆச்சாரிய பரம்பரையில் முதல் ஆச்சாரியார் ஆகப் போகிறார். குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்று 'வேதம் தமிழ் செய்த நம்மாழ்வாரின்' ஆயிரம் பாசுரங்களையும் தேடிச் சேகரித்து வரப்போகிறார். அப்பாசுரங்களை அவருடைய சீடர்கள் இசையுடன் பாடி நாடெங்கும் பரப்பப் போகிறார்கள்.

நாதமுனிகளின் பேரராக அவதரிக்கப்போகும் ஆளவந்தார் பல அற்புதங்களைச் செய்தருளப் போகிறார்.

இந்த இருவரும் அவதரித்த க்ஷேத்திரத்தைத் தரிசிக்க, உடையவராகிய ஸ்ரீ ராமாநுஜரே ஒரு நாள் வரப் போகிறார். வரும்போது வீரநாராயண ஏரியையும் அதன் எழுபத்து நான்கு கணவாய்களையும் பார்த்து அதிசயிக்கப் போகிறார். ஏரித் தண்ணீர் எழுபத்து நாலு கணவாய்களின் வழியாகப் பாய்ந்து மக்களை வாழ வைப்பது போலவே, நாராயணனுடைய கருணை வெள்ளத்தை ஜீவகோடிகளுக்குப் பாயச் செய்வதற்காக எழுபத்துநாலு ஆச்சார்ய பீடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று அம் மகானின் உள்ளத்தில் உதயமாகப் போகிறது. அதன்படியே எழுபத்து நான்கு 'சிம்மாசனாதிபதிகள்' என்ற பட்டத்துடன் வைஷ்ணவ ஆச்சாரிய புருஷர்கள் ஏற்படப் போகிறார்கள்.



இந்த மகத்தான நிகழ்ச்சிகளையெல்லாம் வைஷ்ணவ குருபரம்பரைச் சரித்திரம் விவரமாகச் சொல்லட்டும் என்று விட்டுவிட்டு, மறுபடியும் நாம் வந்தியத்தேவனைக் கவனிப்போம்.

பெருமாளைச் சேவித்துவிட்டு ஆலயத்துக்கு வெளியில் வந்ததும் வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "நம்பிகளே! தாங்கள் இத்தகைய பரம பக்தர் என்றும், பண்டித சிகாமணி என்றும் எனக்குத் தெரியாமல் போயிற்று. ஏதாவது அபசாரமாக நான் பேசியிருந்தால் மன்னிக்க வேண்டும்" என்றான்.

"மன்னித்து விடுகிறேன்; தம்பி! ஆனால் இப்போது எனக்கு ஒரு உதவி செய்வாயா, சொல்லு!"

"தாங்கள் கேட்கும் உதவி என்னால் முடியாது என்றுதான் சொன்னேனே? நீங்களும் ஒப்புக் கொண்டீர்களே?"

"இது வேறு விஷயம். ஒரு சிறிய சீட்டுக் கொடுக்கிறேன். கடம்பூர் அரண்மனையில் நீ தங்கினால் தக்க சமயம் பார்த்து ஒருவரிடம் அதைக் கொடுக்க வேண்டும்."

"யாரிடம்?"

"பழுவேட்டரையரின் யானைக்குப் பின்னால் மூடு பல்லக்கில் சென்றானே, அந்தப் பெண்மணியிடம்!"

"நம்பிகளே! என்னை யார் என்று நினைத்தீர்கள்? இம்மாதிரி வேலைக்கெல்லாம்



நான்தானா அகப்பட்டேன்? தங்களைத் தவிர வேறு யாராவது இத்தகைய வார்த்தையை என்னிடம் சொல்லியிருந்தால்..."

"தம்பி! படபடப்பு வேண்டாம்! உன்னால் முடியாது என்றால் மகாராஜனாய்ப் போய் வா! ஆனால் எனக்கு மட்டும் இந்த உதவி நீ செய்திருந்தால், ஏதாவது ஒரு சமயத்தில் உனக்கும் என் உதவி பயன்பட்டிருக்கும். பாதகமில்லை; போய் வா!"

வந்தியத்தேவன் பிறகு அங்கே ஒரு கணம்கூட நிற்கவில்லை. குதிரைமீது தாவி ஏறி விரைவாக விட்டுக்கொண்டு கடம்பூரை நோக்கிச் சென்றான்.

## நாலாம் அத்தியாயம்

# கடம்பூர் மாளிகை

இத்தனை நேரம் இளைப்பாறியிருந்த வல்லவரையனுடைய குதிரை இப்போது நல்ல சுறுசுறுப்பைப் பெற்றிருந்தது; ஒரு நாழிகை நேரத்தில் கடம்பூர்ச் சம்புவரையர் மாளிகை வசலை அடைந்துவிட்டது. அந்தக் காலத்துச் சோழநாட்டுப் பெருங்குடித் தலைவர்களில் **செங்கண்ணர் சம்புவரையர்** ஒருவர். அவருடைய மாளிகையின் வாசல் ஒரு பெரிய நகரத்தின் கோட்டை வாசலைப்போல் இருந்தது. வாசலுக்கு இருபுறத்திலும் எழுந்த நெடுஞ்சுவர்கள் கோட்டைச் சுவர்களைப் போலவே வளைந்து சென்றன.

கோட்டை வாசலில் யானைகளும், குதிரைகளும், ரிஷபங்களும், அந்த மிருகங்களையெல்லாம் பிடித்துக் கட்டுவோரும், தீனி வைப்போரும், தண்ணீர் காட்டுவோரும், ஆங்காங்கு தீவர்த்தி தூக்கிப் பிடித்து வெளிச்சம் போடுவோரும், தீவர்த்திகளுக்கு எண்ணெய் விடுவோருமாக, ஒரே கோலாகலமாயிருந்தது. இதையெல்லாம் பார்த்த வல்லவரையனின் உள்ளத்தில் சிறிது தயக்கமும் துணுக்கமும் ஏற்பட்டன. 'ஏதோ இங்கே பெரிய விசேஷம் ஒன்று நடைபெறுகிறது. இந்தச் சமயத்தில் நாம் வந்து சேர்ந்தோமே' என்று எண்ணினான். நடக்கும் விசேஷம் என்னவென்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் ஆவலும் ஒருபக்கம் பொங்கிக் கொண்டிருந்தது. கோட்டை வாசற் கதவுகள் திறந்ததுதானிருந்தன. ஆனால் திறந்திருந்த வாசலில் வேல் பிடித்த வீரர்கள் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் யமகிங்கரர்களைப் போலிருந்தது.



தயங்கி நின்றால் தன்னை அவர்கள் நிறுத்திவிடுவார்கள் என்றும் தைரியமாகக் குதிரையை விட்டுகொண்டு உள்ளே போவதுதான் உசிதம் என்றும் அந்த வீர வாலிபன் எண்ணினான். அந்த எண்ணத்தை உடனே காரியத்தில் நிறைவேற்றினான். ஆனால் என்ன ஏமாற்றம்? குதிரை கோட்டை வாசலை அணுகியதும் வேல் பிடித்த வீரர்கள் இருவர் தங்கள் வேல்களைக் குறுக்கே நிறுத்தி வழிமறித்தார்கள். இன்னும் நாலுபேர் வந்து குதிரையின் தலைக்கயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் வந்தியத்தேவனை உற்றுப் பார்த்தான். இன்னொருவன் தீவர்த்தி கொண்டுவந்து உயரத் தூக்கி முகத்துக்கு நேரே பிடித்தான்.

வல்லவரையன் முகத்தில் கோபம் கொதிக்க, "இதுதான் உங்கள் ஊர் வழக்

கமா? வந்த விருந்தாளிகளை வாசலிலேயே தடுத்து நிறுத்துவது...?" என்றான்.

"நீ யார் தம்பி இவ்வளவு துடுக்காகப் பேசுகிறாய்? எந்த ஊர்?" என்றான் வாசற் காவலன்.

"என் ஊரும் பேருமா கேட்கிறாய்? வாணகப்பாடி நாட்டுத் திருவல்லம் என் ஊர். என்னுடைய குலத்து முன்னோர்களின் பெயர்களை ஒரு காலத்தில் உங்கள் நாட்டு வீரர்கள் தங்கள் மார்பில் எழுதிக் கொண்டு பெருமையடைந்தார்கள்! என் பெயர் வல்லவரையன் வந்தியத்தேவன்! தெரிந்ததா?" என்றான்.

"இவ்வளவையும் சொல்வதற்கு ஒரு கட்டியக்காரனையும் கூட அழைத்து வருவதுதானே?" என்றான் காவலர்களின் ஒருவன். இதைக் கேட்ட மற்றவர்கள் சிரித்தார்கள்.

"நீ யாராயிருந்தாலும் இனி உள்ளே போக முடியாது! இன்றைக்கு வரவேண்டிய விருந்தாளிகள் எல்லாம் வந்தாகி விட்டது. இனிமேல் யாரையும் விட வேண்டாம் என்று யஜமானின் கட்டளை!" என்றான் காவலர் தலைவன்.

ஏதோ வாக்குவாதம் நடக்கிறதைப் பார்த்துக் கோட்டைக்குள்ளே சற்று தூரத்தில் நின்ற சில வீரர்கள் அருகில் வந்தார்கள். அவர்களில் ஒருவன், "அடே! நாம் அங்கே திருவிழாக் கூட்டத்தில் விரட்டியடித்தோமே, அந்தக் குருதை போல இருக்கிறதடா!" என்றான்.

''இன்னொருவன் கழுதை'' என்று சொல்லடா" என்றான்.

"கழுதை மேல் உட்கார்ந்திருக்கிறவன் என்ன விறைப்பாக உட்கார்ந்திருக்கிறான் பாரடா!" என்றான் மற்றொருவன்.

வல்லவரையன் காதில் இந்தச் சொற்கள் விழுந்தன. அவன் மனதிற்குள், "என்னத்திற்கு வீண் வம்பு? திரும்பிப் போய் விடலாமா? அல்லது, இளவரசர் ஆதித்த கரிகாலரின் முத்திரை பதித்த இலச்சினையை இவர்களிடம் காட்டிவிட்டு உள்ளே போகலாமா?" என்ற யோசனை தோன்றி இருந்தது. வடதிசைப் படையின் மாதண்ட நாயகராகிய இளவரசரின் இலச்சினையைப் பார்த்துவிட்டுத் தன்னைத் தடுக்கக்கூடியவர்கள் வடபெண்ணையிலிருந்து குமரிமுனை வரையில் யாரும் கிடையாது அல்லவா?

இப்படி அவன் மனத்திற்குள் விவாதித்துக் கொண்டிருந்தபோதுதான் பழுவேட்டரையர் ஆட்களின் கேலிப் பேச்சு அவன் காதில் விழுந்தது. உடனே என்ன செய்யவேண்டும் என்பதை முடிவு செய்து கொண்டான்.

''குதிரையை விடுங்கள்; திரும்பிப் போகிறேன்!'' என்றான்.

தடுத்த வீரர்கள் குதிரையின் முகக் கயிற்றை விட்டார்கள்.

குதிரையின் அடிவயிற்றில் வந்தியத்தேவன் தன் இரு கால்களினாலும் ஒரு அழுத்து அழுத்தினான். அதே நேரத்தில் உடைவாளை உறையிலிருந்து உருவி எடுத்தான். மின்னல் ஒளியுடன் கண்ணைப் பறித்த அந்த வாள் சுழன்ற வேகத்தினால் அவனுடைய கையில் திருமாலின் சக்கராயுதத்தை வைத்துக் கொண்டு சுழற்றுவது போல் தோன்றியது. குதிரை முன்னோக்கிக் கோட்டைக்குள்ளே பாய்ந்து சென்றது. வழியிலிருந்த வீரர்கள் திடீர் திடீரென்று கீழே விழுந்தார்கள். வேல்கள் சடசடவென்று அடித்துக் கொண்டு விழுந்தன. வம்பு பேசிய பழுவூர் வீரர்களின் பேரில் குதிரை பாய்ந்தது. இந்த மின்னல் தாக்குதலைச் சிறிதும் எதிர்பாராத வீரர்கள் நாற்புறமும் சிதறிச் சென்றார்கள்.

இதற்குள் வேறு பல காரியங்கள் நிகழ்ந்து விட்டன. கோட்டைக் கதவுகள் தடால், தடால் என்று சாத்தப்பட்டன. "பிடி! பிடி!" என்ற கூக்குரல்கள் எழுந்தன. வேல்களும் வாள்களும் உராய்ந்து 'கிளாங்' 'கிளாங்' என்று ஒலித்தன. திடீரென்று அபாயம் அறிவிக்கும் முரசு 'டடம்!' 'டடம்!' என்று முழங்கிற்று.

வந்தியத்தேவன் குதிரையைச் சுற்றிலும் வீரர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்கள். இருபது, முப்பது, ஐம்பது பேருக்கு மேலேயே இருக்கும். குதிரையின் மேலிருந்த வந்தியத்தேவன் பாய்ந்து தரையில் குதித்தான். கையிலிருந்த வாளைச் சுழற்றிக் கொண்டே, கந்தமாறா! கந்தமாறா! உன் ஆட்கள் என்னைக் கொல்லுகிறார்கள்!" என்று கத்தினான்.

இதைக் கேட்டதும் அவனைச் சூழ்ந்திருந்த வீரர்கள் திடுக்கிட்டுச் சிறிது தயங்கி விலகி நின்றார்கள்.

அச்சமயம் மாளிகையின் மேல்மாட முகப்பிலிருந்து, "அங்கே என்ன கூச்சல்? நிறுத்துங்கள்!" என்ற ஒரு இடி முழக்கக் குரல் கேட்டது. அந்தக் குரல் கேட்ட இடத்தில் ஏழெட்டுப் பேர் நின்று கீழே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"எஜமான்! யாரோ ஒரு ஆள் காவலை மீறிப் புகுந்து விட்டான். சின்ன எஜமான் பெயரைச் சொல்லிக் கூவுகிறான்!" என்று கீழேயிருந்த ஒருவன் சொன்னான்.

"கந்தமாறா! நீ போய்க் கலவரம் என்னவென்று பார்!" - இவ்விதம் மேல் மாடத்திலிருந்து அதே இடிமுழக்கக் குரல் சொல்லிற்று. அந்தக் குரலுக்கு உடைய வர்தான் செங்கண்ணர் சம்புவரையர் போலும் என்று வந்தியத்தேவன் எண்ணி னான்.

அவனும் அவனைச் சுற்றி நின்ற வீரர்களும் சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

"இங்கே என்ன ஆர்ப்பாட்டம்?" என்ற ஒரு இளங்குரல் கேட்டது. அந்தக் குரல் கேட்ட இடத்தில் நின்றவர்கள் விலகிக் கொண்டு வழி ஏற்படுத்தினார்கள். வாலி பன் ஒருவன் அந்த வழியாக விரைந்து வந்தான். கையில் பிடித்த கத்தியை இலே சாகச் சுழற்றிக் கொண்டு சூரசம்ஹாரம் செய்த சுப்பிரமணியரைப் போல் நின்ற வந்தியத்தேவனை ஒருகணம் வியப்புடன் நோக்கினான்.

"வல்லவா, என் அருமை நண்பா! உண் மையாகவே நீதானா?" என்று உணர்ச்சி ததும்பக் கூவிக் கொண்டு ஓடிச் சென்று வல்லவரையனை அந்த இளைஞன் கட்டித் தழுவிக் கொண்டான்.

"கந்தமாறா! நீ படித்துப் படித்துப் பல தடவை சொன்னாயே என்று உன் வீட்டுக்கு வந்தேன். வந்த இடத்தில் எனக்கு இத்தகைய வீர வரவேற்புக் கிடைத்தது" என்று வந்தியத்தேவன் தன்னைச் சுற்றி நின்றவர்களைச் சுட்டிக்காட்டினான்.

அவர்களைப் பார்த்து, "சீ! முட்டாள் களே! போங்களடா! உங்கள் அறிவு உலக் கைக் கொழுந்துதான்!" என்றான் கந்த மாறன்.

கந்தமாறன் வந்தியத்தேவனின் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத் துக் கொண்டு போனான். அவனுடைய கால்கள் தரையில் நில்லாமல் குதித்துக் கொண்டேயிருந்தன. அவனுடைய உள்ள மும் துள்ளிக் குதித்தது. யௌவனப் பிராயத்தில் உண்மையாக உள்ளம் ஒன்று பட்ட ஒரு நண்பன் கிடைத்தால் அதைக் காட்டிலும் ஒருவனைப் பரவசப் படுத் தக்கூடியது வேறு என்ன உண்டு? ஆம், காதல் என்பது ஒன்று இருக்கத்தான் செய் கிறது. ஆனால் காதலில் இன்பமும் குதூ கலமும் எத்தனை உண்டோ அதை விட அதிகமான துன்பமும் வேதனையும் உண்டு. யௌவனத்துச் சிநேக குதூ கலத்திலோ துன்பத்தின் நிழல்கூட விழு வதில்லை. ஒரே ஆனந்தமயமான இதயப் பரவசந்தான்.

போகிற போக்கில், வல்லவரையன், "கந்தமாறா! இன்றைக்கு என்ன இங்கே ஏகதடபுடலாயிருக்கிறது? இவ்வளவு கட்டுக்காவல் எல்லாம் எதற்காக?" என் றான்.

"இன்றைக்கு இங்கே என்ன விசேஷம் என்பதைப் பற்றி அப்புறம் விவரமாகச் சொல்கிறேன். நீயும் நானும் பெண்ணை யாற்றங்கரைப் பாசறையில் தங்கியிருந்த போது, 'பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும்; மழவரையரைப் பார்க்க வேண்டும்; அவரைப் பார்க்க வேண்டும்; இவரைப் பார்க்க வேண்டும்' என்று சொல்வாயே? அந்த அவர், இவர், சுவர், - எல்லாரையும் இன்றைக்கு இங்கேயே நீ பார்த்துவிடலாம்!" என்றான் கந்த மாறன்.

பிறகு, விருந்தாளிகள் அமர்ந்திருந்த மாளிகை மேல்மாடத்துக்கு வல்லவரை யனைக் கந்தமாறன் அழைத்துச் சென் றான். முதலில் தன் தந்தையாகிய சம்பு வரையரிடம் கொண்டு போய் நிறுத்தி, "அப்பா! என் தோழன் வாணர்குலத்து வந்தியத்தேவனைப் பற்றி அடிக்கடி தங்களிடம் சொல்லிக் கொண்டிருப் பேனே? அவன் இவன்தான்!" என்றான். வந்தியத்தேவன் பெரியவரைக் கும்பிட்டு வணங்கினான். அதைக் குறித்துச் சம்பு வரையர் அவ்வளவாக மகிழ்ச்சியடைந் ததாகத் தோன்றவில்லை.

"அப்படியா? கீழே அரண்மனை வாசலில் அவ்வளவு கலவரம் செய்தவன் இவன்தானா?" என்று கேட்டார்.

"கலவரத்துக்குக் காரணம் என் தோழன் அல்ல; வாசல் காப்பதற்கு நாம்



"அமர்த்தியிருக்கும் மூடர்கள்!" என்றான் கந்தமாறவேள்.

"இருந்தாலும் இன்றைய தினம் பார்த்து, அதுவும் இருட்டி அரை ஜாமத்திற்குப் பிறகு, இவன் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வந்திருக்க வேண்டியதில்லை!" என்றார் சம்புவரையர்.

கந்தமாறவேளின் முகம் சுருங்கிற்று. மேலும் தந்தையுடன் வாதமிட அவன் விரும்பவில்லை. வந்தியத்தேவனை அப்பால் அழைத்துச் சென்றான். வந்திருந்த விருந்தாளிகளுக்கு மத்தியில் நடுநாயகமாக ஓர் உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருந்த பழுவேட்டரையரிடம் அழைத்துப் போய், "மாமா! இவன் என் ஆருயிர் நண்பன் வந்தியத்தேவன். வாணப் பேரரசர் குலத்தவன். இவனும் நானும் வடபெண்ணைக்கரைப் பாசறையில் எல்லைக் காவல் புரிந்து கொண்டிருந்தோம். அப்பொழுதெல்லாம் 'வீராதி வீரர் பெரிய பழுவேட்டரையரைப் பார்க்க வேண்டும்' என்று ஓயாது சொல்லிக் கொண்டிருப்பான். 'பழுவேட்டரையர் திருமேனியில் அறுபத்துநாலு போர்க் காயங்கள் இருப்பது உண்மைதானா?' என்று கேட்டுக் கொண்டிருப்பான். 'ஒருநாள் நீயே எண்ணிப் பார்த்துக் கொள்' என்று நான் சொல்லுவேன்" என்றான்.

பழுவேட்டரையர் சுருங்கிய முகத்துடன், "அப்படியா, தம்பி! நீயே எண்ணிப் பார்த்தால் ஒழிய நம்ப மாட்டாயோ? அவ்வளவு அவநம்பிக்கையா உனக்கு? 'வாணர் குலத்தைக் காட்டிலும் வேறு குலத்தில் வீரம் இருக்க முடியுமா?' என்ற சந்தேகமோ?" என்றார்.

தோழர்கள் இருவருமே திடுக்கிட்டுப் போனார்கள். தோத்திரமாகச் சொன்னதை இப்படி இவர் குதர்க்கமாக எடுத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கவில்லை.

வந்தியத்தேவனுடைய மனத்தில் எரிச்சல் குமுறியது. ஆயினும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், "ஐயா! பழுவேட்டரையர் குலத்தின் வீரப்புகழ் குமரி முனையிலிருந்து இமயம் வரையில் பரவியிருக்கிறது. அதைப் பற்றிச் சந்தேகிப்பதற்கு நான் யார்?" என்று பணிவுடன் சொன்னான்.

"நல்ல மறுமொழி; கெட்டிக்காரப் பிள்ளை!" என்றார் பழுவேட்டரையர்.

இந்தமட்டில் பிழைத்தோம் என்று வாலிபர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறினார்கள். அப்போது சம்புவரையர் தமது மகனை அழைத்துக் காதோடு, "உன் தோழனுக்குச் சீக்கிரம் உணவு அளித்து எங்கேயாவது ஒரு தனி இடத்தில் படுக்கச் சொல்லு! நீண்ட பிரயாணம் செய்து களைத்துப் போயிருக்கிறான்" என்றார். மாறவேள் கோபத்துடன் தலையை அசைத்து விட்டுப் போனான்.

பிறகு மாறவேள் வந்தியத்தேவனை அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கே பெண்கள் பலர் இருந்தார்கள். மாறவேளின் அன்னைக்கு வந்தியத்தேவன் நமஸ்காரம் செய்தான். அவளுக்குப் பின்னால் கூச்சத்துடன் மறைந்திருக்கும் பெண்தான் கந்தமாறனின் சகோதரியாயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான்.

'தங்கச்சி'யைப் பற்றி மாறவேள் பல தடவை சொன்னதில் ஏதேதோ கற்பனை செய்து கொண்டிருந்தான் வந்தியத்தேவன். இப்போது ஒருவாறு ஏமாற்றமே அடைந்தான்.

அந்தப் பெண்களின் கூட்டத்திலே பழுவேட்டரையருடன் பல்லக்கில் வந்த மாது யாராக இருக்கலாம் என்பதை அறிய வந்தியத்தேவனுடைய கண்கள் தேடி அலைந்தன.

(தொடரும்)

# பேச்சு பலவிதம்

தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற வடமொழி தென் மொழிப் புலவர் ஒருவர் இருக்கிறார். அவர் பேசும்போதெல்லாம் இடையிடையே, "விளங்கிற்றா?" "புரிந்ததா?" "நான் சொல்றது அர்த்தமாச்சா?" என்று கேட்டுக் கொண்டுதான் மேலே போவார். இது மட்டுமல்ல. "இந்த விஷயம் வேறே யாராவது சொல்லியிருக்கிறார்களா?" "இப்படிச் சொல்லியிருக்கிறார்களா?" என்றும் கேட்டுக்கொள்வார்.

ஒரு சமயம் இப் புலவர் பெருமானுடன் சில நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதோ பேசிக் கொண்டிருந்தவர் சட்டென்று நிறுத்தி, என் அருகிலிருந்த நண்பரைப் பார்த்து, "அய்யாசாமிப் பிள்ளை! உங்களுக்கு அர்த்தமாச்சா?" என்று வினவினார். நான் அந்த நண்பருடைய காதோடு, "உங்களுடைய கிரகிக்கும் திறமையில் மட்டும் அவருக்கு அவ்வளவு சந்தேகம் ஏன் வந்தது?" என்று கேட்டேன். "அப்படியில்லை; இங்குள்ளவர்களில் அவர் சொன்னதைத் தெரிந்து கொள்ளக் கூடிய சக்தி மற்றவர்களுக்குக் கிடையவே கிடையாது என்பது அவருக்கு நிச்சயம்; என் விஷயத்தில் தான் கொஞ்சம் நம்பிக்கை" என்றார் அய்யாசாமிப் பிள்ளை.

மேற்கூறிய புலவரைப் போல், அடிக்கடி சந்தேகப்பட்டு, "தெரிந்ததா?" "என்ன நான் சொல்றது?" என்று கேட்டுக் கொண்டு பேசுகிறவர்களிடம் எனக்கு ரொம்பப் பயம். அவர்களைக் கண்டால் ஓட்டம் பிடிக்கக் கூடத் தயங்கமாட்டேன்.

இன்னும் சிலருக்கு, அவர்கள் பேசுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதில் அவ்வளவு சிரத்தையில்லை. அவர்கள் இடைவிடாமல் பேசுவதற்கு மட்டும் நாம் இடங்கொடுத்து விட்டு மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தால் போதும்; மூச்சுக் கூட விடாமல் பேசிக் கொண்டேயிருப்பார்கள். மூச்சு விடுகிற நேரத்தில் இன்னும் இரண்டு வார்த்தை பேசலாமே என்று இவர்களுக்கு ஆசை. இப்படிப்பட்டவர்கள் இதிகாச புருஷர்களாயிருக்கத் தகுந்தவர்கள்



என்று நான் சொல்வேன். இதிகாச புருஷர்கள் எல்லாரும் ஏறக்குறைய அப்படித்தான் பேசுவார்கள். சாதாரண ஜனங்கள் வாக்கியம் வாக்கியமாகப் பேசினால், அவர்கள் அத்தியாயம் அத்தியாயமாய்ப் பேசுவார்கள்! ஓர் உதாரணம் கவனிக்கலாம்:



நீர் உமது தர்ம பத்தினியுடனும், சகோதரனுடனும் தூரதேசம் போவதாக வைத்துக் கொள்வோம். அங்கே ஓர் ஊரில் தங்கியிருக்கும்போது, உமக்கு வெளியே ஏதோ காரியமாகப் போக வேண்டியிருக்கிறது. சகோதரனிடம், "அப்பா! பத்திரமாய் இங்கேயே மன்னியின் கால் விரல்களைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிரு; இந்த ஊர் பொல்லாத ஊர்" என்று சொல்லிவிட்டுப் போகிறீர். உமது காரியம் முடிந்து திரும்பி வருகையில் எதிரில் உமது சகோதரன் தனியே வருவதைக் காண்கிறீர். உடனே என்ன சொல்வீர்? "அடப்பாவி! ஏனடா மன்னியின் கால்விரல்களிலிருந்து கண்ணை எடுத்து விட்டு இங்கு வந்தாய்? என்னடா சமாசாரம்?" என்று கேட்பீரல்லவா? அவன் சொல்லும் சமாசாரத்தைக் கேட்டுக் கொண்டு, பிறகுதான் அவனைத் திட்டவோ அல்லது உமது மனைவியை நினைத்துப் புலம்பவோ தொடங்குவீர்!


ஆனால், இதிகாச நாயகனாகிய ஸ்ரீ ராமபிரான் உம்மைப் போல் நடந்து கொள்ளவில்லை. வால்மீகி முனிவர் நடத்தது நடந்தபடியே

அமரர் கல்கி

கண்ணால் பார்த்து, ஆரண்ய காண்டத்தில் எழுதியிருப்பதைக் கேளுங்கள்:

**ஐம்பத்தெட்டாஞ் சருக்கம்**

**லக்ஷ்மணர் முகம்வாடிச் சந்தோஷமின்றிச்**



சீதை இல்லாமல் வந்ததைப் பார்த்துத் தருமாத்மாவான இராமர், "ஓ லக்ஷ்மணா! தண்டகாரண்யத்துக்கு என்னைத் தொடர்ந்து வந்த அந்த சீதை எங்கே? அவளை விட்டு விட்டு நீ எங்கு வந்தாய்? இராஜ்யத்தை இழந்து துன்பமடைந்து தண்டகாரணியத்தில் அலைந்து திரியும் எனக்கு, என் துக்கத்தின் கட்டுணையாயினாள் எங்கே? வீரா! அவள் இல்லாமல் நான் ஒரு நொடிப் பொழுதும் உயிர் வாழேன். என் உயிர்த் துணையாகிய அமர மாதருக்கொப்பான அந்தச் சீதை எங்கே? உருகின தங்கத்துக்கொப்பான நிறமுடைய சீதையின்றி நான் இவ்வுலகத்தின் அரசல்ல; தேவலோகத்தின் அரசும் வேண்டேன்.

"ஓ லக்ஷ்மணா! சீதை பிழைத்திருக்கிறாளா? இல்லையா? நீ சொல். உன்னுடைய அஜாக்கிரதையினால் அவளை யாராவது அரக்கர்கள் புசித்து விட்டார்களா? மிகச் சிறியவளும் மெல்லியவளும் ஒரு நாளும் துன்பமென்பதை அறியாதவளுமாகிய சீதை, யான் பிரிந்த காரணத்தால் அழுகின்றாள் என்பது நிச்சயம். அந்தத் துஷ்டனான அரக்கன் பெருங்குரலால் 'லக்ஷ்மணா!' என்று கூப்பிட்ட





பொழுது நீயும் பயந்தனையோ?


"ஆ! தேவரை அடக்குந் திறனுடையானே, நான் விசனத்தில் மூழ்கிவிட்டேன்; இப்பொழுது என்ன பண்ணப் போகிறேன்? ஐயோ! இவ்வித அவஸ்தைகள் நான் படவேண்டுமென்பது என் விதிபோலும்!" என்று இவ்வண்ணம் உத்தமியான சீதையைப் பற்றிப் புலம்பிக் கொண்டே அதிவேகமாக லக்ஷ்மணருடன் ஜனஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்...

இவ்வாறு நடுவிலே ஒரு வார்த்தை சொல்லக் கூட லக்ஷ்மணனுக்கு இடங் கொடாமல் ஒரே மூச்சாய் ஓர் அத்தியாயம் முடியும்வரை ராமர் பேசிக் கொண்டு வந்து ஜனஸ்தானத்தை அடைந்து ஆசிரமத்துக்குள்ளும் புகுந்து விடுகிறார். அதற்குப் பிறகுதான் லக்ஷ்மணனுக்குத் தான் சீதையை விட்டு வந்த காரணத்தைச் சொல்ல இடம் கிடைக்கிறது.

ஸ்ரீராமபிரானை இவ் விஷயத்தில் பின்பற்றி அத்தியாயக் கணக்கில் பேசுவோர் சிலர் இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள்.

இப்படி இடைவிடாமல் பேசுகிறவர்களிலும் இரண்டு ரகம் உண்டு. சின்ன வாக்கியக்காரர், பெரிய வாக்கியக்காரர் என்பதாக அவர்களைப் பிரிக்கலாம். பெரிய வாக்கியக்காரர்கள் இருக்கிறார்களே, கமா, ஸெமி கோலன்கூட இல்லாமல் ஒரே வாக்கியத்தில் தாங்கள் சொல்ல விரும்புவதையெல்லாம் சொல்லிவிடுவார்கள். இவர்களுடைய சம்பாஷணை முறை, தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிறந்த தேசிய உபந்யாசகரின் பிரசங்க முறையை ஒத்தது. இப்போதைக்கு அவர் பெயர் ஸ்ரீமான் பிராணாயாம முதலியார் என்றிருக்கட்டும். அவருடைய பிரசங்க முறை வருமாறு:

"அதாவது, ஸ்வாமி விவேகானந்தர், அமெரிக்காவிலே சிகாகோ நகரிலே கூடிய சர்வமத சமரச மகாசபையிலே உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளெனச் சொன்னது என்னவென்றால், 'எவனுடைய இருதய






மானது ஏழைகளுக்காகப் படீரென்று வெடித்துச் சுக்கு நூறாகிறதோ, அவனே மகாத்மா; மற்றவர்கள் எல்லாம் துராத்மா' என்று கூறியிருப்பது போல, நாம் நம்முடைய ஏழை ஜனங்களுக்கு வயிற்றுக்கு உணவும், உடுத்துவதற்குத் துணியும் கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறபடியினால், 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்' என்று நமது ஔவை மூதாட்டியார் கூறியிருப்பதைப் பசுமரத்தாணிபோல் மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, ஒரே பிடிவாதமாய் நின்று உழைத்து..."

இப்படி அரைமணி, ஒரு மணி நேரம் வரையில் கூட முதலில் ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்காமலே போய்க் கொண்டிருப்பார்.

ஒரு சமயத்தில் தமிழ் நாட்டின் தலைவரும் வேறு சிலரும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். ஆகாய விமானத்துக்கு ஆபத்து வந்தால், இறங்குவதற்கு உபயோகமாகும் 'பாராசூட்' கருவியைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது தலைவர் கூறினார்:

"பாராசூட்டாவது, மண்ணாங்கட்டியாவது? அதெல்லாம் எதற்கு? ஸ்ரீமான் பிராணாயாம முதலியாரின் ஒரு வாக்கியத்தைப் பிடித்துக் கொண்டால் கிர்ரென்று கீழே இறங்கிவிடலாமே!"

சின்ன வாக்கியக்காரர்கள் ஒவ்வொரு வாக்கியத்தை முடிக்கும் போதும் பேசி முடித்து விட்டதாகவே நமக்குத் தோன்றும். ஆனால், பின்னோடு அடுத்த வாக்கியம் தொடர்ந்து வந்துவிடும். இவர்கள் சம்பாஷணை முறையை ஆந்திரத் தலைவர் ஸ்ரீமான் சாம்பமூர்த்தியின் பிரசங்க முறையுடன் ஒப்பிடலாம். ஸ்ரீமான் சாம்பமூர்த்திகாரு, "ஜஸ்டிஸ் கட்சியை ஐம்பது அடி ஆழத்தில் புதைக்க வேண்டுமென்று நான் தான் முதலில் சொன்னேன்; புதைத்தாய் விட்டது!" என்று கர்ஜிப்பார். சரி, நாம் வீட்டுக்குப் போகலாம் என்று தீர்மானித்துக் கொண்டு எழுந்திருக்க யத்தனிப்போம். உடனே அவர், "புதைத்தால் மட்டும் போதாது! மேலே சமாதி எழுப்ப வேண்டும்!" என்று இடி முழக்கம் செய்வார். பிறகு தொடர்ந்து, "ஆ! தேசத்திற்காக உயிரை விட்ட எத்தனை யுவர்களுக்கும், யுவதிகளுக்கும் நாம் சமாதி எழுப்பியிருக்கிறோம்? அவர்களுடைய தியாகங்களெல்லாம் வீண் போகலாமா? நண்பர்களே! இந்த ஜஸ்டிஸ் கட்சியை வெட்டி ஐந்நூறு அடி ஆழத்தில் புதைத்தே தீர வேண்டும்!" என்பார்.

'இதென்னடா வம்பு? புதைத்த ஜஸ்டிஸ் கட்சியை மறுபடியும் எடுத்து வெட்ட வேண்டுமா?' என்று நாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், மேலும் தொடர்வார்:

"ஆ! இந்த ஜஸ்டிஸ் கட்சி என்னவெல்லாம் அக்கிரமங்கள் செய்திருக்கிறது? இவ்வளவும் அந்த அதிகார வர்க்கத்தின் ஒத்தாசையுடனேயல்லவா? அப்படிப்பட்ட அதிகார வர்க்க ஆட்சியை ஒழித்து நாம் சுதந்திரம் அடைந்தே தீர வேண்டும்."

சரி, முடிந்து விட்டதுபோல இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கையில் மறுபடியும், "சுதந்திரம் என்றால் வாழைப்பழம் அல்ல; கஷ்டப்பட்டுத்தான் பெற வேண்டும்..." என்று ஆரம்பிப்பார். இவ்வாறு அவர் சொல்லும் ஒவ்வொரு வாக்கியத்திலிருந்தும் ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு அடுத்த வாக்கியத்தை சிருஷ்டித்துக் கொண்டே போவார்.

சின்ன வாக்கியமாகப் பேசுவதில் மற்றொரு விதமுண்டு. அதை ஸ்ரீமான் டி. பிரகாசம் பந்துலு காருவின் பிரசங்க முறையுடன் ஒப்பிடலாம்.

ஸ்ரீமான் டி. பிரகாசம் பிரசங்கம் புரிகையில், "நண்பர்களே! நாம் இப்போது எங்கே இருக்கிறோம் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு ஒரு நிமிஷம் நாம் சிந்திப்பதற்குச் சாவகாசம் கொடுப்பார். திடீரென்று அவரே பதில் சொல்லிவிடுவார்: "ஆமாம்; கடற்கரையிலே தான் இருக்கிறோம். ஆனால், இதே இடத்தில் மூன்று வருஷங்களுக்கு முன்னால் என்ன நடந்தது தெரியுமா?" என்று மறுபடி ஒரு கேள்வி போடுவார். ஒரு நிமிஷம் மௌனம்; பிறகு, "ஆமாம்! இதே மாதிரி ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆனால், இதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக ஜனங்கள் கூடியிருந்தார்கள். அப்போது அதோ உள்ள பீச் ரோட்டில் யார் நின்று கொண்டிருந்தார்கள் தெரியுமா?" என்று கேட்டு, "ஆமாம்; ஸோல்ஜர்கள் நின்று கொண்டிருந்தார்கள்" என்று தெரிவிப்பார். இவ்வாறு கேள்வி கேட்டு பதில் சொல்லி, ஸோல்ஜர்களுடைய குதிரைகள், கூட்டத்திலிருந்த ஜனங்களை மிதித்த கட்டத்துக்கு வருவதற்குமுன், குதிரைக் குளம்புகளின் கீழ் அகப்பட்ட உணர்ச்சி சபையோருக்கெல்லாம் ஏற்பட்டுவிடும்! ●

— 'ஓ, மாம்பழமே!' தொகுதியிலிருந்து.



# ரத்த அழுத்தமா! சிறுநீரக கோளாறா!

# இனி கவலையே வேண்டாம்!



## தெய்வீக மூலிகை மருத்துவத்தில்

முகம், கை, கால், கண்களின் அடிபாகம் ஆகிய பகுதிகளில் வீக்கம், இடுப்புப் பகுதியில் விட்டுவிட்டு வலி, சரியான ஜீரணமின்மை, சில நேரங்களில் வாந்தி, நீர்த்தாரையில் எரிச்சல், புண் ஏற்பட்டால் எளிதில் ஆறாத நிலை போன்றவைகள் சிறுநீரகங்களில் கோளாறு ஏற்பட்டிருப்பதின் ஆரம்ப அறிகுறிகள். இரசாயனப் பொருட்கள் கலந்த உணவு வகைகள், மற்றும் B.P., சர்க்கரை வியாதி போன்ற நோய்களுக்காக நீண்ட நாட்கள் மாத்திரைகளை சாப்பிடுதல், கிருமிகள், உணவில் அதிகப்படியான உப்பின் உபயோகம், நரம்பு மண்டல கோளாறு, ஆக்ஸிஜன் பற்றாக்குறை போன்ற பல காரணங்களினால் சிறுநீரகப் பகுதியில் உள்ள திசுக்கள், செயலிழக்க நேரிடுகின்றது. சக்தி நிறைந்த, உப்பு உபயோகிக்காத, இரசாயனப் பொருட்களின் கலப்பற்ற இயற்கை உணவுகளான பழங்கள், காய்கறிகளையும், தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்லம், அத்தி, துளசி, அருகம்புல், போன்றவைகளையும் தேவைக்கு தக்கபடி உண்பதன் மூலம் சிறுநீரகங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிக அடைப்பினை நீக்கி மீண்டும் சீராக செயல்பட செய்ய முடியும். இது பற்றிய விரிவான ஆலோசனையை கீழ்கண்ட முகவரி மற்றும் முகாம்களில், டாக்டரிடம் நேரில் பெறலாம்.



*தெய்வீக மூலிகை வைத்தியர்கள்*

தலைமை முகவரி : **Dr.C.K.M.குருபரன் & Dr.C.K.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகம்**

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

**சென்னை கிளை** : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில் கெல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 5 to 8

✆ : 6424285, 6427638

**1998 வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.**
**(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)**

| | | | |
|---|---|---|---|
| 2-ந் தேதி | - வேலூர் (N.A.) | : பிற்பகல் | 1 to 2 மணி வரை ஹோட்டல் கன்னா (கங்கா), 16, ஆஃபீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060. |
| 2-ந் தேதி | - காஞ்சிபுரம் | : மாலை | 4 to 5 ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22518. |
| 3,6,7,10,13,20,27,28,29ந்தேதி | - சென்னை | : காலை | 9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638. |
| 4-ந் தேதி | - கடலூர் (S.A.D.) | : காலை | 9 to 11 ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717 |
| 4-ந் தேதி | - விழுப்புரம் | : பிற்பகல் | 2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962. |
| 4-ந் தேதி | - திருவண்ணாமலை | : மாலை | 5 to 6 ராதா லாட்ஜ் (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 / 22536. |
| 9-ந் தேதி | - பெங்களூர் | : காலை | 11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட். ✆ : 2266374 |
| 9-ந் தேதி | - ஓசூர் | : மாலை | 3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22899. |
| 9-ந் தேதி | - கிருஷ்ணகிரி | : மாலை | 5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120. |
| 12-ந் தேதி | - சேலம் | : காலை | 11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333. |
| 12-ந் தேதி | - ஈரோடு | : மாலை | 4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761. |
| 13-ந் தேதி | - கோயம்புத்தூர் | : காலை | 9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 / 302211, 302220 |
| 14-ந் தேதி | - மதுரை | : காலை | 9 to 11 ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 743941 |
| 14-ந் தேதி | - தஞ்சாவூர் | : மாலை | 5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022 |
| 15-ந் தேதி | - திருச்சி | : காலை | 9 to 11 ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 460545. |
| 15-ந் தேதி | - நாமக்கல் | : பிற்பகல் | 2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433 |
| 22-ந் தேதி | - தர்மபுரி | : காலை | 9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆: 04342 / 60226. |
| 22-ந் தேதி | - திருப்பூர் | : பிற்பகல் | 2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418. |
| 22-ந் தேதி | - உடுமலைபேட்டை | : மாலை | 6 to 7 குறிஞ்சி லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353. |
| 23-ந் தேதி | - திண்டுக்கல் | : காலை | 9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் பின்புறம் ✆ 27017. |
| 23-ந் தேதி | - தூத்துக்குடி | : மாலை | 5 to 6 ஹோட்டல் ஆல்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327760 |
| 24-ந் தேதி | - திருநெல்வேலி | : காலை | 8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தரபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 333312. |
| 24-ந் தேதி | - நாகர்கோவில் | : பிற்பகல் | 2 to 3 ஹோட்டல் சரவணா, மீனாட்சிபுரம், ✆: 04652 / 25689. |
| 25-ந் தேதி | - விருதுநகர் | : காலை | 9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537. |
| 25-ந் தேதி | - கரூர் | : பிற்பகல் | 2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763. |

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

**தகவல்** டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 23 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.60/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.50/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

# 14.1.98 முதல் 20.1.98 வரை



**மேஷ ராசிக்காரரான ஓவியர் மணியம் செல்வனுக்கு இது உற்சாகமான வாரம். எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயமாம்!**

**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

புது வருஷம் உங்களுக்குச் சாதகமாகவே பிறந்திருக்கு. எடுத்த காரிய வெற்றி, எதிர்ப்பு விலகுதல், புதிய பொருள் சேர்க்கைன்னுட்டு உற்சாகமான பீரியட் இது. வியாபாரிகளுக்கும் வக்கீல்களுக்கும் தொழில்ல நல்ல அபிவிருத்தி தெரியும். பெண்களுக்குச் சில வேண்டாத உபத்திரவங்கள் இருக்கும். ஆனாலும் அத்தனையும் உடனே உடனே விலகிடும். அலைச்சல், சின்ன அளவுல ஒரு ஏமாற்றம் - இதை இந்த வாரம் தவிர்க்க முடியாது.

**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

தொலை தூரப் பயணம் ஒண்ணு இருக்குங்க. அது உங்களுக்கு லாபகரமாகவே அமையும்னாலும் உடல் நலத்தைப் பார்த்துக்க வேண்டியது அவசியம். நாடகம், சினிமா மாதிரி கலைத் துறைல இருக்கறவங்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள், மகிழ்ச்சியைக் கொடுக்கும். சிலருக்கு பக்தி மார்க்கத்துல ஆர்வம் ஏற்படலாம். கணவன் மனைவி உறவு சுமுகமா இருக்கும். வீட்டுல மகிழ்ச்சிக்குக் குறைவு இருக்காது. திட்டமிட்டுக் காரியம் செஞ்சீங்கன்னா எதிலுமே வெற்றி நிச்சயம்.

**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

கணக்கு, கம்ப்யூட்டர் துறைல இருக்கறவங்களுக்கு மிக லாபகரமான வாரம். கரெக்டா திட்டம் போட்டு, ஜெயிப்பீங்க. பொருளாதார ரீதில சில எதிர்பாராத வரவுகள் இந்த வாரம் சிலருக்கு இருக்கும். வீட்டு உறவுல சில சிக்கல்கள் வரலாம். அபிப்பிராய பேதங்கள் எழுந்து, சம்சாரம் மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கலாம். இயந்திரப் பணியாளர்கள் ரொம்ப கவனமா வேலை பார்க்கணும். சிறு விபத்துகளுக்கு வாய்ப்பு இருக்குது. சில பேருக்குப் பெண்கள் மூலமா அனுகூலமான பலன்கள் ஏதாவது நடக்கலாம்.

**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கடன் தொல்லையால அவதிப்படறவங்களுக்கு, அதைத் தீர்ப்பதற்கான வழி முறைகள் தோன்றும் வாரம் இது! சுமை குறைஞ்சாலே சந்தோஷம் தானே? யாராவது செல்வந்தர்கள் உங்களுக்கு உதவுவாங்க. ஆசிரியர்கள், உபன்னியாசம் செய்யறவங்க, சட்டத்துறைல இருக்கறவங்களுக்குப் பணம் கொழிக்கும் வாரம் இது. சில பேருக்கு வீட்டுல பொறுப்புகள் அதிகமாகும். பேச்சில் கவனம் தேவை. ஓவர்-டாக் விட்டு மாட்டிக்காதீங்க.


**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

தைரியமும் தன்னம்பிக்கையும் பொங்கும் வாரம் இது. எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயம். உள்ளூர் முக்கியப் பிரமுகர்களோ, உறவினர்களோ ஒரு குறிப்பிட்ட பிரச்னையைத் தீர்க்க உதவுவார்கள். வீட்டுல இதுவரைக்கும் ஏதாவது சிறு சலிப்பு - சச்சரவு இருந்து வந்ததுன்னா, இப்ப அதெல்லாம் தீர்ந்துடும். சிலபேர் டூ-வீலர் வாங்கற யோகம் அடைவாங்க. எழுத்து, கணக்குத் துறைல இருக்கறவங்களுக்கு ரொம்ப சாதகமான வாரம் இது.

**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

பொருளாதார ரீதில இதுவரைக்கும் இருந்து வந்த மந்த நிலை மாறி சுபிட்சம் வரும்! கொடுக்கல் வாங்கல்ல கூட லாபம்தான் இருக்கும். வீடு கிடு வாங்கற விஷயத்துல, கவனத்தோட செயல்பட்டா லாபம் நிச்சயம். ஏதாவது ஆசையை மல்லிகை மொட்டு மாதிரி பொத்தி வெச்சிருக்கற பெண்களுக்கு, இந்த வாரம் அது வெக்கத்தை விட்டுப் பூத்துடும்! ஆடை, வாசனைப் பொருள் சேர்க்கை உண்டு. வாரக் கடைசில பிரயாணத்தின் போது கவனமா இருங்க. சிலருக்கு பிக்-பாக்கெட் யோகம் இருக்கு!

**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*



# நடக்குமென்பார், நடக்கும்!

குழப்பம் நீங்கி தெளிவா யோசிக்க ஆரம்பிச்சுட்டீங்க! இன்னும் என்ன கவலை! சும்மா ஜாலியா புகுந்து விளையாட வேண்டியதுதானே? இதுவரைக்கும் இருந்து வந்த எதிர்ப்பு சக்திகள் முடங்கிப் போக ஆரம்பிச்சாச்சு. அதனால, துணிஞ்சி காரியத்துல இறங்குங்க. எல்லாத்துலயும் வெற்றிதான்! குறிப்பா அரசியல்வாதிகள் ரொம்ப சுறுசுறுப்பா இயங்க வேண்டிய நேரம் இது. வெளியூரிலிருந்து லாப கரமா ஏதாவது ஒரு செய்தி இப்ப வரலாம்.

**விருச்சிகம் :** *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

கோர்ட்டுல ஏதாவது வழக்கு நிலுவைல இருந்தா, இப்ப பைசலாயிடும். எரி பொருள் ரசா யனத் துறைக்காரங்களுக்கு வளர்ச்சி தரும் வாரம். ஆனாலும் வேலைல கண்ணும் கருத்துமா இருக்க வேண்டியது அவசியம். நீங்க எப்ப தப்பு செய்வீங் கன்னு சிலர் காத்துட்டு இருக்காங்க. சிலருக்கு லேசான காயம் அல்லது விபத்து ஏற்படலாம். சிலர் புனித யாத்திரை கிளம்பலாம். பண வரவு போதுமான அளவு இருக்கும். செலவுதான் கட்டுக் குள்ள இருக்காது.

**தனுசு :** *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பொருளாதாரம், பங்கு மார்க்கெட், துறைல இருக்கறவங்களுக்குப் பணம் கொழிக்கும் சமயம். நிறைய பணம் வருதேன்னு இஷ்டத்துக்கு செலவு பண்ணாதீங்க. கவனமா இன்வெஸ்ட் பண்ணா, பின்னால உபயோகமா இருக்கும். இந்த வாரம் பெண்களுக்கு சில சில்லறைப் பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரலாம். வாய் நீண்டு வம்பு வரலாம். கவனம்! எழுத்துத் துறைல இருக்கறவங் களுக்கு எதிர்பாராத பரிசு அல்லது பெரிய அங்கி காரம் ஒண்ணு நிச்சயம்! சிலருக்கு உஷ்ணம் சம் பந்தமான நோய் வந்து கொஞ்சம் படுத்தும்.

**மகரம் :** *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம். அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

முயற்சி தடைபடுதேன்னு வருந்த வேணாம். இறுதி வெற்றி உங்களுக்குத்தான். வியாபாரி களுக்கு அபாரமான லாபம் சம்பாதிக்க சந்தர்ப் பம் கூடி வரப் போவுது. பத்திரிகையாளர்களும் ஓவியர்களும் செழிப்பான பாதையில் நடை போடுவாங்க. பணக் கையிருப்புக்குக் குறைவு இருக்காது. ஆனா வீடு, ஷேர் எதுலயும் முதலீடு செய்யாதீங்க; கவுத்துடும். வீட்டுல சில பிரச்னை கள் இருக்கத்தான் செய்யும். அமைதியா இருங்க. எதிர்ப்புகளெல்லாம் இன்னும் பத்து நாள்ல சுத்தமா விலகிடும்.

**கும்பம் :** *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுத்துட்டு விலகிக்கங்க. தூர நின்னு சுத்தி இருக்கறவங்களை உற்சாகப்படுத்தறது மூலம் உங்க காரியங்களை சுலபமா சாதிச்சிக்கலாம்! அனுசரிச்சிப் போறதுங் கற பழக்கத்தை வளர்த்துக்கிட்டீங்கன்னா எல் லாரும் உங்ககிட்ட அன்பாவே இருப்பாங்க. கூட்டுத் தொழில் வியாபாரம் செய்யறவங்களுக்கு லாபகரமான வாரம் இது. பெற்றோர் உடல் நலன் கவனம். சினிமாத் துறைல இருக்கறவங்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் சந்தோஷத்தைக் கொடுக்கும். சுமாரான வாரம்தான். பிள்ளையாரை வழிபடுங்க. சூப்பர் வாரமா ஆக்கிடுவார்.

**மீனம் :** *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

விருந்து, கேளிக்கைல ஈடுபடும் சந்தர்ப்பம் வர லாம். சிலருக்கு தூர தேசப் பயணம் கூடி வரும். குடும்பத்துல மகிழ்ச்சிக்குக் குறைவு இருக்காது. வேற்று மொழி பேசுறவங்களால சில நன்மைகள் நடக்கும். அரசியல்வாதிகள் நினைச்சது நடக்கற வாரம் இது. மாணவர்களுக்கும் விளையாட்டுத் துறைல இருக்கறவங்களுக்கும் பாராட்டும் பரிசும் கிடைக்கும். சில பேருக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகலாம். வயசானவங்கன்னா - பேரன், பேத்தி! பெண்கள், காதல் வசப்பட்டு இரங்கி நிக்கற நேரம். ஜோடி எதிர்பார்த்துட்டு இருக்கற வங்களுக்கு இந்த வாரம் க்ரீன் சிக்னல்தான்!



2

## போன வாரம்

**ஒரு டிப்பார்ட்மென்டல் ஸ்டோரில் 'அவளை'ச் சந்திக்கிறான் அரவிந்த். காதல் மாதிரி என்னவோ ஒன்று மனத்தில் உதிக்கிறது. அவள் விரும்பிய ஓர் ஓவியத்தை அவன் வாங்கி, கொடுப்பதற்காக அவளை நெருங்குகிறான்.**

**காதல் டைரிக் குறிப்பு:**

**பேசினாலும் இன்பம், கேட்டாலும் இன்பம்! தொட்டாலும் இன்பம், தொடப்பட்டாலும் இன்பம்!**

அவளுக்கும் அவனுக்கும் நடுவில் நான்கு பேர் நின்றிருந்தார்கள். அவள் விரும்பிய அந்த ஓவியத்தைக் கையில் வைத்துக் கொண்டு அதை என்ன சொல்லி ஒப்படைப்பதென்று புரியாமல் தவிப்போடு நின்றிருந்தான் அரவிந்த்.

ஒரு பொது இடத்தில் எந்த அறிமுகமும் இல்லாத ஓர் ஆணிடமிருந்து எப்படி அவளால் இயல்பாக வாங்கிக் கொள்ள முடியும்?

தனக்குப் பிடித்த ஓவியமாக இருக்கலாம். ஆனால் தனக்காக மெனக்கெட்டு பெற்று வந்து கொடுக்க இவனுக்கு என்ன உரிமை இருக்கிறது என்கிற கேள்வி தானே முதலில் மனத்தில் தோன்றும்?

தேவையில்லாமல் கற்பனையாக அவளைக் காதலி என்றும் தங்களுக்குள் ஊடல் என்றும் சாமர்த்தியமாக, உருக்கம் ஏற்படுத்தும் விதமாகப் பொய் சொன்னது ஓர் அவசியமற்ற துடிப்போ? அர்த்தமற்ற அவசரமோ?

அரவிந்திற்கு இப்போது அந்த ஓவியம் ஒரு பெரிய சுமையாக மாறிப் போனது.

நேராகச் சென்று கொடுக்க தைரியம் இல்லை. பிறகு எதற்குப் போராடி வாங்க வேண்டும்?

கொடுப்பதற்கு ஒன்றும் பெரிதாக தைரியம் தேவையில்லை. அதன் விளைவை சந்திக்கத்தான் தயக்கம்.

'தேங்க் யூ ஸோ மச்! எனக்காக நீங்க செஞ்ச உதவிக்கு ரொம்ப நன்றி. உங்க பேர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?' என்று உடனே இயல்பாக சினிமாவில் வரும் கதாநாயகி போல் அவள் பேசிவிட்டால் எந்தப் பிரச்னையுமில்லை.

அப்படித்தான் பேசுவாள் என்று எப்படிச் சொல்ல முடியும்?

மழை இப்போது சற்று நிதானப்பட்டிருக்க... அரவிந்துக்கும் அவளுக்கும் நடுவில் நின்றவர்கள் குடைகளை விரித்துக் கொண்டு சாலையில் கலந்து விட, அவள் மிக சமீபத்தில் இருந்தாள்.

அரவிந்த் ஒரு தரம் திரும்பி கண்ணாடிச் சுவருக்கு அந்தப் பக்கம் தனக்கு உதவி செய்த பில் போடும் பணிப் பெண்ணைப் பார்த்தான்.

அவள் அங்கிருந்து இவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, இவன் பார்த்ததும் திரும்பி பில் போடுவதில் மும்முரம் காட்டினாள். அவள் கண்டிப்பாக மறுபடி திரும்பி தன்னைப் பார்ப்பாள் என்று தோன்றியது.

அவளைப் பொறுத்த வரைக்கும் நான் அந்த ஓவியத்தை அவளிடம் கொடுக்கிறேனா, பெற்றுக் கொண்டு அவள் புன்னகைத்து நாங்கள் ஊடல் விலகி இணைகிறோமா என்பது ஒரு கதையின் கிளைமாக்ஸ் மாதிரி பரபரப்பானது.

அரவிந்த் பல்வேறு விதமாக மனத்திற்குள் வாக்கியம் அமைத்துப் பார்த்து ஒரு தீர்மானத்திற்கு வந்து அவளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்த போது....



**பட்டுக்கோட்டை பிரபாகர்**

"ஆட்டோ!" என்று அழைத்துக் கொண்டே ஒரு ஆட்டோவை நோக்கிச் சென்றாள்.


அவன் சொல்லும் ஏரியாவுக்கு ஆட்டோக்காரன் போக விருப்பப் படக் கூடாதென்று இவன் பிரார்த்தனை துவங்குவதற்கு முன், அவன் மீட்டரின் கொடியை மடக்க... அவள் ஏறிக் கொண்டு சென்று விட்டாள்.

அரவிந்திற்குத் தன்னை யாரோ மாடிக் கட்டடத்திலிருந்து கீழே தள்ளி விட்டு விட்டதுபோல இருந்தது. இவன் முறை வரும்போது தியேட்டரில் டிக்கெட் தீர்ந்து போகிற ஏமாற்றம்! அவசரமாய் பிளாட்பாரத்தில் ஓடும்போது ரயில் புறப்பட்டு தூரத்தில் போய்விடுகிற ஏமாற்றம்!

அவளை மறுபடி எங்கே எப்போது பார்த்து அந்த ஓவியத்தை ஒப்படைப்பது என்று புரியவில்லை. ஏதாவது சொல்லி கொடுத்திருந்தால், பேசியிருந்தால் ஒரு தொடர்பு ஏற்பட்டிருக்கும். திருவிழாவில் தொலைந்த குழந்தையைக் கூட பெயர், அடையாளத்தை மைக்கில் சொல்லிக் கண்டு பிடித்துவிட வாய்ப்பிருக்கிறது. இவளைப் பற்றி எந்த மைக்கில் சொல்லி எப்படிக் கண்டுபிடிப்பது?

தன் முதுகில் அந்தப் பணிப் பெண்ணின் கண்கள் துளைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான் அரவிந்த்.

# நான் உன்னை சுவாசிக்கிறேன்



அவளைப் பொறுத்தவரை என் காதலி ஊடல் காரணமாக கடுமையான கோபத்தில் இருக்கிறாள். என்னோடு எதுவும் பேசத் தயாராக இல்லை. என்னைப் பார்த்ததும் ஆட்டோவில் சென்று விட்டாள்.

இப்படித்தான் மதிய உணவின் போது தன் தோழிகளிடம் அவள் சொல்லப் போகிறாள். முத்தாய்ப்பாக 'ரொம்பப் பாவம்டி அவரு!' என்று அனுதாபப் படவும் செய்யலாம்.

இதற்கு மேலும் அங்கே மழை முழுவதுமாக நிற்பதற்காகக் காத்திருப்பதற்கு உறுத்தலாக இருந்தது.

ஹெல்மெட்டைக் கவிழ்த்துக் கொண்டு, சளக் சளக்கென்று நடந்து தன் பைக்கை ஸ்டார்ட் செய்து மெதுவான வேகத்தில் தத்தினான்.

லேசான மழை தொடர்ந்து கொண்டிருக்க... முழுக்க நனைந்து போய் கழுத்து வழியாகத் தண்ணீர் ஜில்லென்று முதுகில் இறங்கி, சிலிர்ப்பூட்டியது. உடைகள் உடம்போடு ஒட்டிக் கொண்டன.

இப்படி முற்றிலும் நனைந்து போக மனம் முதலிலேயே சம்மதித்திருந்தால் கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் அந்தக் கடையின் வாசலில் ஒதுங்கி நின்றிருக்கவே வேண்டிய தில்லை.

ஆனால்... ஒதுங்கியதால்தான் அவளைப் பார்க்க முடிந்தது.

அதெப்படி அவசரத்திற்குப் பொய் சொன்னபோது அவளை என் காதலி என்று சொன் னேன்?

எனக்குத் தெரிந்தவள் என்று சொல்லியிருக் கலாம். என்னோடு வேலை பார்ப்பவள், என் பக்கத்து வீட்டுக்காரி, என் சகோதரி, என் தோழி, என்னோடு படிப்பவள்... இப்படி எவ் வளவோ சொல்லலாமே...

அதையெல்லாம் விட்டுவிட்டு 'என் காதலி' என்று ஏன் சொன்னேன்? என் காதலி! எவ் வளவு பெரிய வார்த்தை! என் காதலியா அவள்?

ஐந்து நிமிடங்களுக்கு அவள் பின்னாலேயே சென்று அவளை எல்லாக் கோணத்திலிருந்தும் பார்த்து ரசித்ததில் அவள் என் காதலியாகி விடுவாளா?

அரவிந்த் தன் செயலுக்கான லாஜிக் புரி யாமல் லேசாகப் புன்னகைத்துக் கொண்டான்.

மைலாப்பூரில் தனது தெருவில் எங்கே பெரிய பள்ளம், எங்கே சிறிய பள்ளம் என்று நினைவிருந்ததால் பள்ளங்களைத் தவிர்த்து பைக்கை வளைத்து வளைத்து ஓட்டினான்.

பதினாறு ஃப்ளாட்ஸ் கொண்ட அந்த ஈசா அபார்ட்மெண்ட்ஸின் வாட்ச்மேன் இவனைப் பார்த்ததும் தன் மரக்கூண்டிலிருந்து குடையோடு வந்து கேட்டைத் திறந்தபடி, "என்ன சார் இந்த தடவை மழை இப்படி வாட்டி எடுக்குது?" என்றான்.

தரைத்தளம் முழுக்க வாகனங்கள் நிறுத்து வதற்காக ஒதுக்கப்பட்டிருக்க, வழக்கமாக நிறுத்துமிடத்தில் வண்டியை நிறுத்தினான்.

லிஃப்ட் நோக்கி நடக்கையில் தபாலுக்கான புறாக் கூண்டுகளில் தன் வீட்டுக் கூண்டைத் திறந்து பார்த்தான்.

"ரெண்டு தபால் வந்திருந்திச்சி. உங்க சிஸ்டர் எடுத்துட்டுப் போய்ட்டாங்க" என் றவன், "சார், வெடவெடன்னு கண்ணாடி போட்ட பையன் ஒருத்தன் உங்களைப் பார்க்க வருவானே, அவன் வந்தான். நீங்க வீட்ல இல் லைன்னு சொன்னேன். வாசலோட காரைத் திருப்பிக்கிட்டுப் போய்ட்டான்" என்றான் வாட்ச்மேன்.

சந்துரு!

குலுமணாலியிருந்து வந்து விட்டானா?

உள்ளே உற்சாகத் தென்றல் வீசியது.

"ஏதாச்சும் போன் நம்பர் கொடுத்துட்டுப் போனானா?"

"இல்லை சார். அப்புறமா பார்த்துக்க றேன்னு சொல்லிட்டு விருட்டுன்னு போய்ட் டான்."

"யோவ்! அவன் ஒரு பாபுலர் கேமிராமேன். நேஷனல் அவார்டு வாங்கினவன். மரியா தையா சொல்லுய்யா!"

"அப்படியா? பார்த்தா காலேஜ் பையன் மாதிரிதான் தெரியுது."

லிஃப்டில் மூன்றாவது தளம் வந்து தன் வீட்டில் மணி அடித்தான்.

நிர்மலா கதவைத் திறந்து, "என்னண்ணா இப்படி நனைஞ்சிருக்கே?" என்று ஹெல் மெட்டை வாங்கிக் கொண்டாள். தொலைக் காட்சியில் செய்தி வாசித்தார்கள்.

"மழை நிக்கவேயில்லை, என்ன பண்றது?"

"இதென்ன? ஆர்ட் எக்ஸிபிஷன் போயிருந் தியா?"

"இல்லை. கடையில ஐநூறு ரூபாய்க்கு வாங்கினா இது இலவசம்."

"அம்மா எழுதிக் கொடுத்த சாமான் எல்லாம் அவ்வளவு வராதே."

"எனக்குத் தெரிஞ்ச ஃப்ரெண்டு ஒருத்தன் நானூத்திப் பத்து ரூபாய்க்கு வாங்கினான். அவ னோட பில்லுல என் பில்லையும் சேர்த்துட் டேன்."

"அப்ப நியாயமா இது அவருக்குத் தானே சேரணும்?"

"அவன் என்னை வெச்சிக்க சொல்லிட் டான். ரொம்பதான் நீ கேள்வி கேக்கறே. இந்தா மளிகை சாமான்."

அரவிந்த் ஷூ கழற்றி, பால்கனிக்குச் சென்று ஸாக்ஸ்



"சீட்டாடணும்ங்கிற ஆசை கிளம்பும் போதெல்லாம் நீங்க செயற்குழுவைக் கூட்டறது அவ்வளவா நல்லா இல்லே, தலைவரே!"
— உ. ராஜாஜி

களைப் பிழிந்து கயிற்றில் போட்டு கிளிப் வைத்தான்.

சமையலறையிலிருந்து அம்மா குரலுயர்த்தி, "நிர்மலா, அந்த டீ.வியை கொஞ்சம் குறைச்சி வையேன். பெல் அடிச்சது யாரு? ஸ்டோர்சா?" என்றாள்.

நிர்மலா ரிமோட்டில் சப்தம் குறைத்து, "அண்ணன்தாம்மா."

அரவிந்த் சட்டையைக் கழற்றி பிழிந்து கொண்டிருக்க, அம்மா வெளியே வந்தபடி, "அரவிந்த், பெங்களுரிலேர்ந்து உங்கண்ணன் லெட்டர் போட்... என்னடா இது? சின்னக் குழந்தையா நீ? மழை நின்னதும் நிதானமா வரக் கூடாதா? எதுக்காக இப்படி நனைஞ்சிட்டு வர்றே?"

"எவ்வளவு நேரம்தான் ஒதுங்கி நிக்கிறது? நிம்மி, வெதர் ஃபோர்காஸ்ட்ல என்ன சொன்னான்?"



"முன்னாள் அமைச்சர்னு வேணும்னா போட்டுத் தொலைச்சுக்குங்க, வேணாங்கலை. ஆனா, முன்னாள் மாண்புமிகுன்னு போட்டுக்கிறது கொஞ்சம் அபத்தமா இருக்கு. சொல்லிட்டேன், அப்புறம் உங்க இஷ்டம்!"

— உ. ராஜாஜி

"டிப்ரஷன் இன்னும் வீக்காகலையாம். இன்னும் நாப்பத்தெட்டு மணி நேரத்துக்கு மழை இருக்குமாம்."

"ஒரு வாரமா இதையேதான் சொல்லிட்டிருக்கான். இப்படியே போனா பஸ் சர்வீசை எடுத்துட்டு போட் சர்வீஸ்தான் விடணும்."

"அப்புறம் பேசலாண்டா. முதல்ல டவல் எடுத்து நல்லா துவட்டு. இன்னும் கொஞ்ச நேரம் நீ வெயிட் பண்ணி மழை நின்னதுக்கப்புறம் வந்திருக்கலாம். அப்படி இங்க அவசரமா வந்து என்ன செய்யப் போறே?"

தலையைத் துவட்டிக் கொண்டிருந்த அரவிந்த் சட்டென்று நிறுத்தி, கோபமேறிப் போய் அம்மாவைப் பார்த்தான்.

"ஏம்மா, இப்ப உனக்கு மனசு நிறைஞ்சி போச்சா? சும்மா இருக்கற வெட்டிப் பயதானே நீன்னு ஒரு நாளைக்கு ரெண்டு தடவையாவது சொல்லிக் காட்டியாகணுமா?"

"டேய்! நான் யதார்த்தமா சொன்னேன்டா!"

பால் குக்கரின் சத்தத்திற்கு டீ.வியை அணைத்து விட்டு நிர்மலா எழுந்து சென்றாள்.

"ஆனா அது உண்மையா இருக்கே! வலிக்குதே! நானாம்மா சும்மா இருக்கேன்னு சொன்னேன்? ரெண்டு வருஷம் முன்னாடி உக்கார நேரம் இல்லாம, தூங்க நேரமில்லாம உழைச்சுக்கிட்டுதானே இருந்தேன்? ஒரு நாளைக்காவது டைனிங் டேபிள்ல உக்காந்து சாப்பிட்டிருக்கேனா? சமையல் மேடையிலேயே பிளேட் வச்சி நின்னுக்கிட்டே சாப்பிட்டுட்டுப் போயிடுவேன். மறந்துட்டியா? இப்ப என்னை வீட்ல வலுக்கட்டாயமா சும்மா உக்கார வெச்சிருக்கிறது உன் புருஷன்தான்!"

"ஏன், அப்பான்னு சொல்ல மாட்டியா?"

"என்னை விரோதி மாதிரி நினைக்கிற அவரை, அப்பான்னு சொல்ல 'எப்படிம்மா வாய் வரும்?"

"ஒரு வார்த்தை சாதாரணமா சொன்னதுக்கு ஏன்டா இவ்வளவு பேசறே?"

"ஒரு காட்டுத் தீக்கு ஒரு அக்னிக்குஞ்சு போதும்மா"

"போதும்டா! வரவர ரொம்பதான் பேசறே நீ!"

"கால்ல சலங்கையும் கட்டிவிட்டுட்டு சத்தம் வராம நடந்து போகச் சொன்னா எப்படிம்மா?"

டவலை சோபாவில் வீசிவிட்டுத் தன் அறைக்கு வந்து மேஜைக்கு முன்னால் அமர்ந்தான் அரவிந்த்.

நிர்மலா வந்து, "அண்ணா, காப்பி!" என்றாள்.

"நான் கேட்டனா?"

"என் மேலயும் கோபமா?"

"என்னை நீ சமாதானப்படுத்தப் போறியா?"

"இல்லை. கேள்வி கேக்கப் போறேன்."

"என்ன?"

"கடையில நாநூத்திப் பத்து ரூபாய்க்கு சாமான் வாங்கின பொண்ணு யாரு?"

திடுக்கிட்டு நிமிர்ந்து ஆச்சர்யமாக அவனைப் பார்த்தான் அரவிந்த்.

(தொடரும்)



# அரசியல்

“சோத்திலேயிருந்து கடுகாடு வரை ஊழல் செய்திருக்கிறீர்களே, பாவிகளா”.

“உங்களுக்குப் பிறந்த நாளுன்னா சொல்லுங்க, நாலு மந்திரிங்களை மண் சோறு சாப்பிட வைப்போம்.”

“ஒரு ரூபாயை வாங்கிக்கிட்டே சொத்துகளைக் குவிச்சவங்க உண்டு.”

“இந்த ரேட்டிலே இவங்க தமிழ்நாட்டையே விழுங்கிடுவாங்க. அப்புறம் மேப்பிலே கூட தமிழ்நாடு காணாமப் போயிடும்” - கொஞ்சம் கூட யூகத்துக்கே இடம் கொடுக்காமல் பளிச்சென்று முந்தைய தமிழக ஆட்சியைக் கிண்டலும் காரமுமாக விமர்சிக்கிறது படம்.

அமலாக்கப் பிரிவு அதிகாரி மம்முட்டியை அழைத்து, தமிழக அரசின் ஊழல்களை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தச் சொல்கிறார் மத்திய உள்துறை அமைச்சர். உயிரைக் கொடுத்து ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் வேளையில், மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் தேர்தல் உடன்பாடு வந்து விட, ‘கண்டுக்காமல்’ இருக்கச் சொல்கிறார் உள்துறை அமைச்சர். மனம் வெறுத்த மம்முட்டி, வேலையை ராஜினாமா செய்துவிட்டுத் தனது கண்டுபிடிப்புகளை பத்திரிகைகளிடம் ‘லீக்’ செய்து விடுகிறார். ஆளும் கட்சிகள் தேர்தலில் படுதோல்வியடைய, மம்முட்டியின் குடும்பம், சித்ரவதைக்கு ஆளாகிறது.

அசத்தும் பர்சனாலிட்டியும், பாத்திரத்துக்கேற்ற நடிப்புமாக மம்முட்டி இதமூட்டுகிறார். என்றாலும், தனது மனைவியை முதல்வரின் வீட்டிலேயே தங்க வைத்து, டில்லித் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு, முதல் வரையே டம்மியாக்க முயற்சிக்கும் பாத்திரத்தில் மன்சூர் அலிகான் காட்டும் நகைச்சுவை கலந்த வில்லத்தனம்தான் எடுபடுகிறது.

இரு ஆளும் கட்சிகளைத் தவிர மற்ற கட்சிகள் மற்றும் காட்சிகளின் பக்கம் பார்வையைத் திருப்பாமல் கதையை நகர்த்துவதில் இயக்குனரின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது.

கூர்மையான வசனம் - லியாகத் அலிகான். (பத்திரிகைகளின் முந்தைய ஆட்சி விமர்சனங்களும் கைகொடுத்திருக்கின்றன). சூடான காட்சிகளையும் மீறி பன்னீர் செல்வத்தின் காமிரா ‘ஜில்’லளிக்கிறது. கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள். தங்கள் வரிகள் தரமாகப் படமாக்கப்படுமா என்பது தெரியாத நிலையில் வள்ளுவர், வாசுகி போன்றவர்களையெல்லாம் பாடலில் நுழையவிட வேண்டாமே!

செல்வமணி இயக்கத்தில் ஜோடியில்லாத ரோஜா. பாசமுள்ள தங்கை; பரிதாப முடிவு - கதையோடு ஒட்டிய நடிப்பு. பெற்றோர் ஜெய் கணேஷ் - சுமித்ராவும் கச்சிதம்.

உடன் பிறப்புகளுக்கு உற்சாகமளிக்கக் கூடிய திரைப்படம். என்றாலும், எல்லா சம்பவங்களும் மிக விரிவாக முன்பே அலசப்பட்டு விட்டதால் ஆக்ஷன்-ரீப்ளே பார்ப்பது போல் இருக்கிறது - த்ரில் இல்லை.

— ஜி.

பொங்கல் நல்வாழ்த்துகள்!

# துர்கா மகளிர் ஓட்டுநர் பயிற்சி பள்ளி

(அரசு அங்கீகாரம் பெற்றது)

❖ பெண்களுக்கென்று தனிப்பட்ட முறையில்
2 – வீலர் (TWO-WHEELER) ஓட்டுவதற்கு பயிற்சி அளிக்கப்படும்.
*(16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்)*
ஐந்தே நாட்களில் கற்றுக் கொடுத்து லைசென்சும் பெற்றுத் தரப்படும்.
*(Motor cycle with gear, Motor cycle without gear)*

❖ மேலும் ஆண்கள், உடல் ஊனமுற்றவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கு குழுக்களாகவும் பயிற்சி தரப்படும்.
குறிப்பு:- வெளியூரில் உள்ளவர்கள், 50 பேருக்குக் குறையாமல் குழுவாகக் கற்றுக் கொள்ள விரும்பினால் அவர்களுக்கு நேரிலேயே வந்து பயிற்சி அளிக்கிறோம்.

தொடர்பு கொள்க

**MRS. DURGA CHANDRA SEKARAN**
**DURGA DRIVING SCHOOL,(NEAR ADYAR BUS DEPOT)**
**M2/5, MIG FLATS, INDRA NAGAR II AVENUE**
**ADYAR, CHENNAI - 600 020 PHONE : 415523**



# GITAA CASSETTES ☎ 494 0376 , 494 2530

# NEW RELEASES



SIDE A -
1. VINAYAKAMBHAJE
2. PAKALAVAN UTHI-THANAN
3. GNANAKADIR
4. AMBA MANONMANI
5. ANANTHASAYANAN
6. AACHARAM VENDUM

SIDE B -
1. VARALAKSHMI
2. ALPAMANAME
3. VANDE VENKATARA-MANAM
4. KANNANAI NAMUM

Rs. 36/-

**DEVOTIONAL SONGS**
Vol. I GCT 575




SIDE A
1. JAYA JAYA SRI RAMANA
2. PRATHASMARAMI
3. URAITHIDUVAI
4. YAAR ARIVAR
5. ARPUTHA KAKSHIYE
6. KARUNAI KADALAM

SIDE B
1. MAYAMANUSHA
2. GURUBAKTHI
3. RAMANAVASTHU
4. MAHALAKSHMI
5. GANESA SKANDA

Rs. 36/-

**DEVOTIONAL SONGS**
Vol. II GCT 576



SIDE A
1. VANDHEHAM
2. KALIYUGA VARADAN
3. ANNAPOORNE
4. THILLAIYILE

SIDE B
1. GOPALAKRISHNAM
2. NARAYANI
3. GAYATHRIYE
4. SHARADE
5. AAYIRATHI
6. MANGALAM

Rs. 36/-

**DEVOTIONAL SONGS**
Vol. III GCT 578

Produced and Marketed by :
**GITAA CASSETTES**
P. Box No. 2931 , Mylapore, Madras - 600 004.
Phone : 494 3551 FAX : 91-44-4953821
email : akshayaa@md2.vsnl.net.in

Postage : 1 Cassette to 5 Cassettes Rs. 18/-
above 5 Cassettes to 10 Cassettes Rs. 26/-

Packing & Forwarding Charges Free

Alos Available at all Leading Cassette Shops and also at
**GIRI TRADING AGENCY**
10, Sannadhi Street, Mylapore, Madras - 600 004. Ph : 494 0376, 494 2530

Write for Our Detailed Catalogue

# நீங்கள் கேட்டவை - தராசு



• அபவுட் டர்ன்!

● எம். பிச்சைக்கனி, திருமால்பூர் ❑

? வரும் பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தால், அது மக்கள் மதச்சார்பின்மைக்கு எதிராக வாக் களித்ததாகத்தானே அர்த்தம்...?

! இல்லை; ஸ்திரத்தன்மைக்கு ஆதரவாக வாக் களித்ததாகவே அர்த்தம்.

● ஆர். மார்டின், திருமானூர்.

? இனி காங்கிரஸின் கதி என்ன?

! அதோகதிதான்!

● ப. சுகுமார், தூத்துக்குடி - 1.

? அஸார் மீண்டும் கேப்டனாகியிருக்கிறாரே...?

! காங்கிரஸ், சோனியா காலில் போய் விழு வதற்கும் கிரிக்கெட் தேர்வுக் குழு அஸாரிடம் சரணடைவதற்கும் இடையே வித்தியாச மில்லை...

● வீ. முத்துக்குமார், திருமானூர்.

? மத்தியில் பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுமா?



• காங்கிரஸ் காவலர்...?!

! அது பி.ஜே.பி. முழு மெஜாரிட்டி பெற்று வரு கிறதா அல்லது முதலிடம் மட்டும் பெறுகிறதா? என் பதைப் பொறுத்த விஷயம். தேர்தலுக்குப் பின், தி.மு. கவே பி.ஜே.பியை வெளி யிலிருந்தோ உள்ளிருந்தோ ஆதரிக்க நேரலாம். அப்போது கலைப்பதாவது ஒண்ணாவது!

● வி. மோகன், நெல்லிக்குப்பம்.

? புலிகள் விவகாரம் என்பது உலகத் தமிழர் பிரச்னையாமே! ராமதாஸ் கூறியுள்ளது பற்றி..?

! அது பரவாயில்லையே... 'புலி கள் விவகாரம் இனி எங்கள் பிரச்னையே அல்ல...' என்று வைகோ அபவுட் டர்ன் ஆகி யிருக்கிறாரே!



• கவர்ந்த கைவண்ணம்

● கே.ஆர். உதயகுமார், சென்னை - 1.

? தாமே முன்வந்து வருமா னத்தை அறிவிக்கும் திட்டத் தில் அரசுக்கு ஏராளமான வரு மானம் வந்திருக்கிறதே?

! நாட்டில் பதுங்கியுள்ள கறுப்புப்பணத்தில் ஒரு பகுதிதான் வெளிவந்திருக்கும். அதுவே 33,000 கோடி என்றால்..! முழுவதையும் கொண்டு வர ஒரே வழி, ஓரிரு ஆண்டுகளுக்கு வருமான வரி கிடையாது என்று அறிவிப்பதுதான். அப்போது எல்லாமே வெள்ளையாகி விடும். பிறகு மீண்டும் மிதமான வருமான வரி விதிக்கலாம்.

● கே. ஜெயலக்ஷ்மி, சென்னை - 106.

? பாரதிய ஜனதா மட்டும்தான் கொள்கை யுள்ள கட்சி என்று குமாரமங்கலம் சொல்லி யிருக்கிறாரே?

! பார்த்துக் கொண்டேயிருங்கள்... அ.தி.மு.க. வையும் சொல்வார், பா.ம.கவையும் சொல் வார்... வேறு வழி? இவர்களுக்கெல்லாம் பதவி - ஆட்சி என்கிற ஒரே கொள்கைதானே...

● இரா. கல்யாணசுந்தரம், அனுப்பானடி.

? 1997-ல் உங்களைக் கவர்ந்த, பாதித்த, பரிதா பப்படச் செய்த தலா ஒரு நிகழ்ச்சி கூற முடி யுமா?

• சரணாகதி!





• இன்னமும் சொல்வார்!

## அஸார் மீண்டும் கேப்டனாகியிருக்கிறாரே..?

! கவர்ந்தது: பொன்னியின் செல்வனுக்குப் படம் போட வேண்டும் என்று கேட்டவுடனே தயங்காமல் ஒப்புக் கொண்டு, மணியம் வரைந்த முகங்களை அப் படியே வண்ணத்தில் கொண்டு வந்த பத்ம வாசனின் தைரியமும் கைவண்ணமும்.

பாதித்தது : சதாசிவம் அவர்களின் மரணம்.

பரிதாபப்படச் செய்தது : கலை விமர்சகர் ஒருவர் 'கவனித்தால்' கலைஞரை 'கவனிக்கிறார்' என்று வெளியிட, அதைக் கண்டு கொதித்தெழுந்த சுப்புடு. தமது தர்பாரில் வக்காலத்து வாங்க முயன்றது... அவரது அறியாமையை நினைத்தால் பரிதாபமாயிருக்கிறது.



• கஞ்சி....



• ... ஆறிவிடுமா?



• புராணங்களைப் புரட்டி...

● பி. மாதேஸ்வரன், அவிநாசி.

**? சோனியாவின் பிரசாரம் காங்கிரசுக்கு வளர்ச்சியைக் கொடுக்குமா?**

! படுத்த படுக்கையாக இருக்கிற கட்சியை எழுந்து உட்கார வைக்கலாம்; ஆனால் நடக்கச் செய்ய முடியுமா என்பது கூடச் சந்தேகமே...

● கே.ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.

**? இத்தனை பெரிய தோல்வி, ஊழல் குற்றச் சாட்டுகள், நீதி மன்றத் தீர்ப்புகளுக்குப் பிறகு கூட 'ஜெ'யின் அறிக்கைகளில் அதே பழைய ஆணவம் தொனிப்பதை கவனித்தீர்களா?**

! குற்றம் புரிந்துவிட்டு குறுகுறுக்கும் மனத்துடன் தவிப்பவர்; வாய்ப்புத் தரப்பட்டால் திருத்திக் கொள்ளத் தயாராக இருப்பவர் - மனித ரகம். எப்பேர்ப்பட்ட குற்றமும், தாம் செய்தால் குற்றமல்ல, அதுதான் சரி; தான் செய்வது எதுவுமே தவறாக முடியாது என்றெல்லாம் நினைப்பவர் எந்த ரகம்? புராணங்களைப் புரட்டினால் புரியும்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

**? அ.தி.மு.கவினர் அலகு குத்திக் கொண்டதற்காக ஜெயலலிதா கண்டித்திருக்கிறாரே?**

! தொண்டர்கள் அலகு குத்திக் கொள்வதைக் கண்டித்துவிட்டு; தொண்டர்களைக் கண்ணே, மணியே என்று புகழ்ந்து பாடி காது குத்துகிறாரே!



• பரிதாப வக்காலத்து!

● கே.எம். ஸ்வீட்முருகன், கரடிகொல்லப்பட்டி.

**? உஷா வார இதழை டி. ராஜேந்தர் ஏன் நிறுத்தி விட்டார்?**

! உஷாராயில்லாததால்தான்...!

● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9.

**? நெல்லை மாநாடு எப்படி?**

! 'நான் குற்றமற்றவள், பழிவாங்கப்படுகிறேன்' என்று பசுத்தோல் போர்த்திக் கொள்ள ஜெயலலிதாவுக்கு நெல்லை மாநாடு உதவியது. அதைத் தவிர உருப்படியாக எதையும் சாதிக்கவில்லை.



• பாதித்த மறைவு

● சி. பழனிசாமி, சென்னை - 59.

**? 'ரெடிமணி' நிறுவனம் கூடத் தள்ளாடுகிறதாமே? - இது உங்களுக்கு அதிர்ச்சி தரவில்லையா?**

! இச் செய்திக்கு ரெடிமணி தரப்பிலிருந்து மறுப்பு வந்துள்ளது. ஒரு சில நிதி நிறுவனங்கள் படுத்து விட்டதால் பொதுவாக எல்லா நிறுவனங்களில் பணம் போட்ட முதலீட்டாளர்களும் பயந்து போய் பணத்தைத் திரும்பப் பெற முயற்சி செய்கிறார்கள். இந்த panic reaction காரணமாக பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ரிசர்வ் வங்கி புதிய பாதுகாப்பு விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளதால் எதிர்காலத்திலாவது அச்சமிராது என்று நம்பலாம்.

**ரூ. 50 பரிசு பெறுபவர்:**
**❑ எம். பிச்சைக்கனி,**
**7, பள்ளத்தெரு,**
**கீழ்வெண்பாக்கம், திருமால்பூர் அஞ்சல்,**
**அரக்கோணம் தாலுகா, வேலூர் மாவட்டம்.**

● டி. அரவிந்த் பகபதி, ஊஞ்சவேலாம்பட்டி.

**? தி.மு.க. - த.மா.கா. கூட்டணி, ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டு 'ஹாட் பேக்'கில் வைக்கப்பட்ட சாப்பாடு போன்றது என முதல்வர் கூறியுள்ளாரே?**

! ஹாட் பேக்கில் மூடி இறுக்கமாக இல்லாவிட்டால் சூடு ஆறிவிடும். உறவு இறுக்கமாக இல்லாவிட்டால், கூட்டணியும் ஆறின கஞ்சி தான்! ○


**நா**ம் வாழும் பூமியைச் சூழ்ந்துள்ள வளிமண்டலப் பகுதியை அறிவியலாளர்கள், ஐந்து பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவற்றில் நமக்கு முக்கியமான பகுதிகள் இரண்டு. தரையை ஒட்டியுள்ள - மனிதர் மற்றும் ஏனைய உயிரினங்கள் வாழும் பகுதிக்கு 'ட்ரொபோஸ்ஃபியர்' (troposphere) என்று பெயர். துருவப் பிரதேசங்களில் தரையில் இருந்து சுமார் 6 கி.மீ. உயரம் வரையிலும் பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகளில் சராசரியாக 11 கி.மீ. உயரம் வரையிலும் செறிந்துள்ள இப் பகுதியினை அடுத்து இடம் பெற்றிருப்பது 'ஸ்ட்ராட்டோஸ்ஃபியர்' (stratosphere). இது தரையில் இருந்து ஏறத்தாழ 40 கி.மீ. உயரம் வரை பரந்திருக்கிறது.

ஓஸோன் வாயுப் பிரதேசம் இந்த 'ஸ்ட்ராட்டோஸ்ஃபிய'ரில்தான் அமைந்துள்ளது.

நீராவி, கார்பன்-டை-ஆக்ஸைடு ஆகிய இரண்டினையும் அதிக அளவில் கொண்டிருக்கும் 'ட்ரொப்போஸ்ஃபியர்' பூமியில் இடம்பெறும் பருவக் காலங்களின் 'மேடை' என்று சொல்லப்படுகிறது. அதே போன்று, பூமியில் வாழும் உயிரினம் யாவற்றுக்கும் 'உயிராய்' விளங்கும் ஓஸோன் அடுக்கினை (ozone layer) உடைய 'ஸ்ராட்டோஸ்ஃபியர்' உயிரினத் தோற்றத்திற்குக் காரணமாக இருந்ததாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஓஸோன் அடுக்கில் அதி செறிவுமிக்க பிரதேசம், தரையில் இருந்து சுமார் 25 கி.மீ. உயரத்தில் இடம்பெற்றிருக்கிறது. இதன் செறிவு அல்லது தடிமன் எவ்வளவு தெரியுமா? 3.5 மி.மீதான்.

1970 முதல் 1985 ஆண்டு வரையிலுமான 15 வருட காலப் பகுதியில் அன்டார்டிக் பிரதேசத்திற்கு மேல் ஓஸோன் அடுக்கின் செறிவு ஐம்பது சதம் வீழ்ச்சியடைந்திருந்ததை ஆய்வுகள் சுட்டிக்காட்டின.

1987-ல் தென்துருவப் பிரதேசத்தில் ஓஸோன் வாயுவின் செறிவு 1.21 மி. மீட்டராக வீழ்ச்சியடைந்திருந்தது. 1992-ல் இப்பகுதியில்



புற்றுநோயை உருவாக்குவதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. மனித உடலில் காணப்படும் நோய் எதிர்ப்புத் திறனையும் வெகுவாகப் பாதிக்கிறது. அத்துடன் கண்களில் ஏற்படும் சதை வளர்ச்சிக்கும் இது தூண்டுகோலாக விளங்குகிறது. இவற்றோடு விலங்குகள், தாவரங்கள் ஆகியனவும் பாதிப்படைகின்றன.

# ஓஸோன் ஓட்டை – ஒட்டுப் போட முடியுமா..?

பாதிப்புற்றிருந்த பிரதேசத்தின் பரப்பளவு சுமார் 23 மில்லியன் சதுர கி.மீக்கும் அதிகமாயிருந்தது. அதே சமயம், வடதுருவப் பகுதியிலும் ஓஸோன் அடுக்கு நலிவடைந்திருந்தது.

ஓஸோன் அடுக்கில் ஏற்படும் இடைவெளி (ஓட்டை) காரணமாக, சூரியக் கதிர்களில் உள்ள புற-ஊதாக் கதிர் 'பி' (UV-B) அதிக அளவில் பூமியை வந்தடைகிறது.

சருமப் புற்றுநோயின் பிரதான காரணியாக விளங்கும் UV-B கதிர்கள், வட அமெரிக்காவில், வடதுருவப் பிரதேசங்களை ஒட்டிய பகுதிகளில் ஆரம்பித்து, ஒவ்வொரு இரண்டு அல்லது மூன்று பாகை அட்ச ரேகைக்கும் ஒரு சதவிகிதம் என்கிற விகிதத்தில் அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறு அதிகரிக்கும் UV கதிர்கள் புற்றுநோயை உருவாக்குவதுடன் மட்டும் நின்று விடுவதில்லை. மனித உடலில் காணப்படும் நோய் எதிர்ப்புத் திறனையும் வெகுவாகப் பாதிக்கிறது. அத்துடன் கண்களில் ஏற்படும் சதை வளர்ச்சிக்கும் இது தூண்டுகோலாக விளங்குகிறது. இவற்றோடு விலங்குகள், தாவரங்கள் ஆகியனவும் பாதிப்படைகின்றன.

கால்நடைகளின் உணவாகப் பயன்படும் தாவரங்களில் UV கதிர்களால் ஏற்படும் பாதிப்புகள், அவற்றை உண்ணும் விலங்குகளையும் பாதிப்பது தெரியவந்துள்ளது.

இந்த ஓஸோன் அடுக்கு எதனால் ஓட்டையாகிறது? குளோரோ ஃப்ளோரோ கார்பன் (CFC) என்னும் வாயுவால்தான் முக்கியமாகப் பாதிக்கிறது. இந்த வாயு, ரெப்ரிஜிரேட்டர் மற்றும் ஏர்கண்டிஷனர் போன்ற உபகரணங்கள் இயங்கும்போதும் பிளாஸ்டிக் உற்பத்தியின் போதும் வெளியாகிறது. இதுதான் மேலே சென்று ஓஸோன் படலத்தைப் பாதிக்கிறது. மேலும் கார்பன் டெட்ரா குளோரைட், மெதைல் குளோரோஃபோம் போன்றவற்றாலும் ஓஸோன் அடுக்கு பாதிக்கப்படுகிறது.

1987-ல் மொன்ட்ரியேலில் நிகழ்ந்த உலகத் தலைவர்கள் மாநாட்டின் போது, மனிதர்களால் ஓஸோன் அடுக்கின் சீரழிவு பற்றி பேசப்பட்டது. ஏற்கெனவே விழுந்து விட்ட ஓட்டையை ஒட்டுப் போட முடியாது. ஆனால், இம்மாநாட்டில் உருவான உடன்படிக்கை மூலம், கி.பி. 2000ம் ஆண்டளவில், CFCயை உற்பத்தி செய்யும் இயந்திரங்களின் உபயோகத்தை முற்றாக மாற்றி விடுவதற்கான ஏற்பாடுகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. இதற்கான திட்ட வரைவு ஒன்றும் இங்கு பரிசிலனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. சுமார் 86 நாடுகள் இத்திட்டத்தில் இணைந்து கொண்டன.

இவ்வுடன்படிக்கை மூலம் ஓஸோன் அடுக்கினைப் பாதிக்கும் CFC, கார்பன்டெட்ரா குளோரைட், மெதைல் குளோரோஃபோம் என்பவற்றைப் படிப்படியாக இல்லாமலே செய்துவிடும் திட்டமும் உருவாக்கப்பட்டது. இதன்படி 2000-மாவது ஆண்டில் இவை முழுமையாகவே இல்லாமல் செய்யப்படும். ஓஸோன் அடுக்கினை அழிக்கும் ஹைட்ரோ குளோரோ ஃபுளோரோ கார்பன் (HCFC) களுக்கு மட்டும் 2020 முதல், 2040 வரை எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முழுமையாகச் செயல்படுத்தப் படுமானால் தான் நமது அடுத்த தலைமுறை ஓஸோன் பாதுகாப்போடு வாழ முடியும். இல்லையேல் இல்லைதான்.

— சர்வசித்தன்

# சுர்லா தப்பியதில் ஏராள மர்மங்கள்!

இரண்டு மாதங்களுக்கு முன் தம்மைச் சந்தித்த ஒரு தமிழ்ப் பத்திரிகை நிருபரிடம் "நீங்க அடிக்கடி வாங்க... நிறைய விஷயங்கள் சொல்லணும்" என்று கூறியிருக்கிறான், இப்போது ஆஸ்பத்திரியிலிருந்து ஜூட் விட்டு ஓடிவிட்ட சுர்லா.

சுர்லாவுக்கு டி.பி., ஆஸ்த்துமா தவிர சமீப காலமாக எய்ட்ஸும் இருந்ததாகக் கண்டறியப்பட்டது. அதன் காரணமாகத் தாம்பரம் சானடோரியம் ஆஸ்பத்திரிக்கு, ஜெயிலிலிருந்து அடிக்கடி அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சென்ற நவம்பர் மாதம் 29-ம் தேதி முதல் ஆஸ்பத்திரியிலேயே சேர்க்கப்பட்டான். அங்கிருந்த போதுதான், இந்த மாதம் இரண்டாம் தேதி சம்பி நீட்டி விட்டான்.


விஸ்தாரமான தாம்பரம் சானடோரியத்தின் வார்டுகள் நீண்ட கொட்டகைகள் போல் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. இதில் வார்டு நம்பர் எட்டும், பத்தும் கைதிகளுக்கு டி.பி. என்றால் அனுமதிக்கப்படும் வார்டுகள் என்பதால் ஜெயில் வார்டு என்றே அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு வார்டுகளைச் சுற்றிலும் பதினைந்து அடி உயரத்துக்கு இரும்பு வேலி இருக்கிறது. பத்தாம் நம்பர் வார்டில் தான் சுர்லா வைக்கப்பட்டிருந்தான்.

"எங்ககிட்ட நல்லா பேசிக் கொண்டிருப்பான். விசாரணை அதிகாரிகள், போலீஸுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு வந்து சந்திக்கும் பத்திரிகையாளர்கள் தவிர, வேறு தனிப்பட்ட நண்பர்கள், சொந்தக்காரர்கள் யாரும் அவனைப் பார்க்க வருவதில்லை. சில நேரங்களில் விட்டத்தை அண்ணாந்து பார்த்தபடி உட்கார்ந்து இருப்பான். பக்கத்துப் படுக்கை நோயாளி ஒரு முஸ்லீம். ஆதலால் அவர் மனைவியிடம் இந்தியில் பேசிக் கொண்டிருப்பான். தப்பிச் சென்ற அன்று, சாப்பாட்டுக்கு முன்னர் குளித்துவிட்டு வருவதாகக் குளியல் அறைக்குச் சென்றவன் ஜன்னல் வழியாக வெளியேறித் தப்பித்து விட்டான்" என்று நம்மிடம் சொன்னார் ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர்.

இரும்பு வேலி பதினைந்து அடி உயரம் இருந்தாலும் கீழே படுத்தபடி ஊர்ந்து வெளியேறுவதற்கு இடைவெளி இருக்கிறது. சானடோரியத்தில் மக்களுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் இருக்கும் பன்றிகள் அந்த இடைவெளியைப் பயன்படுத்தித்தான் வார்டுக்குள் நுழைகின்றன. குளியல் அறை ஜன்னலை சுர்லா உடைத்து விட்டுத் தப்பவில்லையாம். அந்தக் குளியல் அறைக்கு ஜன்னல் கதவே கிடையாது என்பது தான் உண்மையாம். காவலுக்கு இருந்த ஐந்து ஆயுதப் படைப் போலீஸ்காரர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதில் இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தப்பிச் சென்ற சுர்லா எங்கு சென்றிருப்பான்? அரசியல் 'கரம் மசாலா' சேர்ந்த வழக்காதலால், அவன் தப்புவதற்கு யாராவது அரசியல்வாதி உதவியிருப்பாரா? இப்போது தப்பிச் செல்லக் காரணம் என்ன? சங்கிலித் தொடராகக் கேள்விகள் எழுகின்றன!

"அ.தி.மு.க. ஆட்சியின் போது ஆசிட் வழக்கைப் பதிவு செய்த போலீஸ் அதிகாரிகள், வழக்கை திசை திருப்பும் முயற்சியாகவும், யாரையோ காப்பாற்றும் விதமாகவும் சுர்லாவின் பெயரைச் சேர்த்திருக்கிறார்கள். அந்தத் தியாகத்தைச் செய்ததற்கான சரியான ஊதியம் தரப்படாததோடு, கொடுத்த வாக்குறுதிகளின்படி சம்பந்தப்பட்டவர்கள் செயல்படவில்லை என்பதும் பின்னாட்களில் சுர்லா காட்டிய எரிச்சல்களில் இருந்து தெரிகிறது. ஆசிட் வீச்சுக்கு ஏற்பாடு செய்தவர்கள் யார் என்ற விவகாரம் சுர்லாவுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் அவனுக்கு நேரிடையாகச் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. இடையில் ஒருமுறை கோர்ட்டில் மதுசூதனன், சசிகலா பெயரை நிருபர்




கனிடம் சத்தமாகச் சொல்லியிருக்கிறானே தவிர, அதற்கு மேலும் வாயைத் திறக்க மாட்டேனென்கிறான். இப்போது உயர்நீதிமன்ற உத்தரவின்படி, சி.பி.ஐ. மீண்டும் தீவிரமாக விசாரணை செய்தால் எங்கள் ஆட்கள் உட்பட பலர் மாட்டுவார்கள்'' என்று நம்மிடம் கூறினார், இந்த விவகாரத்தைக் கூர்மையாகக் கவனித்து வரும் ஒரு மாநில காவல் துறை அதிகாரி. விசாரணை சி.பி.ஐ. கையில் இருக்கிறது.

நெல்லையில் கோலாகலமாக அ.தி.மு.க. மாநாடு நடக்கும் சமயத்தில் சென்னையில் எஸ்கேப் ஆகியிருக்கிறான் கர்லா. 'கர்லா தப்பித்து வெளியே வந்து இருப்பதால் சந்திரலேகாவுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்' என்ற கோரிக்கை கொஞ்சம் விசித்திரமாக இருந்தாலும் அதிலும் விஷயம் இல்லாமல் இல்லை. யாரோ 'ஏற்பாடு' செய்து தாக்கப்பட்டு இருப்பார் சந்திரலேகா.' மீண்டும் அவரைத் தாக்க யாராவது முயலுவார்களா என்பது முதலில் ஒரு கேள்விக்குறிதான்! ஆனால் 'டிட்கோ' பங்கு ஊழல் வழக்கில் ஜெயலலிதாவைக் கடுமையாகக் கண்டித்து சமீபத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்திருப்பதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். இந்தப் 'பங்கு' விவகாரத்தில் அன்றைய ஆட்சியாளர்களுக்கு வளைந்து கொடுக்காமல் அப்போதைய டிட்கோ சேர்மனான சந்திரலேகா செயல்பட்டதாகவும் அதன் விளைவாகத்தான் 'ஆசிட் வீச்சு' என்பதும் பரவலாகச் சொல்லப்பட்ட காரணம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். விரைவில் தேர்தல் என்பதும் 'தம் மீது போடப்பட்டிருப்பதைப் பொய் வழக்கு' என்று ஜெ. சொல்லி வருவதும் குறிப்பிடத்தக்கது.

''இந்த நிலையில் கர்லா ஏதையாவது 'உளறி' வைத்தால் என்னாவது என்கிற கவலை சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதும், அதன் காரணமாக அவன் தப்ப வைக்கப்பட்டிருக்கலாம் என்பதும் ஒதுக்கித் தள்ளிவிடக் கூடிய வாதங்களல்லவே!'' என்றும் சொல்லப்படுகிறது.

இப்போது கர்லாவைத் தேடி போலீஸ் படை சகல திசைகளிலும் பறந்திருக்கிறது. ''தீவிர மருத்துவ கண்காணிப்பில் இருக்க வேண்டியவன் கர்லா. அவன் தொடர்ச்சியாக ஓடிக் கொண்டே இருக்க முடியாது. எங்காவது மறைவான இடத்தில் தங்கி சிகிச்சையைத் தொடர்ந்தே ஆக வேண்டும்'' என்று மருத்துவமனை வட்டாரம் சொல்கிறது. தமிழக போலீஸின் திறமை நாளுக்கு நாள் தேய்ந்து வருவதாக எதிர்க்கட்சிகள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் கர்லாவை மீண்டும் பிடித்து, மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க முடிந்தால், அது உண்மையிலேயே பெரிய சாதனையாகத்தான் இருக்கும். ●

— கௌசி



பழனியில் பக்தர்கள் இட்டுக் கொள்ளும் விபூதியே போலி... அது சரும நோய்க்குக் காரணமாகிறது என்று ஒரு பத்திரிகை எழுத, 'விட்டேனா பார்...' என்று ஒரு தனியார் டீ.வியும் இதை உறுதிப்படுத்துவது போல் தன் சிறப்புப் பார்வையை தீட்சண்யமாய் பழநிப் பக்கம் திருப்ப... நம் ஆண்டிக் கோலமிட்ட பழனியாண்டவர் அதிர்ந்தாரோ இல்லையோ, நாம் ரொம்பவும் குழம்பிப்போனோம்.

விபூதியில் போலி?

நெற்றியில் இட்டவர்க்கே சரும வியாதி என்றால் பயபக்தியுடன் வாயில் போட்டுக் கொண்டும், தலையில் தூவிக் கொண்டு, உடம்பு முழுக்க பூசிக் கொண்டு இருக்கும் பக்தர்களின் கதி என்னாவது...?

# பழனி விபூதி போலி விபூதி..?

– உண்மை நிலை அறிய பழநி மலை ஏறி ஒரு சுற்று சுற்றினோம்.

“மோசமான குங்குமம் வச்சதால சில பேர் நெற்றி புண்ணாகி, கறுப்பா தழும்பாகியிருக்குமே... அது மாதிரி தான் சார் இதுவும்...நெற்றி பூரா படை படையா அரிச்ச மாதிரி... வருதாம்...”

“வாயில் போட்டுக்கிறவங்க கூட ஏதோ வயித்து உபாதையில அவதிப்படறதா, வாயில் புண் வர்றதாச் சொல்றாங்க...”

“சாணம் தட்டி, அதைக் காய வச்சு, மூட்டம் போட்டு, நாலுநாள் அஞ்சுநாள்னு ஆறவச்சு, அப்புறமா தண்ணியிலே வடிகட்டி, மறுபடி காய வச்சு, உடைச்சு சலித்து பக்குவமா விபூதியாக்கியதெல்லாம் அந்தக் காலம். இப்ப எல்லாம் நெல் உமிதான்... சில பேர் அதுகூட இல்லை... மடத்துக்குளம் பேப்பர் மில் கழிவுகளை வச்சு எரிச்சு கலப்படமா விபூதி தயாரிச்சுடறாங்க...!”


“அதுல உள்ள கெமிக்கல்ஸ்தான் இந்த பக்க விளைவை ஏற்படுத்துகிறதுன்னு தகவல்...”

இப்படி நம்மை ஆளுக்கொரு பக்கமாய் எதிர் கொண்டனர் சில இளைஞர்கள். அப்படி யாரும் பாதிக்கப்பட்டவர் உள்ளார்களா...? என்று கேட்டதும் எல்லோரும் ஏனோ அப்படியே நெளிந்து காணாமல் போயினர்!சரி... இந்தப் போலி விபூதி தயாரிப்பு யார் செய்கிறார்கள் என்று விசாரித்த போது இரண்டு பெரிய விபூதி ஸ்டோர்ஸின் பெயர்களை நமக்கு மிக 'ரகசியமாய்' ஒரு கடைக்காரரே சொல்லிவிட்டு வாய்மூடி மௌனியானர்.

ஆனால் அதே மாதிரி ஒரு சிறு கடைக்காரர் (அரசு விபூதி ஸ்டோர்- அரசு பகவதி) சுத்தமாய் அதை மறுத்தார்.

“சில்லரை கடைக

• பழனிமலை





* பழனி ஆண்டவர் கோவில்


வேணும்ன்னா இந்த செயலைச் செய்யலாம்... பெரிய கடைகள் கண்டிப்பாய் இதைச் செய்யாது... காரணம் அவங்களுக்கு 'பிராண்டு' முக்கியம். போலி விபூதின்னு பத்து வருஷம் முன்னால கொஞ்சம் உலாவினதா தகவல். அதுவும் பேப்பர் கழிவுகளெல்லாம் கிடையாது. ரொம்ப நயமாக இருக்கிற மாதேஸ்வரன் மலை மண்... அது பில்டர் செய்ய வேண்டியதில்லை... அரைத்து விட்டாலே ப்யூர் ஒயிட்டில் சுத்தமா பவுடர் போல இருக்கும். அது காலப் போக்கில் கண்டு பிடிக்கப்பட்டு, பேர் கெட்டுப் போகுமென்று பலரும் அதைக் கை விட்டு விட்டனர். இப்போதெல்லாம் அப்படி எதுவும் இல்லை. நெல் உமி மூட்டம் போட்டும் அதைச் சரி செய்து விபூதியெடுக்கவே சுத்தமாய் ஐந்து நாள் ஆகிவிடும். சிறு சிறு நடைபாதைக் கடைகளில் வேண்டுமானால் அதுமாதிரி குறைந்த விலையில் விற்கலாம்.. அதுவும் சரும நோய் வருவது என்பதெல்லாம் நாங்கள் இதுவரை கேள்விப்படாதது..."

அடிவாரத்திலிருந்து மலை மேலே நாம் சென்ற இடமெல்லாம் வழி நெடுக ஏகப்பட்ட வால் போஸ்டர்கள்...

"அவதூறு கிளப்பின பத்திரிகையே, மன்னிப்புக் கேள்..."



* மலையேறும் பக்தர் கூட்டம்



* அரசு பகவதி

பழநி என்றவுடன் சடாரென்று நினைவுக்கு வரும் மிகப் பிரபலமான சித்தனாதன் அண்ட் சன்ஸ் விபூதி ஸ்டோர்ஸ் அதிபர் சிவனேசனை இது விஷயமாய்ச் சந்தித்தோம்.

"விபூதியைப் பொறுத்தவரை எங்களுடையது புனிதமான, மரியாதைக்குரிய தொழில். 77 வருஷமாக நடத்துகிறோம். எங்களுடைய இந்தத் தொழிலால் இங்கு இரண்டாயிரம் குடும்பங்கள் பிழைக்கின்றன. நெல் உமியில் செய்யும் எங்கள் விபூதிக்கு 'பெர்ப்யூம் மிக்ஸ்' பண்ணி வாசனை கூட்டுகிறோம். மூட்டம் போட்டு வரும் நெல் உமியை நாங்கள் நீருள்ள மூன்று தொட்டிகளில் இட்டு, ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு பில்டர் செய்து அதையே மூன்று முறை செய்து... சொன்னால் விளங்காது; வேண்டுமானால் நீங்களே போய்ப் பாருங்கள்..."

– என்று நம்மை கடைச் சிப்பந்தியுடன் அனுப்பி வைத்தார். பழனி மலையிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் விபூதி தயாரிப்புக்கென ஒரு பெரிய யூனிட்டே இயங்குகிறது. சிமெண்ட் மூட்டைகளைப் போல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மூட்டம் போடப்பட்ட உமி பவுடர் ஒரு தொட்டி நீரில் இட்டு வைத்திருக்கின்றனர். ஓரிரு நாள் கழித்து, கழிவு நீக்கி தொட்டியின் அடித்தங்கும் மென்மையான உமிக் கூழை இன்னொரு தொட்டியில் இட்டு, மேலும் மென்மையாக்கப்பட்டு, காய வைக்கப்பட்டு, அது



''இந்தத் தேர்தலிலே நம்மகட்சி ஒரு தொகுதியிலே கூட தோற்கக் கூடாதுங் கறதுக்காக தலைவர் ஒரு புது வியூகம் அமைச்சிருக்காரு.''

''எப்படி?''

''எந்தத் தொகுதியிலேயும் நம்மக் கட்சி போட்டியிடப் போவதில்லையாம்!''

– கபிஸ்தலம் எஸ். இராஜேந்திரன்



''மனித சங்கிலி போராட்டத்தில், நம்ம தொண்டர்களுடன் பங்கேற்கப் பொது மக்கள் யாரும் தயாராயில்லையா! ஏன்?''

''போன முறை, மனித சங்கிலி போராட் டத்தின்போது, நம்ம தொண்டர்கள், பொது மக்களோட கை கெடிகாரம், வளையல், மோதிரத்தையெல்லாம் உருவிட்டாங்க தலைவரே.''

– ஜெ. கண்ணன்

''ஓட்டல், நஷ்டத்திலே இயங்கிக்கிட்டி ருக்கலாம்! அதான் இப்படி சிம்பாலிக் காகக் காட்டறாங்க.''

– டி.என். பாலகிருஷ்ணன்




உதிர்க்கப்பட்டு, அந்த வெண்தூள் சல்லடை யில் சலிக்கப்பட்டு வாசனையிடப்பட்டு... ''அப்பப்பா... இந்த ப்ராசஸ் முடியவே இரண்டு மூன்று நாளாகி விடும்'' என்றனர் சிப்பந்திகள். பேக்கிங் செக்ஷன், மிக்ஸிங் (வாசனை) என எல்லாம் தனித்தனி. முப்பது கிலோ மூட்டம் போட்ட உமிக்கு 5 அல்லது 6 கிலோ விபூதி கிடைத்தாலே அதிகம். இந்த ப்ராசஸை வந்து பார்த்த ஹெல்த் இன்ஸ் பெக்டரே அசந்து போய், வாய்மூடிப் போனாராம்!

"இந்தப் பழைய முறையை அப்படியே பின்பற்றுவதற்கு, இன்றைய டெக்னிக்கோடு செய்யலாமே"– என்று கேட்டபோது, "இங்கே எங்க சகோதரர்கள் எல்லாம் படித்தவர் கள்தான். ஆனாலும் புதிய முறைகளைப் புகுத்தாமல் இதை இப்படியே செய்ய றோம்னா இது அந்த மரபு மாறாமல் இருக் கணும்னுதான்... பெரியவங்களுக்குக் கொடுக்கிற மரியாதைதான்...''

– நெகிழ்ச்சியுடன் சொன்னார் இத் தொழிற் கூடத்தை நிர்வகிக்கும் சிவனேசனின் சகோதரர்.

இது பற்றி தேவஸ்தான இணை ஆணையாளர் அலுவலகத்தில் விசாரித்ததில்...


"இதெல்லாம் ஏதோ வேண்டாதவர்கள் கிளப்பி விட்ட வீண் புரளி.... தேவஸ்தானக் கடைகளில் எங்க பார்வைக்கு அப்படி எதுவும் இல்லை. இருந்தாலும், போலி விபூதி உள்ளதா என ஆராய நகராட்சிக்குத் தகவல் அனுப்பப்பட்டு நடவடிக்கையும் எடுக் கப்பட்டு வருகிறது... விபூதி என்கிற பெயரில் சாலைகளில் வைத்து விற்கும் சிலர் மீது நாங்கள் எப்படி நடவடிக்கை எடுப்பது?'' என்கின்றனர்.

பழனி நகர சபைத் தலைவர் திருமதி லீலாவதியை போனில் தொடர்பு கொண் டோம்.

"போலி விபூதி எங்களுக்கும் பத்திரிகைச் செய்திதான் சார்... இதனால் இன்ன பாதிப்புன்னு யாருமே இங்கே ரிப்போர்ட் டுடன் வரலை. பதிவும் ஆகல. என்றாலும் பழநிக்கு வரும் பக்தர்கள் விபூதி பூசவே பயந்து போயிட கூடாது அல்லவா? அப்படி நம்பி பூசறவங்களுக்கும் ஏதாவது எதிர் வினை வந்துவிடக் கூடாது அல்லவா? அதன் நிமித் தம் எங்க ஹெல்த் இன்ஸ்பெக்டர் மூலமாக பல விபூதிக் கடைகளுக்கு விசிட் செஞ்சு சாம்பிள் எடுத்து லேபுக்கு அனுப்பியும் வெச்சிருக்கோம். அப்படி ஏதும் தவறு இருந்தா கண்டிப்பா நடவடிக்கை எடுப்போம்'' என்றார். ●

கட்டுரை, படங்கள்: **கா. சு. வேலாயுதன்**

## காதில் விழுந்தவை :



# காஞ்சிக்குப் போய் வந்த தி.மு.க. அமைச்சர்!

● த.மா.கா. அலுவலகத்தில் செய்தித் தொடர்பகம் ஒன்றைத் துவக்கியிருக்கிறார்கள். செய்தித் தொடர்பாளர் ஞானதேசிகன் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு ஓய்வில் இருப்பதால் கோபண்ணா பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார். தினசரி பத்திரிகையாளர்களைச் சந்திக்கும் பொறுப்பு, பீட்டர் அல்போன்ஸ், ஜெயந்தி நடராஜன், சோ. பாலகிருஷ்ணன் ஆகியோருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூவரில் யாராவது ஒருவர் பத்திரிகையாளர்களைச் சந்திப்பார். த.மா.கா. வேட்பாளர்களைத் தக்க முறையில் அறிமுகப்படுத்த விஜய் தொலைக்காட்சியிலும் slot கேட்டிருக்கிறது த.மா.கா.

● இந்தத் தேர்தலில் ரஜினி தி.மு.க. - த.மா.கா. கூட்டணிக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பாரா இல்லை அடக்கி வாசிப்பாரா என்றெல்லாம் விவாதம் சூடேறிக் கொண்டு வரும் இந்தச் சமயத்தில் அவரது சினிமா மார்க்கெட் பற்றி ஒரு விநியோகஸ்தரிடம் விசாரித்தோம். "கடைசியா வந்த படம் அருணாச்சலம். இதை வாங்கிய விநியோகஸ்தர்கள் செமை அடி வாங்கி விட்டார்கள். பொதுவாகவே ரஜினி படங்கள் இரண்டாவது ஓட்டம் நன்றாகப் போகும். ஆனால் அருணாச்சலம் இதுவரை இரண்டாவது ரவுண்டு போகவில்லை. காரணம் அதன் ரேட்தான். தியேட்டர்காரர்கள் ரிஸ்க் எடுக்கத் தயாராக இல்லை" என்று புலம்பினார் மீரான் சாகிப் தெரு விநியோகஸ்தர் ஒருவர்.

● அந்த இரண்டெழுத்து தி.மு.க. அமைச்சருக்கு மீண்டும் போட்டியிட சீட் கிடைக்குமா? தனிப்பட்ட முறையிலும், வியாபாரத்திலும், அரசியலிலும், ரொம்பவே நொந்து போயிருக்கிறார் அவர். ஒரு நடை காஞ்சிபுரம் சென்று தன் மனக்குமுறலை "பெரியவரிடம்" கொட்டி விட்டு வந்திருக்கிறார்.

● இப்போது அ.தி.மு.க.வில் பாண்டியன்கள் உய்யலாலா பாடிக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளும், மாற்றுக் கட்சிக்காரர்களும் மாநாட்டில் எதிர்பார்த்தபடி கூட்டம் வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் அம்மா ஹேப்பிதானாம். குறிப்பாக மாநாட்டை நல்லபடியாக நடத்தி முடித்த நெல்லை மண்ணின் மைந்தர்களான கருப்பசாமிப் பாண்டியன் மற்றும் பி.ஹெச். பாண்டியன் ஆகியோரை மிகவும் பாராட்டிக் கொண்டிருக்கிறாராம் ஜெ. அதுவும் பி.ஹெச். பாண்டியன் இப்போது அ.தி.மு.க.வின் சிந்தனை ஊற்றாக மாறிக் கொண்டிருக்கிறாராம். அதிர்ஷ்டம் கைகூடி வருமானால் நெல்லை பாராளுமன்றத் தொகுதி அவருக்குத் தரப்படலாம் என்கிறார்கள ரத்தங்கள்.

● நெல்லை மாநாட்டின் போது கருப்பசாமிப் பாண்டியன் வீட்டில் விருந்துண்ணச் சென்ற ஜெ., கோபால்சாமி வீட்டுக்கு ஏன் போகவில்லை? ம.தி.மு.க. வட்டாரத்தில் விசாரித்தோம். "ஜெயலலிதா எங்கள் பொதுச் செயலாளர் வீட்டுக்கு விருந்துண்ணச் செல்வதாக எந்தத் திட்டமும் கிடையாது. பத்திரிகைகள் உருவாக்கி அவைகளே சாகடித்த செய்தி அது" என்கிறார் சென்னைப் பிரமுகர் ஒருவர். மாநாட்டில் எல்லோர் பேச்சையும் விட வை.கோ பேச்சுதான் ஸூப்பர் என்று அ.தி.மு.க.காரர்களே சொல்லிக் கொண்டிருப்பதாகச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ம.தி.மு.க.வினர்.

● ஒரு மாறுதலுக்காக கொஞ்சம் வேறு விஷயத்தைப் பார்க்கலாமா? கிரிக்கெட் பாலிடிக்ஸில் பாதிக்கப்பட்டு இந்தியா - ஸ்ரீலங்கா போட்டியின் போது கழித்து விடப்பட்ட ராகுல் திராவிட், எதிர்வரும் ஆஸ்திரேலியா பயணத்தில் இணைத்துக் கொள்ளப்படுவாரா? அது நமக்குத் தெரியாது! ஆனால் சமீபத்தில் நங்கநல்லூர் 32 அடி ஆஞ்சநேயர் கோயிலில் வேண்டிக் கொண்டு போனார் திராவிட். இந்தக் கோயிலுக்கு வழக்கமாக வரும் மற்ற வி.ஐ.பிக்கள் : தங்கபாலு, வளர்ப்பு மகன் சுதாகரன். ○

— தில்லப்பா

சினிமாவுக்குப் போனா மடமடன்னு வர மாட்டேங்கிறாரு. கச்சேரிக்குக் கிளம்புனா நாலெடத்தில உக்காந்து மூச்சு வாங்கிட்டுத் தான் எழுந்திருக்காருன்னு சில வயசான அம்மணிகள் புருஷர்களைப் பற்றி அலுத்துக் கறதைப் பார்த்திருக்கீங்களா?

இந்த 'இழுப்பு' இரும்புச்சத்து குறையற தாலதான் வருது! சர்க்கரை, பனைவெல்லம், ஜீனி எல்லாத்திலயும் இரும்புச்சத்து இருக்கு. குழந்தைங்க என்ன ஓட்டம் ஓடினாலும் இரைக்காதுங்க. அதுக்குக் காரணம் அவங்க இனிப்புப் பண்டங்களை விரும்பிச் சாப் பிடறதுதான்! வயசானவங்களுக்கு ஷுகர் கம்ப்ளைண்ட் இல்லைன்னா இனிப்பு சாப்பிடலாம். இனிப்பு சாப்பிட்டா பல்லு சொத்தையாகும்; வயிற்றில் பூச்சி தோணும்னு சொல்றாங்க. நாம கவனமா இருந்தா, எந்தச் சிக்கலும் வராது!


மிட்டாய், அல்வா, கேசரி எல்லாம் திங் கும்போது நல்லா சப்புக் கொட்டி சாப்பிட றோம். முடிச்சதும் வாய் கொப்பளிக்கறோமா? ஸ்வீட்டும் சாப்பிடணும். பல்லுக்குக் கெடுதலும் வரக்கூடாது!

கரும்பெல்லாம் கடிச்சு உறிஞ்சுங்க! பல்லுக்கு நல்ல எக்சர் சைஸ்! நீங்க இந்தப் பொங்கலுக்குக் கடிச்சா அடுத்த பொங்கலுக்குத்தான் கடிப்பீங்க! அதுக் காக ஒரு வருஷத்துக்குச் சேத்து எக்சர்ஸைஸ் செய்யறேன்னு தட்டை தட்டையா எடுத்து நாதஸ்வரம் வாசிச்சா, நட்டு கழண்டு போகும்! கரும்பு கிடைக்கிறப்பவெல்லாம் கொஞ்சம் சாப்பிடலாம்! உடம்பு இளைக்காம, மூச்சு வாங்காம இருக்கும். நான் இவ்வளவு பேசு றேன் இல்லையா? மூச்சு வாங்க மாட்டேன்! பனை வெல்லத்தைக் கொஞ்சம் கொஞ்சம் தின்பேன். தினமும் இல்லை. மாசத்துக்கு ஒருவாட்டி!

சும்மா எதுக்கெடுத்தாலும் குலோப்ஜாமுன், பாதுஷான்னு பிள்ளைகளுக்குப் பண்ணித் தராம, கடலை உருண்டை, எள்ளுருண் டைன்னு பண்ணிக் கொடுங்க. அது ஸ்வீட் மட்டுமில்லை. அது நல்ல உணவு. புரோட்டின், இரும்புச் சத்து ரெண்டும் இதில் இருக்கு. எள்ளுல கொஞ்சம் கொழுப்பும் இருக்கு!

எள்ளுருண்டையில இன்னொரு விசேஷம் இருக்கு. அத சாப்பிட்டா உடம்பு சூட்டைக் குறைக்கும்! ஏன்னா, அதுக்குள்ள இருக்கிற எண்ணெய் - நல்லெண்ணெய்!


எல்லா ஸ்வீட்டும் உடம் புக்கு எனர்ஜி யைக் கொடுக்



ஈ மொய்க்கும் கடை- வேண்டாம்...

குது - அல்வா வில், கோதுமை, பால், சர்க் கரை, நெய் மட்டுமில்லாம ஏலக்காய், முந்திரியும் போடுறதால நம்மைச் சுண்டி இழுக்குது! ஏலக்காய் வெறும் வாசனைக்குத் தான். ஆனா முந்திரியிலே கொழுப்பு இருக்கு! அஞ்சு பைசா, பத்து பைசா கம்மியா இருக் கேன்னு ஈ ஒட்டிக்கிட்டிருக்கிற, கடையில போயி வாங்கி பையில போட்டுக்கிட்டு வர வேணாம். ஸ்வீட் பழசாயிருச்சின்னா, சுத்தி பூஞ்சைக் காளான் பிடிக்கும். அன்னைக் கன்னைக்கி வித்துத் தீரக்கூடிய கடையா பாத்துப் போங்க! எந்தக் கடைக்கும் போக மாட்டேன், வீட்டிலேயே முந்திரிப் பருப்பு அதிகமா போட்டு செய்யப் போறேன் அப்படீன்னா

# இருக்கிறவரைக்கும் இனிப்பு சாப்பிடுங்கள்!



• கூட்டம் மொய்க்கும் கடைக்குப் போங்கள்

ரொம்ப சரி! கோ அஹெட்!

மசாலான்னதும் இப்பல்லாம் மனோரமா ஞாபகம்தான் வருது! கடையில விக்கிற ரெடிமேட் மசாலாவில் பதினெட்டு வகைப் பொருளையும் மிக்ஸ் பண்ணியா அரைக்கிறாங்க? சீரகம் போட்டா, மிளகு போடாம இருக்கலாம். அப்புறம் சரி விகிதத்தில எல்லா பொருளும் இருக்குமா? லவங்கப்பட்டையப் போட்டு அரைச்சு பாக்கட்டில வச்சதும் நல்ல ஸ்மெல்லா இருக்கேன்னு வாங்கிட்டு வந்திடுறீங்க. இது ஒரு வியாபாரத் தந்திரம்! நீங்களே பண்ணினா இந்தத் தொல்லை இல்லையே!

ஏன்னா, மசாலா டேஸ்டுக்காகக் குழம்பில போடுற அயிட்டம் மட்டுமில்லை. நம்ம உடம்பில் இருக்கிற பாதி நோயை விரட்டுறது இந்த மசாலாதான்!

மசாலாவில் மிளகு, மஞ்சள் சேக்கறாங்க. இந்த ரெண்டும் சளியைப் போக்கக் கூடியது. சோம்பு, உடம்பைக் குளிர்ச்சியா வச்சிருக்கும். ஜீரணத்துக்கு முக்கிய அயிட்டம் சீரகம். இதெல்லாம் அவங்க போட்டிருக்காங்கன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?

லவங்கப் பட்டையோ, ஏலக்காயோ போட்டு அரைச்சு வச்சா நல்ல சரக்காயிடுமா? அது நம்மை ஏமாற்றத்தான்... மைச் கண்டி இழுக்கிற ஸ்மெல்லுக்கு மட்டுந்தான். அதனால நீங்களே செய்றது நல்லது.

மசாலா தடவி வறுத்தீங்கன்னா எந்த சரக்கும் பிரமாதமா இருக்கும்! பாக்குறதுக்கும் அழகா இருக்கும். பவுடர், உதட்டுச் சாயம் எல்லாம் போட்டு ரோட்ல நடந்தாத்தானே பையன் look விடுறான்? அதுமாதிரிதான் – வெறும் சரக்கை வேக வைக்கிறதுக்கும் மசாலா போட்டு வேக வைக்கிறதுக்கும் உள்ள வித்தியாசம்!

வறுக்காமல் மசாலா தயாரிச்சா ரெண்டு மாசத்துக்கு வர்றாப்பல பண்ணுங்க. நாளானா அதில் பூச்சி உற்பத்தியாகும். வறுத்து தயார் பண்ணினா ஒரு வருஷத்துக்குக்கூட வச்சுக்கலாம்! கெட்டுப் போகாது.

இந்த வாரம் ஏன் ஸ்வீட்டோட கார சமாசாரத்தை மிக்ஸ் பண்ணேன் தெரியுமா? இனிப்பும் காரமும் சேர்ந்ததுதானே வாழ்க்கை! (நெஞ்சைத் தொட்டுட்டேனா? பை!)

— சுமி



**அஸாருதீன் மீண்டும் இந்திய அணிக்கு கேப்டனாக நியமிக்கப்பட்டு இருப்பது கிரிக்கெட் வட்டாரத்தில் பெரிய அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றிச் சில கிரிக்கெட் பிரபலங்களிடம் கேட்டபோது....**

# அஸார் கேப்டனானது சரியா?



**சிவலால் யாதவ்** (தற்போதைய இந்திய அணி தேர்வுக் குழு உறுப்பினர்) : சச்சின் கேப்டன் பதவியை வகித்த காலத்தில் தமது பேட்டிங்கில் சரியான கவனம் செலுத்தி ஆட முடியவில்லை. நமக்கு சச்சினுடைய அதிரடி ஆட்டம் தேவை. நாம் வெற்றி பெறவும், சச்சினுடைய சுமையைக் குறைக்கவும் மிகவும் திறமையான அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை என்பதால்தான் அஸாருதீனைக் கேப்டனாக நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம்.



**பிந்த்ரா** (முன்னாள் இந்திய கிரிக்கெட் சங்கத் தலைவர்) : 21-வது நூற்றாண்டு, இளைஞர்கள் கையில் என்று சொல்லிக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் இளைஞர் சச்சினை நீக்கி, ரிட்டயர்டு கேஸ் அஸாரின் கையில் கேப்டன் பதவியைத் தந்தது. அதுவும் 15 தினங்களுக்கு முன்பு அவரைக் கூப்பிட்டுக் கண்டித்து விட்டு, பின்பு அவரிடமே கேப்டன் பதவியை அளிப்பது என்பது வீட்டைப் பூட்டி சாவியை யாரிடமோ கொடுப்பது போலத்தான் உள்ளது!



**ஜி.ஆர். விஸ்வநாத்** (முன்னாள் தேர்வு குழுத் தலைவர் - கிரிக்கெட் வீரர்) : சாரி. முட்டாள்தனமான செயல்களை நான் விமர்சிக்க விரும்பவில்லை.



**ஸ்ரீகாந்த்** (முன்னாள் இந்திய கேப்டன், இந்நாள் இளைஞர் அணியின் மேலாளர்) : அஸார் மிகவும் திறமையான கேப்டன். அனுபவசாலி. தமது திறமையால் இந்திய அணியை மீண்டும் மிளிர வைப்பார் என்பதில் சந்தேகமில்லை.

**வி.பி. சந்திரசேகர்** (முன்னாள் இந்திய வீரர், கோவா அணியின் கேப்டன்) : எனக்கு 15 வருடமாக அஸார் பழக்கம். நல்ல ஆட்டக்காரர். வீரர்களை அனுசரித்து,




அரவணைத்துச் செல்வதில் மிகுந்த திறமைசாலி. முன்பு அவரை கேப்டன் பதவியிலிருந்து நீக்கியதே தவறு. சச்சினுக்கு இவ்வளவு சீக்கிரம் கேப்டன் பதவி தந்ததும் தவறு. இரு தவறுகள் ஒரு சரியாகி விட முடியாது. இப்போது மீண்டும் கேப்டன் பதவி அஸாருக்குக் கிடைத்ததில் மகிழ்கிறேன். அஸார் நிச்சயம் இப்போது தமக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை உபயோகப்படுத்தி, இந்திய வீரர்களின் திறமையை மீண்டும் வெளிப்படுத்துவார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.



**தேஜ்கவுல்** (இந்திய கிரிக்கெட் போர்டு டாக்டர்) : அஸார் நல்ல ஆட்டக்காரர். இன்று இந்திய அணியிலேயே 100 சதம் fittest man. அதிக மேட்சுகள் விளையாடிய அனுபவம் மிக்கவர். எனவே அவரின் திறமையால் இந்திய அணிக்கு லாபமே.

**பிரவீன் தேசாய்** (முன்னாள் மேற்கு மண்டல அணி வீரர், இந்நாள் மேற்கு மண்டலத் தேர்வாளர்) : 15 தினங்களுக்கு முன்னால் அஸாரை அழைத்து விசாரித்து விட்டு, இன்று மீண்டும் அவருக்கே கேப்டன் பதவி அளிப்பது என்பது முறையற்ற செயல். தேர்வுக் கமிட்டி சரியாகச் செயல்படவில்லை என்பது என் கருத்து. அப்படி என்ன அந்த 15 நாளில் அதிசயம் நடந்தது என்பதை கிரிக்கெட் உலகத்திற்குத் தெரியப்படுத்துவது தேர்வுக் கமிட்டியின் பொறுப்பாகும். ஒன்று அஸாரை அழைத்து விசாரித்து அசிங்கப் படுத்தியிருக்கக் கூடாது. அல்லது டாக்கா தொடர் முடிந்த பிறகு ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஆடப் போகும் போது கேப்டன் பதவி தந்திருந்தால் இப்படி போர்டும் அவமானப் பட நேர்ந்திருக்காது என்பது என் கருத்து.



தொகுப்பு : **"மாஸ்டர்"**

படங்கள்: **உமாமணி**

# "அம்மா நசுக்கிடுவாங்க!"

**வெளியில் பந்தாவாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் கட்சிகளின் தலைமையிடங்கள் எப்படி இயங்குகின்றன?**

ம.தி.மு.க. அலுவலகத்தில் அப்படியொன்றும் கூட்டமில்லை. தொண்டர்கள் பத்துப் பேர் நின்றிருந்தனர். "தி.மு.க. பிடிக்கலைன்னு நாங்க வெளியே வரலை. நம்ம தலைவரை டம்மியாக் குறதுக்கு ஸ்டாலினைக் கொண்டு வரப் பாக்குறாரேன்னுதான் வெளியே வந்தோம். இப்ப என்னடான்னா இந்தம்மா நம்மகிட்டேயே சுப்பீரியாரிட்டியைக் காட்டுது. கழுத்து வலின்னு வெளிய வந்தா, திருகுவலியா முடிஞ்சிட்டது" என்று தமது ஆதங்கத்தைக் கொட்டினார் ஒரு ம.தி.மு.க. தொண்டர்.

ஜரிகைத் துண்டுகளும் தி.மு.க. கரை வேட்டிகளும் அறிவாலயத்தில் உலாவுகின்றன. கட்சிப் பிரமுகர்கள் தங்கள் பிள்ளைகளை அறிவாலயத்திற்கு அழைத்து வருகின்றனர். பெரியசாமி என்பவர், வடசென்னையில் தி.மு.க. கீழ்மட்டத் தொண்டர். வயது 60. அறுபத்தைந்தாம் வருஷத்திலிருந்து அடையாள அட்டைகளை மடக்கி வைத்திருக்கிறார். பி.காம்., படித்த தமது ஊனமுற்ற மகளின் வேலை வாய்ப்புக்காக 1990-லிருந்து தி.மு.க. பெருந்தலைகளை அணுக முயற்சி செய்தும் அவர்களின் நிழலைக் கூட தொட முடியாமல் நிற்கிறார். "நேரா பார்க்க விட மாட்டேங்கிறாங்க. வார்டு தலைவர் மாரிமுத்து லெட்டர் கொடுத்து விட்டிருக்கார். துரைமுருகனைப் பாக்க வந்திருக்கேன்" என்றார். கடிதத்தில் வார்டு தலைவரின் கையெழுத்து 'மரிமுத்து' என்று நெளிந்து போய் இருந்தது.

மற்ற கட்சி அலுவலகங்களை விட அ.தி.மு.க. கூட்டம்தான். சேடப்பட்டியாரின் கார் டிரைவரைப் பிடித்து பி.ஜே.பி.காரர் ஒருவர் கெஞ்சிக் கொண்டிருந்தார். "நான் போன எலக்ஷனில் தனியா நின்னு 54 ஆயிரம் வோட்டு வாங்கியிருக்கேன். மதுரை மாவட்டம்னாலும் சரி, ராமநாதபுரம் மாவட்டம்னாலும் சரி எப்படியாவது சீட் வாங்கிக் கொடுங்க!" என்று கேட்டுக் கொண்டிருந்தார். (பெயர் வேண்டாமே!) "சொல்லிட்டீங்கல்ல. மத்ததை நா பாத்துக்கிடுறேன்!" என்று டிரைவர் உள்ளே நடையைக் கட்டினார்.

இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ஆட்டோ டிரைவர், "என்னாங்க, 54 ஆயிரம் வோட்டு தனியா வாங்கி இருக்கிறதைச் சொல்லலாமா? அந்தம்மா கேள்விப்பட்டுச்சன்னா நசுக்கிடுமே! ஒரு பத்தாயிரம்னு குறைச்சுச் சொல்ல வேண்டியதுதானே!" என்றாரே, பார்க்கலாம்!

**— சிக்கல் சிவராமன்**



# படுத்துவிட்ட அசைவ வியாபாரம்!

**அ**சைவ உணவு வகையில் நம்பர் ஒன்னாகத் திகழ்வது மட்டன் (ஆட்டுக்கறி). ஆனால் சில வாரங்களாகத் தென் மாவட்டங்களில் மட்டன் விற்பனை அடியோடு இல்லாமற் போன அதிர்ச்சி இன்னும் நீடித்து வருகிறது. காரணம் – ஆடுகளைத் தாக்கிய நீலநாக்கு நோய்!

இந்த நோயால் தென் மாவட்டங்களில் மட்டும் சுமார் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்து போயிருக்கின்றன. ஆர்பிவைரஸ் இனத்தைச் சேர்ந்த நச்சுயிரியால் ஏற்படும் இந்நோய் 'க்யூலிகாய்ட்ஸ்' என்னும் கொசு போன்ற பூச்சியால் அடுத்தடுத்த ஆடுகளுக்கும் பரவுகிறது. இது வழக்கமாக மழைக் காலங்களில் வலம் வரும் நோய்தான் என்றாலும் இந்த ஆண்டுதான் இந்தளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்நோய் பாதிப்பினால் இறந்து போகும் ஆடுகளின் நாக்கு உடனே நீலநிறம் எய்தி விடுவதால் 'நீலநாக்கு நோய்' என்றழைக்கப்படுகிறது. "இந்நோய் பாதித்த ஆடுகளின் இறைச்சியை உண்பதால் மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு. காரணம் அந்தக் கிருமிகள் ஆடு இறந்த உடனேயே இறந்து விடுகின்றன. தவிர இறைச்சியை 100 முதல் 120 டிகிரி வரை வெப்பத்தில் வேக வைப்பதால் கிருமிகள் உயிரோடிருக்க வாய்ப்பே இல்லை' என்று பல டாக்டர்கள், அறிவித்திருந்த போதிலும் மக்கள் மட்டன் வாங்குவதை முற்றிலுமாகத் தவிர்த்துள்ளனர்.

கடந்த புத்தாண்டு தினத்தன்று மதுரையில் மட்டும் ஆயிரக்கணக்கான டன் ஆட்டிறைச்சி விற்பனையாகாமல் குப்பையில் கொட்டப்பட்டுள்ளது. ஹோட்டல்களில் மட்டன் பரிமாறப்படுவதும் நிறுத்தப்பட்டு விட்டது. மாட்டுக் கறியை ஆட்டுக்கறி என்று கூறி இதுவரை விற்பனை செய்து வந்த பல தெருவோர புரோட்டா கடைகள் இப்போது மாட்டிறைச்சி என்றே வெளிப்படையாகப் போர்டு போட்டு விற்பது நல்ல தமாஷ்!

இதனால் கோழி மற்றும் மீன் விற்பனை 'சூபீர்' என்று எகிறியுள்ளது. கிலோ அறுபது ரூபாய்க்கு விற்ற கோழிக்கறி தற்போது நூறு ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. 90 ரூபாய்க்கு விற்கப்படும் நெய் மீன் தற்போது 170 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

**பெ**ரும்பாலும் இந்நோய் செம்மறியாடுகளையே எளிதில் தாக்குகிறது. வெள்ளாடுகளுக்கு எதிர்ப்பு சக்தி அதிகம் என்பதால், நூறு செம்மறியாடுகள் பாதிக்கப்படும் நிலையில் 10 முதல் 12 வெள்ளாடுகளே பாதிக்கப்படுகின்றன. இந்தத் தகவல்களை நம்பி வெள்ளாட்டு இறைச்சியை மட்டும் விற்பனை செய்ய முயன்ற பலரும்கூட படுதோல்வியையே சந்தித்தனர். மக்கள் மசியவில்லை!

ரோமம், தோல், இறைச்சி, பால் என்று பலவித காரணங்களுக்காக ஆடு வளர்ப்புத் தொழில் மிக லாபகரமாக நடந்து வருகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் விவசாயத்திற்குச் சொந்த நிலமில்லாதவர்கள் ஆடு வளர்ப்பையே முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இந்த நோய் தாக்குதல் மூலம் ஏற்பட்ட இழப்புகளால் அந்த ஏழைகள் இடிந்து போயிருக்கிறார்கள். இந்நோயினால் இறந்த ஆடுகளுக்குத் தமிழக அரசு ஆடு ஒன்றிற்கு 300 ரூபாய் வீதம் நஷ்ட ஈடாக வழங்கிய போதிலும், அது ஆட்டின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்குதான் என்பதால் நிறைய ஆடுகள் வைத்திருந்தவர்கள் பெருத்த நஷ்டத்தைச் சந்தித்திருக்கிறார்கள்.

இந்த நோயைத் தடுக்க வழியே இல்லையா? சில கால்நடை மருத்துவர்களைச் சந்தித்த போது, "பொதுவாக வைரஸ் அட்டாக்குகளுக்கு முன் கூட்டிய தடுப்பூசி மட்டுமே சிறந்த தடுப்பு முறையாக அமையும். இந்நோயை உண்டாக்குவதில் பலவகை வைரஸ்கள் பங்கேற்பதால் எல்லாவற்றையும் தடுக்கும் வகையில் தடுப்பூசி மருந்து இனிதான் தயாரிக்கப்பட வேண்டும்" என்றார்கள் அவர்கள். ●

— எஸ்.ஜே. இதயா

படம்: கிரண் நியூஸ்



• ஸ்வீட் வழங்குகிறார் முரளி...

தட்சிணாமூர்த்தி என்ற மாணவர் வந்திருந்தார். ''நான் கல்கியில் முதலில் படிப்பது கேள்வி பதில் தான்! அடுத்தது ஜோக்ஸ்'' என்றார்.

ராயப்பேட்டையைச் சேர்ந்த அன்னலட்சுமி, ''தொடர்கதையை எழுதுகிற எழுத்தாளரைக் கண்டு பிடிக்கிற போட்டியில்கூட, சிதாரவி என்கிற விடையை மிகச் சரியாகக் கண்டுபிடித்து எழுதினேன். ஆனால் பரிசு கிடைக்கவில்லை'' என்றார்.



## சென்னையில்....

**கா**லை ஒன்பது மணிக்கு, பிரத்யேகப் பைகளில் போடப்பட்டு, நூறு ஸ்வீட் பாக்கெட்டுகள் தயாராய் காத்துக் கொண்டிருந்தன. முதலில் வந்தவர் வாசகி உஷா (மைலாப்பூர்). அடுத்த அரைமணியில் அடுத்தடுத்து, வில்லிவாக்கம் கிருஷ்ணவேணி, நங்கநல்லூர் விஜயராகவன், சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா மேனேஜரான ரங்கனாத், குரோம்பேட்டை ஜகதீசன் என்று வந்த வண்ணமிருந்தனர்.

சென்னை ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸின் முரளி ஒவ்வொருவருக்கும் 'ஹாப்பி நியூ இயர்' சொல்லி, ஸ்வீட் பாக்கெட்டுகளை வழங்கினார்.

''நான் இதுவரை கல்கி நடத்திய, பல போட்டிகளிலும் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால் பரிசு விழுந்தது கிடையாது. முதல் தடவையாய் இப்போது தான் பரிசு கிடைத்திருக்கிறது! புத்தாண்டு அன்று மிகப் பொருத்தமாய் ஸ்வீட் பாக்கெட்!'' என்றார் உஷா.

''போட்டியில் கலந்து கொண்டு விடை எழுதியபோது, 'ஏகாந்தம்' என்ற ஒரு வார்த்தை எனக்குத் தண்ணி காட்டி விட்டது. கடைசியாகக் கண்டுபிடித்தேன். நூறு அதிருஷ்டசாலிகளில் ஒருவராயும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டேன்! ஐயம் ரியலி லக்கி'' என்றார்.

# நாஷ் மழக்கத் தித்திப்பு!

''சயன்ஸ் சமாசாரங்களை மிக எளிமையாய் எழுதுவது கல்கியின் தனித்தன்மை! ஆனால் சயன்ஸ் சம்பந்தப்பட்ட கட்

டுரைகளுக்கு அடிக்கடி முக்கியத்துவம் தந்து வெளியிட வேண்டும்'' என்று ஆலோசனை சொன்னார் இளைஞர் செந்தில் குமார், ஸ்வீட் பாக்கெட் வாங்கிக் கொண்ட சந்தோஷத்துடன்.

வண்ணாரப்பேட்டை வாசகர் ஜெயந்தி ஸ்வீட் பாக்கெட்டை வாங்கிய கையுடன், தாம் கல்கி ஆசிரியருக்கும், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபருக்கும் கொண்டு வந்திருந்த புத்தாண்டு வாழ்த்து அட்டைகளை அளித்து விட்டு, வசதி குறைந்த, புத்திசாலி மாணவர்களுக்குப் படிப்புக்கு உதவுகிற பணியைச் செய்யும் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு இருநூறு ரூபாயை நன்கொடையாகவும் அளித்தார்!

பெருங்களத்தூர் சக்ரவர்த்தி குடும்பத்துக்கு, ஓர் இனிய ஆச்சரியம்! ஆம்! புத்தாண்டு அன்றுதான் (ரொம்ப லேட்டாக) அவர்களுக்குப் பரிசு அறிவிப்புக் கடிதம் கைக்குக் கிடைத்ததாம். உடனே புறப்பட்டு வந்து சந்தோஷமாய் ஸ்வீட் பாக்கெட் பெற்றுக் கொண்டு போனார் அவர்.

பூமா, குமரன் இருவருமே பாண்டிச்சேரியில் பாங்கில் பணிபுரிகிறவர்கள், வார இறுதி நாட்களில் சென்னை வந்து போவார்கள். போட்டியில் வென்று பரிசு பெற்ற விவரம், அவரது குடும்பத்தினரால் டெலிபோன் மூலம் தெரிவிக்கப்பட்டபோது, வங்கியில் அனைவருக்கும் புத்தாண்டுப் பரிசு கிடைத்ததாக எண்ணி சந்தோஷப்பட்டார்களாம்.



• கோவையில் கோலாகலம்

இரவு எட்டு மணிவரை கூட வாசகர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இரவு வரை வந்து ஸ்வீட் பாக்கெட் பெற்றுச் சென்றவர்கள் எண்ணிக்கை எண்பத்து இரண்டு. ஏனோ தெரியவில்லை. மற்றவர்கள் வரவில்லை. ''அடுத்த சில தினங்களில் வந்தாலும் அவர்களுக்கு ஸ்வீட் பாக்கெட் தந்து விடலாம். நோ பிராப்ளம்'' என்று கூறினார்கள் 'ஸ்ரீகிருஷ்ணா' நிறுவனத்தினர்.

''கல்கியுடன் இணைந்து இந்தப் போட்டியை நடத்திப் பரிசு வழங்கியதில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. ஒவ்வொரு வாசகரும், எத்தனை அக்கறையுடன், ஆலோசனைகள் சொல்லி, கல்கி மீது தங்களுக்குள்ள அக்கறையை காட்டிச் சென்றார்கள்! இது போன்ற வாசகர்கள் தாம் ஒரு பத்திரிகையின் சொத்து. கல்கி வாசகர் என்ற முறையிலும், இந்தப் போட்டியில் பரிசளித்தவன் என்ற முறையிலும் எனக்கு இரட்டை மகிழ்ச்சி. ஆல் தி பெஸ்ட். ஹாப்பி நியூ இயர்'' என்று சந்தோஷமாய்ச் சொன்னார் முரளி.

## கோவையில்....

''கோவையின் பெருமையைப் பற்றிச் சொல்வதென்றால் மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டேயாக வேண்டும். ஒன்று சுவையான சிறுவாணி நீர். இரண்டாவது இந்த 'கிளைமேட்'. மூன்றாவது கிருஷ்ணா ஸ்வீட்ஸின் 'மைசூர் பாக்'. அதை புத்தம் புது வருஷப் பரிசாக, அதுவும் கண்ணியமிக்க கல்கியின் மூலம் பெறுவதென்பது மறக்க முடியாத, வருடம் முழுக்க



• கிருஷ்ணன்

தெவிட்டாத தெள்ளமுதம்.''

''புது வருஷத்துக்கு எத்தனை பரிசுதான் சார் கொடுப்பீங்க...? 'பொன்னியின் செல்வன்' திரும்பவும். கல்கியின் வேறு படைப்புகளுடன் கல்கி கலெக்ஷனாய் வேறு! கூடுதலாக கிருஷ்ணா ஸ்வீட்ஸ்! இந்த வருஷம் முழுக்க அல்ல... இன்னும் சில வருஷங்களுக்கும் ஒரே இனிப்பு மழைதான்...''

''ஏங்க... சில வருஷம் முன்னால புது வருஷத்துக்கு டைரி பரிசா கிடைச்சது... இப்ப ஸ்வீட்... இது மாதிரி வருஷம் பொறந்ததும் ஏதாச்சும் ஒண்ணு செஞ்சுட்டே இருங்களேன்.''

– எடுத்த எடுப்பில் ஹேமா நாகசுந்தரம் துவங்கி, ஏ.ஜி. கல்யாண சுந்தரம், கிருத்திகா (ஏ.எஸ். இராமசாமி) என பரிசு பெற்றவர்களின் பாராட்டு மழை வார்த்தைகளைச் சொல்லி மாளாது.

''சித்திரை ஒன்று... தமிழ்ப் புத்தாண்டு பார்த்து போட்டி வையுங்க சார்...'' – என்று ஒரு அம்மணி சொல்லப் போக,

''சித்திரை ஒன்று தமிழ்ப் புத்தாண்டுதான்... இருந்தாலும் காலண்டர் மாற்றி புத்தாண்டுடன் தைப் பொங்கலையும் சேர்த்து... இதுதான் சிறப்பாய் உள்ளது'' – என்று எதிர்க் கணை பிறந்தது.

''தமிழுக்குத் தமிழ் வருடப் பிறப்புதானே முக்கியம்...''

''இருக்கலாம்... ஆனா இன்னைக்கு யார் அதை முக்கியமா கொண்டாடுறாங்க... 1997, 98 என்று எழுதுகிறோமேயொழிய 'ஈஸ்வர, வெகுதான்ய' என்றா குறிப்பிடுகிறோம்...''

– அங்கு ஒரு வழக்காடு மன்றமே நடக்க ஆரம்பிக்க, நெருக்கி அடிக்கும் வியாபாரம் கூட ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து ஏக கலகலப்பாய்ப் போனது!


இவர்களுள் இந்த சந்தோஷத்தை இரட்டிப்பாக்கி, ஏன் பலமடங்காய்... பரிசு பெற வந்தவர் கலாசந்திர சேகரன். காரணம் இந்த இனிப்பான நாளில் பிறந்த நாள் இவருக்கு! பழம் நழுவி பாலில் விழுந்து அதுவும் நழுவி தேனில் கலந்த நிலை! குதூகலத்திற்குச் சொல்லவா வேண்டும்...?

''எம் பொண்ணு அபர்ணா பெயரில் எழுதிய கூப்பனுக்குக் கிடைத்த பரிசு இது. காலையிலே கோயிலுக்குப் போயிட்டு, நேரா ஸ்வீட்ஸ் வாங்க இங்க வர்றோம். கல்கிக்கு எங்கள் முதல் தாங்க்ஸ்.''

''ரம்ஜான் நோன்பு ஆரம்பிச்சருக்கு சார்... அந்த முதல் நாள்ல இந்த ஸ்வீட் பரிசு எனக்கு மட்டுமல்ல... என் குடும்பத்துக் குழந்தைகளுக்கு இரட்டிப்பு சந்தோஷம்.'' – எனச் சொல்லி நம்மைக் கொஞ்சம் நெஞ்சு நெகிழச் செய்தார் சிக்கந்தர்.

பரிசு பெற எல்லோரும் வந்து கொண்டேயிருக்க... வாங்கிச் சென்று கொண்டேயிருக்க, இந்த அமளியில் பங்கு கொண்டு சந்தோஷத்தில் மிதந்து சிறிதும் சோராது அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் சொல்லிக் கொண்டிருந்த கிருஷ்ணா ஸ்வீட்ஸ் உரிமையாளர் எம். கிருஷ்ணன் நம்மிடம் பேசும் போது–

''எந்தவோர் ஆரம்பமும் நல்ல ஆரம்பமா இருக்கணும். அதுவும் ஸ்வீட்டா இருந்தா... இதைப் பார்க்கும்போது எங்களுக்கும் மனசு ரொம்ப சந்தோஷம்... இதில் கிடைக்கிற ஆத்ம திருப்தி, சுகம்... அப்பப்பா... இன்றைக்கு போலவே எல்லோரும் சந்தோஷமா இருக்கணும்...'' ●




சென்னையிலிருந்து: **மௌலி**

படங்கள்: **யோகா**

கோவையிலிருந்து:

**கா.சு. வேலாயுதன்**

- சாகித்ய அகாடமி விருது பெறும் தோப்பில் முகம்மது மீரான் பேட்டி.





# "இரவெல்லாம் பைத்தியம் பிடித்தார்போல் எழுதிக் கொண்டே இருப்பேன்...!"

**தோ**ப்பில் முஹம்மது மீரான் இந்த வருடம் சாகித்ய அகதமி விருது பெற்றிருக்கும் தமிழ் எழுத்தாளர். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தேங்காய்ப்பட்டணத்தில் பிறந்து, திருநெல்வேலியில் மிளகாய் வற்றல் வியாபாரம் செய்து வரும் இந்த ஐம்பத்தி மூன்று வயதுக்காரர், சப்தமில்லாமல் சாதிக்கிறவர். இவரது 'ஒரு கடலோர கிராமத்தின் கதை', 'துறைமுகம்' 'கூனன் தோப்பு' போன்ற நாவல்களும் 'அன்புக்கு முதுமை இல்லை' 'அனந்த சயனம் காலனி' போன்ற சிறுகதைத் தொகுதிகளும் தமிழிலக்கியத்துக்குப் புதிய கதவுகளைத் திறந்துவிட்டவை. தென் தமிழகக் கடலோரத்தில் வாழும் அடித்தட்டு முஸ்லிம் சமூகத்தவரே இவரது கதைகளுக்குக் களன் தருபவர்கள். கடுமையான வட்டார வழக்கில் இவர் எழுதினாலும் வாசிப்பு சிரமம் தருவதே இல்லை என்பதுதான் இவரது பலம். தோப்பிலை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினோம்.

**கல்கி:** உங்கள் எழுத்தில் நீங்கள்


கையாளும் மொழி, பெரும்பான்மையான தமிழ் வாசகர்களுக்கு அன்னியமானது என்றொரு வழக்கு உங்கள் மேல் இருக்கிறது. இது குறித்து உங்கள் கருத்து?

**தோப்பில்:** எனக்குப் பொதுவான தமிழ் ஒரு தடையாக இருக்கிறது. தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்றால் புதிய விஷயங் களைக் கொண்டு வர வேண்டும். நான், என் னாலான வகையில், தமிழுக்கு அடங்காத - அதே சமயம் தமிழ் வார்த்தைகளைக் கொண்டு வருகிறேன். அது மக்களிடம் புழங்கும் மொழிதான். என் ஆத்மாவே என் மொழியில்தான் இருக்கிறது.

**கல்கி:** ஒரு குறிப்பிட்ட வட்டார மொழி யைத்தான் உங்கள் ஆத்மா என்கிறீர்கள். எனில், உங்கள் எழுத்து, மொழி பெயர்க்கப் படுமானால் அதில் 'ஆத்மா' இருக்காதே!

**தோப்பில்:** எந்தப் படைப்புமே, மொழி பெயர்க்கும்போது ஒரிஜினாலிடியை இழக்கத் தான் செய்யும். மொழி பெயர்ப்பில் வெறும் கதை மட்டும்தான் நிற்கும். படைப்புக்குள் இருக்கிற மௌன இடைவெளிகளை மொழி பெயர்க்கவே முடியாது. அது அடிபடுவது, தவிர்க்க முடியாதது!


**கல்கி:** உங்கள் நாவல்கள் எல்லாமே மலை யாள நாவல்களின் யதார்த்த உலகைத் தமிழில் தருகிற முயற்சிதான்; நீங்களாகத் தமிழுக்குப் புதிய வடிவமைப்பு ஏதும் தருவதில்லை என்றும் ஒரு பேச்சு இருக்கிறதே?



• மனைவி ஜலீலா, மகன்கள் ஹமீம், மிர்ஷாத்துடன்...

**தோப்பில்:** மலையாளத்தில் நான் பஷீரை யும் தகழியையும் படிச்சிருக்கேன். ஆனால் அவர்களது நடையை அப்படியே நான் தமிழ்ப் படுத்துவதாக நினைக்கவில்லை. பஷீர் இலக் கண முறைகள், யதார்த்தம் எல்லாத்தையும் மீறி, மலையாளத்துக்குப் புதிதாக ஒரு பங் களிப்பைத் தந்தார். அதுபோல் தமிழுக்கு ஏதா வது செய்ய வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். வடிவம் பற்றிச் சொன்னீர்கள். என் முதல் நாவலான 'கடலோர கிராமத்தின் கதை' மொழிக்கும் (இப்போது பரிசு பெற் றுள்ள) 'சாய்வு நாற்காலி' நாவல் மொழிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஒன்றுக் கொன்று சம்பந்தமே இல்லை! என்னைக் கேட் டால், ஒரு படைப்பின் வடிவம் பற்றியெல் லாம் அதிகம் பேசி, புதிதாக எழுத வரும் இளைஞர்களை மிரட்டக் கூடாது. வடிவத்தை விட விஷயம் முக்கியம்.

**கல்கி:** உங்களுடைய இளமைக்காலம்



**"தேர்தல் வரப்போற இந்த சமயத்தில புதுசா ஒரு கட்சி ஆரம்பிச்சிருக்கீங்களே... உங்க கட்சியின் லட்சியம் என்ன?"**

**"பிரதமர் பதவி லட்சியம்; மந்திரி பதவி நிச்சயம்!"**

**— கே. அனிதா**

---

பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்!

**தோப்பில்:** என் அப்பா ஒரு மீன் வியாபாரி. அவ்வளவு ஒன்றும் வசதி கிடையாது. ஃபர்ஸ்ட் ஃபார்ம் படிக்கும்போது ஒரு ரூபாய் ஃபீஸ் கட்ட முடியாமல் வீட்டிலேயே இருந்திருக்கிறேன். கல்விக்கு எங்கள் சமூகத்தில் அவ்வளவு முக்கியத்துவம் இருந்ததில்லை. என் அப்பாவே 'நீ படிச்சா படி; படிக்காட்டா போ!' என்பார். நானே கூவிக் கூவி மீன் விற்றுத்தான் ஃபீஸ் கட்டியிருக்கிறேன். ஒவ்வொரு மாதமும் இதே பிரச்னைதான். அப்படித்தான் எஸ்.எஸ்.எல்.ஸி வரை படித்தேன். பிறகு காலேஜில் சேர ஆசை. ஆனால் அப்பா, 'படித்தது போதும்; அரிசிக்கடையில் வேலைக்குச் சேர்!' என்றார். அப்படியும் கேட்காமல் இந்து கல்லூரியில் பி.ஏ., சேர்ந்தேன். சேர்ந்தேனே தவிர, கடைசி வருஷம் பரீட்சைக்குப் பணம் கட்ட முடியாததால் முடிக்க முடியவில்லை. இன்று என் மகனுக்கும் இதே நிலைமைதான் வந்திருக்கிறது. படிப்புக்காக அவன் படும் அல்லல்களை வைத்துத்தான் 'தனி ஆவர்த்தனம்' கதையை எழுதினேன்.

**கல்கி:** எழுத்துத் துறைக்கு எப்படி வந்தீர்கள்?

**தோப்பில்:** ஆரம்பகால வாழ்க்கை தந்த கொதிப்பு, வேதனை, சங்கடம்தான் என்னை எழுத வைத்தது. முப்பது வருடங்களாக எழுதிக் கொண்டிருக்கிறேன். 'கூனன் தோப்பு' எழுதும்போது என் வயது இருபத்தி மூன்று! பிறகுதான் 'கடலோர கிராமத்தின் கதை' எழுதினேன். அதற்குப் பிறகு 'துறைமுகம்' எழுதினேனே தவிர, இவற்றைப் பிரசுரிக்க வேண்டும் என்ற நோக்கமெல்லாம் இருந்ததில்லை. என் புத்தகம் ஒன்றாவது அச்சில் வரும் என்று கனவில்கூட நினைக்கவில்லை. சங்கரன்னு ஒரு பால் வியாபாரி என் நண்பர். 'ஏதாவது படிக்கக் கொடுப்பா'ன்னு கேட்டு, 'கடலோர கிராமத்தின் கதை'த் தாள்களை எடுத்துப் போய்ப் படித்து விட்டு பைண்ட் பண்ணிக் கொண்டு வந்தார். 'நல்லா இருக்கே இது' என்று அவர் சொன்னதுதான் முதல் அங்கீகாரம். அப்புறம் அது 'முஸ்லிம் முரசு' வில் தொடராக வெளி வந்தது.

**கல்கி:** உங்கள் வீட்டாருக்கு நீங்கள் எழுதுவது பற்றிப் பெருமை உண்டா?

**தோப்பில்:** என் குழந்தைகளுக்கு அப்போதெல்லாம் நான் எழுதுவேன் என்பதுகூடத் தெரியாது! இரவில் பைத்தியம் பிடித்தாற் போல எழுதிக் கொண்டே இருப்பேன். ஏதோ கணக்கு வழக்கு பார்த்துக் கொண்டிருப்பதாகத்தான் அவர்கள் நினைத்தார்கள். 'கடலோர கிராமத்தின் கதை'க்கு 'இலக்கியப் பெருமன்றம்' பரிசளித்தார்கள். பிறகு, கேரள பல்கலைக் கழகம் கூப்பிட்டு கௌரவித்தது. எனக்கே, அப்போதுதான் 'இதில் ஏதோ இருக்கு' என்று நினைக்கத் தோன்றியது!

**கல்கி:** சாகித்ய அகதமி விருது கிடைத்துள்ளது பற்றி?

**தோப்பில்:** மகிழ்ச்சிதான்; ஆனால் குதித்துக் கும்மாளமிடும் அளவு மகிழ்ச்சி இல்லை. அந்த வயதெல்லாம் போய் விட்டதே! என் மனைவிக்கு இதில் ரொம்ப சந்தோஷம். அவர் சந்தோஷப்படுவதைப் பார்ப்பதில்தான் எனக்கு அதிக சந்தோஷம்! உண்மையில் இந்த வருடம் நீல. பத்மநாபனுக்குத்தான் கிடைக்கும் என்று நினைத்திருந்தேன். எப்படியோ எனக்கு வந்து விட்டது!

**கல்கி:** 'சாய்வு நாற்காலி' நாவல், இறக்கும் தருவாயில் ஒருமனிதனின் நினைவோட்டம் பின்னோக்கி நகர்ந்து, நகர்ந்து, குழந்தைப் பருவத்தைத் தொடுவதுடன் முடிகிறதாக, ஆழமுடன் எழுதப்பட்ட ஒன்று. இதை எழுதும் போது பரிசு வரும் என்று எதிர்பார்த்தீர்களா?

**தோப்பில்:** கிடைக்கலாம்னு நினைச்சேன்! அதை ஐந்து வருடங்களாக எழுதி வந்தேன். எழுதி முடிக்கும்போது இரண்டு கைகளையும் தூக்கமுடியவில்லை. பக்கவாதம் வந்துவிட்டது. ஒன்றரை வருட ட்ரீட்மென்ட்! என் வியாபாரமெல்லாம் போய் விட்டது! பணத்துக்கு மிகவும் சிரமப்பட்டேன். மனைவியின் நகைகளை அடகு வைத்து, மறுபடி வியாபாரம் தொடங்கினேன்! இந்த நாவல் ஒரு பெரிய நோயையும் பெரிய புகழையும் ஒரு சேரக் கொடுத்திருக்கிறது. பரிசுப் பணத்தைக் கொண்டு, முதலில் என் மனைவியின் நகைகளை மீட்டு அவரிடம் தர வேண்டும். ●

சந்திப்பு: **சு. வேணுகோபால்**

படங்கள்: **ராதா**

மகத்தான செயல்களுக்கு
நம்பிக்கையே பிறப்பிடம் -
உங்கள் சேமிப்பிற்கு
நம்பகமான நண்பன்
சிட்டி யூனியன் வங்கி!

இன்றே சேமியுங்கள்

## சிட்டி யூனியன் வங்கியின்

## சேமிப்புத் திட்டங்களில் !

**சிட்டி யூனியன் வங்கி லிட்.,**
பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001.
(அந்நியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)

*CUB - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி !*

## கம்பராமாயணம் மூலமும் உரையும் முன் வெளியீட்டுத் திட்டம்

உலக மகா கவிகளில் முதலிடம் பெறுபவன் கம்பன். கற்றவர்க்கும் மற்றவர்க்கும் செவிநுகர் கனிகளாய் இனிக்கும் காவியம் கம்பன் காவியம்.

பண்டித வித்வான் எம். நாராயண வேலுப்பிள்ளை,
வ.த. இராம சுப்பிரமணியம், துரை ராஜாராம்
போன்றோர் எழுதிய இனிய தெளிவுரை.

**பால காண்டம் 2 தொகுதி, அயோத்தியா காண்டம் 2 தொகுதி, ஆரண்ய காண்டம் 1 தொகுதி**

ஆக ஐந்து தொகுதிகள் (2120 பக்கங்கள், டெம்மி சைஸ்) மூலமும் உரையும் பதிப்பு விலை ரூ. 665/- முன் பதிவு திட்டத்தின் கீழ் தபால் செலவு உள்பட ரூ.500/- 31.3.98க்குள் முன்பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து வெளி வர உள்ள காண்டங்கள்
**கிஸ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம்** மற்றும் **யுத்த காண்டம்**

தொடர்பு கொள்க:

**THIRUMAGAL NILAYAM**
PUBLISHERS BOOK SELLERS & EXPORTERS
55, Venkatnarayana Road, T.Nagar, Madras - 600 017
Phone 434 28 99 / 434 15 59 Fax: 91-44-434 1559

# கல்கி—சரவணா ஸ்டோர்ஸ்
## இணைந்து வழங்கும்
# வாரம் ஒரு பட்டுப் புடவை!

நீங்கள் திறமை+அதிர்ஷ்டசாலியாக இருந்தால் கட்டாயம் உங்களுக்குத்தான்.

என்ன செய்யவேண்டும்? வாரம்தோறும் ஒரு சுலபமான போட்டி! கலந்து கொண்டு பதிலை கூப்பனில் எழுதி அனுப்பினால் போதும்! சரியான பதில் எழுதும் திறமைசாலிக்கு ஒரு பட்டுப்புடவை பரிசு. பல திறமைசாலிகள் சரியாக எழுதி விட்டால்? குலுக்கலில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்வாவார்!

### இனி, இந்த வாரப் போட்டிக் கேள்வி

இந்த இதழில் ஏதோ ஒரு கதையிலோ கட்டுரையிலோ வேண்டுமென்றே 'தலைப்பில்' ஒரு தவறு செய்திருக்கிறோம்! அது எந்தத் தலைப்பு? எத்தனாவது பக்கத்தில்?

விடையை கூப்பனில் மட்டுமே எழுத வேண்டும்; எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கூப்பன்கள், ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை-600 097 என்ற முகவரிக்கு வந்து சேரக் கடைசித் தேதி: 26.1.98.

உறையின் மேல் பட்டுப் புடவைப் போட்டி – 2 என்று தவறாமல் குறிப்பிடவும்.

**ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

**பட்டுப்புடவை பரிசுப் போட்டி – 2**

இந்த இதழில் வேண்டுமென்றே தலைப்பில் செய்யப்பட்ட தவறு :..............................

எந்தக் கதை/கட்டுரை :..............................

பக்க எண்:..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

..............................

யு.டி.வியின் (யுனைடெட் டெலிவிஷன்) முதல் நேரடி தமிழ் தயாரிப்பான 260 வார 'பரமபதம்' மெகா தொடரிலும் செவன்த் சேனலின் 250 வார மெகா தொடரான 'மனிதர்கள்' சீரியலிலும் இப்போது நடித்துக் கொண்டிருக்கிறார் சிவகுமார். எதற்கு திடீர் டீவி பிரவேசம்? சினிமா மார்க்கெட் போய் விட்டதாலா? அவரிடமே கேட்டோம் :

"எனக்குப் போக்கிடம் இல்லாமல் டீவிக்குப் போகலை... என்னோட பிளேஸ்மெண்ட், என்னுடைய மரியாதையைக் கெடுக்காத வேஷம்... என்னுடைய இமேஜ் எல்லாம் எனக்கு ரொம்ப முக்கியம்! நான் ஹெவி வெயிட் சாம்பியன்! என் தோளுக்கேற்ற சுமை வேண்டும்! சினிமாவில், ஆழமான சிந்தனை குறைந்து விட்டது. மேலோட்டமான போக்கு அதிகமாகி விட்டது. எது விலை போகிறதோ அதற்குத்தான் மதிப்பு என்றாகி விட்டது. தொழில் நுட்பங்களை வைத்து ரசிகர்களை ஏமாற்றுவது சகஜ

• சினிமாவிலிருந்து...



மாகி வருகிறது. இன்றைய இண்டஸ்ட்ரியை மிகக் கவனமாகக் கணித்து, என் அனுபவத்தின் அடிப்படையில் டீவி தொடர்களில் நடிப்பது பற்றி முடிவெடுத்தேன்.

"ஒங்க சீன் இப்படி சார்... கடைசியிலே ஒங்களை கொலை பண்றான். அடுத்து டைட்டில் வருது சார்...." என்று எங்கிட்ட ஒரு படத்திற்குக் கதை சொன்னார் ஒரு ஆள்... டைட்டில் என்ன இடைவேளைக்குப் பிறகா வரும்?



• பரமபதம் தொடரில் ஒரு காட்சி

# "நான் புலி... புல் தின்ன மாட்டேன்!"

## — சிவகுமார் பரபரப்பான பேட்டி

"சின்னத் திரையில் நான்தான் தலைவன்! நான் விரும்பும் வெயிட்டான ரோல் கிடைக்கிறது. சினிமாவில் மிகச் சிறந்த மேதைகள் தங்கத்திலும் வைரத்திலும் எனக்கு இறகுகளைச் சொருகி என்னைப் பெருமைப் படுத்தியிருக்கிறார்கள். அந்தப் பெருமையை இழக்க நான் தயாராக இல்லை.

"சொல்லத்தான் நினைக்கிறேனில் காதலை மனசுக்குள் வைத்துக் கொண்டு வெளிப்படுத்த முடியாமல் தவித்த ரோல்... கெடைக்குமா சார் அந்த மாதிரி வேஷங்கள் எல்லாம்...! ரோஜாப்பூ ரவிக்கைக்காரி எல்லாம் லைஃபில் கிடைக்கக்கூடிய கதாபாத்திரம் இல்லை! இளையராஜாவை அடையாளம் காட்டிய அன்னக்கிளியில் ஏழை வாத்தியார் ரோல்... சிந்து பைரவியில் சங்கீத மேதை... இப்படிப் பட்டவைதான் என்னை அலங்கரிக்கும் தங்க, வைரச் சிறகுகள்!

"பௌர்ணமி அலைகளில் எனக்கு வழக்கறிஞர் ரோல். அதன் வெற்றி விழாவில் கலந்து கொண்ட சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.என். பகவதி, 'சிவக்குமார் வாதிட்டது போல எல்லாம் கோர்ட்டில் வாதங்கள் நடப்பதில்லை. வக்கீல்களுக்கு ஆங்கிலத்திலும் திறமை இல்லை. தமிழையும் மறந்து விட்டார்கள்' என்று பேசினார். மூனு கோடி ரூபாய் கிடைச்சாலும் இந்தப் பேரை நான் கெடுத்துக் கொள்ள மாட்டேன். நான் புலி; புல்லைத் தின்னமாட்டேன்! சினிமாவில் பணம் கிடைக்கிறது என்பதற்காக விடலை நாயகனின் ஷூ காலில் நான் மிதிபடத் தயாராக இல்லை. தனது மகளைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி ஹீரோவிடம் பரிதாபமாகக் கெஞ்சும் ஏழை அப்பா அல்லது ஹீரோவை ஒழித்துக் கட்டுவதற்காக வில்லத்தனங்கள் எல்லாம் காட்டி, கடைசியில் ஹீரோ காலில் விழும் பணக்கார அப்பா... போன்ற பாத்திரங்களில் நான் நடிக்க விரும்பவில்லை.

"சின்னத் திரையில் என்னை மையமாக வைத்து உருவாகும் தொடர்களில், எனது நல்ல இமேஜை மெருகூட்டும் கதாபாத்திரங்களில் நடிப்பது ரொம்ப நிறைவாக இருக்கிறது!"

"சினிமா அளவுக்கு டீ.வி.யில் ஸ்ட்ரெயின்



''குழந்தைகளுக்கெல்லாம் தமிழ் லட்சுமி, தமிழ்குமரன், தமிழ்ச் செல்வின்னு பேர் வெச்சிருக்கிறதா சொல்றீங்களே, அவ்வளவு தமிழ்ப் பற்றா உங்களுக்கு?''

''ஊஹூம்... லாட்டரி சீட்டு வியாபாரம் பண்ணுறேன் பாருங்க... அதான்!''


— கீழை அ. கதிர்வேல்



''தேர்தல்ல நாம தோத்தாலும் பரவாயில்லை; அந்தக் கட்சியை ஜெயிக்க விடக் கூடாது! அதுக்கு என்ன பண்ணலாம்?''

''ரொம்ப சிம்பிள்! நாம போய் அவுங்களோட கூட்டணி வைச்சுக்குவோம்!''

— நீடா சி. இளஞ்செழியன்



''வீட்ல காப்பி செலவைப் பாதியாய் குறைக்க வழி சொல்லட்டுமா?''

''ஒருவேளை காபியை கட் பண்ணச் சொல்லுவே?''

''இல்லை! உங்க வீட்டுக்காரருக்கு காபியை கட் பண்ணிடு.''

— கௌதம்

பண்ணிக் கொள்கிறீர்களா...?''

''நிச்சயமா! சொல்லப் போனால் சினிமாவை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. சினிமாவை விட இது பெரிய சேலஞ்ச்! ரோடில் போகிற ஆளை எல்லாம் இதில் நடிக்க வைக்க முடியாது! டயலாக் டாமினன்டா இருக்கும். நெறைய குளோஸப் ஷாட்ஸ்... 1968-ல் இருந்து மேஜர் சுந்தரராஜனுடன் இந்தியா முழுவதும் 800 நாடகங்களில் நடித்த அனுபவம் சின்னத் திரையில் டயலாக் பேசுவதில் கைகொடுக்கிறது. சினிமான்னா கியூவில் நின்று, வெயிலில் வேர்த்து, போலீஸில் அடிபட்டு, பிளாக்கில் டிக்கெட் வாங்கி தியேட்டருக்குப் போறோம். ஒரு இருட்டறையில் அதிரவைக்கும் சவுண்ட் சிஸ்டம் எல்லாம் சேர்த்து புலனடக்கத்தோடு உட்கார வைக்கிறது. டீ.வி., நீங்க விரும்பாத சமயத்திலே கூட உங்க வீட்டுக்குள்ளே வருகிறது. ஏதாவது படித்துக் கொண்டோ, நண்பர்களோடு பேசிக் கொண்டோ பார்க்கிறீர்கள்... வேணாம் என்றால் அடுத்த சேனலுக்குப் போய் விடலாம். உங்களை உட்கார்ந்து பார்க்க வைப்பது பெரிய சேலஞ்ச்! இதையெல்லாம் நினைத்துப் பார்த்து நடிக்க வேண்டியதிருக்கிறது. திரை தான் சிறிசு... தொடரை உருவாக்கும் டீமின் உழைப்பு பெரிசு!''

''சினிமாக் கலைஞர்கள் எல்லாம் சின்னத் திரையில் நுழைகிறார்கள்... இதன் தாக்கம் எப்படியிருக்கும்?''

''நல்ல மாற்றம் வரும்; திரை உலகின் அனுபவசாலிகள்தாம் இங்கும் பாடுபடுகிறார்கள். இது talent based மீடியா. ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டின் முதல்தரமானவர்கள், கோல்ட் மெடல் பெற்ற கலைஞர்கள் டீ.வி. தொடர்களை உருவாக்குவது ஆரோக்கியமான விஷயம்! கிராபிக்ஸ் போன்ற தொழில் நுட்பங்களைக் காட்டி எவ்வளவு நாளைக்கு ஏமாற்ற முடியும்...? கேபிள் டீவியில் தொடர்ந்து திருப்பி, திருப்பி சினிமா.. சினிமா... சினிமா சார்ந்த நிகழ்ச்சிகளைப பார்த்துப் பார்த்து மக்களுக்குக் குழப்பம் வரும். இன்னும் ஐந்து ஆண்டுகளில் ஒளி பரப்ப எந்தப் படமும் மிஞ்சாது! தரமான சிறுகதைகள், குறுநாவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் சீரியல்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். படைப்பாளிகளும் இந்த மாற்றத்துக்குத் தயாராக வேண்டும். சின்னத் திரையின் மாற்றம் சினிமாவிலும் எதிரொலிக்கும். இதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சினிமாத் துறையை செம்மைப்படுத்துவதில் சின்னத்திரை முக்கியப் பங்காற்றும்.''

பேட்டி : **மு. சிவலிங்கம்**

# அமுதசுரபி

## பொன்விழா ஆண்டு - குறுநாவல் போட்டி

## 10 நாவல்கள் - மொத்தப் பரிசு ரூ.20,000

'அமுதசுரபி' - வெளியீட்டாளர்கள் பொன்விழா ஆண்டைச் சிறப்பாக நினைவுபடுத்தும் வகையில் குறுநாவல் போட்டியை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

---

**குறுநாவல் 'அமுதசுரபி' மாத இதழில் 32 பக்கங்களுக்குக் குறையாமல் அமையவேண்டும். ஏறத்தாழ முழு வெள்ளைத்தாளில் 100 பக்கங்கள் இருக்கலாம்.**

---

குறுநாவல், எழுதுபவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். தழுவல், தமிழாக்கமாக இருக்கக் கூடாது. மொழி வளம், நடைச் சிறப்புடன் தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைதல் நல்லது. வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டும் எழுதலாம்.

---

**10 நாவல்கள் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்படும். ஒவ்வொரு நாவலுக்கும் ரூ.2,000 பரிசாக வழங்கப்படும்.**

---

10 நாவல்கள் பரிசுக்குத் தகுதியில்லாவிடில், தகுதியுள்ள நாவல்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படாத குறுநாவல்களைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகள் இணைக்கப்பட வேண்டும்.

---

**தேர்ந்தெடுக்கப்பட்ட குறுநாவல்கள் 'அமுதசுரபி' இதழில் ஒவ்வொன்றாக வெளிவரும்.**

---

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. குறுநாவல்கள் 'அமுதசுரபி' அலுவலகத்திற்கு 15-2/98-க்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவேண்டும்.

---

*அனுப்ப வேண்டிய முகவரி:*

அமுதசுரபி,

ஏ-7, இரண்டாவது அவென்யூ,

அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600 102

SHRIRAM GROUP COMPANIES

MADRAS

41

வியாஸரைப் போல அந்தர்யாமி நிவேதனமாக எண்ணியா நாம் உணவு கொள்கிறோம்...?

ஒரே பரபரப்புடன் சாப்பிடுகிறோம். அந்த நேரத்தில்தான் ஊர்க் கதை, உலகக் கதையெல்லாம் வந்து சேரும்... அன்னத்தை வைத்துக் கொண்டு பிறரை நிந்திக்கக்கூடாது என்கிறது சாஸ்திரம். அப்படியெல்லாம் நிந்தித்தால் என்ன ஏற்படும்...? அந்த அன்னத்தினுடைய கோபத்துக்கு நாம் ஆளாவோம். 'என்னை வைத்துக் கொண்டு நிந்தித்தாயல்லவா, நான் உனக்குக் கிடைக்காமல் போகக் கடவது!' என்று அதுவே சபித்து விடுமாம்! அதனால்தான் மகான்களான பெரியோர்கள் அன்னத்தை வைத்துக் கொண்டு மௌனமாகி விடுகிறார்கள். அப்படி மௌனமாகும்போது அந்தர்யாமி நிவேதனம் நிகழ்கிறது.

இந்த அந்தர்யாமி நிவேதனத்தைத்தான் உபநிஷத் யக்ஞம் என்கிற பெயரில் நமக்குச் சொல்கிறது.

பேருக்கும் இடையே சங்கு – சக்கரதாரியாக பகவான் தோன்றியதாக வருகிறது. 'எல்லா தேவதைகளும் சூழ அவன் நின்றான். அது எப்படி இருந்ததென்றால், ஆயிரம் பசுக்களடங்கிய ஒரு பசுக்கூட்டத்தினிடையே ஒரு காளை மாடு நின்றால் எப்படி கம்பீரமாய் இருக்குமோ அப்படி இருந்தது....' என்று வர்ணனை வருகிறது.

அப்படி பகவான் நேரேயே வந்து பலப்ரதானம் பண்ணுகிறான்.

ஆசார்யர்கள் வேதாந்த விஷயத்தில் உள்ளே புகுந்து, அவன் எப்படியெப்படி நமக்கு உபகரிக்கிறான், அவனுடைய பெருமை என்ன என்பதை ஒன்பது ஒன்பதாக பதினோரு ஒன்பதுகளில் விளக்குகிறார்கள்! 11X9 = 99!

அதில் முதல் ஒன்பதைச் சொல்கிறேன்: இந்த விஷ்ணு என்கிற சப்தத்தினால் நாம் எதைத் தெரிந்து கொள்கிறோம் என்றால், சர்வேசரத்வம் முதலான குணங்களை.

விஷ்ணு என்கிற நாமா குணத்தைக் காட்டு

# குறையொன்றுமில்லை

யக்ஞத்திலே, வெளியில் ஹோம குண்டத்தில், ஹவிஸை எடுத்து ஹோமம் பண்ணுகிறோம். அது வெளியிலே பண்ணக்கூடிய யக்ஞம். இது – உள்ளுக்குள்ளே – அந்தராத்மாவுக்குப் பண்ணக்கூடிய யக்ஞம். அங்கேயும் விஷ்ணு; இங்கேயும் விஷ்ணு, உள்ளுக்குள்ளே விருந்து சுவீகரிக்கிறான்.

யக்ஞம் பண்ணுகிற ஒருவர் அந்த விஷ்ணுவை அழைத்தால், அவன் வருவான்! அந்தக் காலத்திலிருந்தவர்களுக்கு அந்த சக்தி இருந்தது. மஹாவிஷ்ணு தோன்றுவதோடு, 'ருத்ரமாவஹ' என்றால் பரமேச்வரன் தோன்றுவான், 'இந்திரமாவஹ' என்றால் இந்திரன் வருவான். இப்படியே பிரும்மா, தேவர்கள் எல்லோரும் வருவார்கள்...

இந்தக் காலத்தில் இவர்களையெல்லாம் வரவழைக்கிற சக்தி நமக்குப் போதவில்லை.... ஆனால், விச்வாமித்திர, ஜமதக்னி, வசிஷ்டாதி மஹரிஷிகளெல்லாம் கடவுளரை நேரே கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவர்களால் பலருக்கும் பரமாத்மாவைப் பார்க்கக் கிடைத்தது; சேவிக்கக் கிடைத்தது.


ராமாயணத்திலே கூட, அத்தனை

கிறது... சஹஸ்ரநாமத்திலே வரக்கூடிய ஒவ்வொரு நாமாவும் குண பிரயுக்தமான நாமா – இதை நாம் மறக்கக் கூடாது.

ஒவ்வொரு நாமாவும் பகவானிடத்திலே இருக்கக்கூடிய அனேகம் அனேகம் குணங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ராமாயணத்திலே, வால்மீகி நாரதரைப் பார்த்துக் கேட்கிறார் : நாரதர் வந்ததும் வராததுமாகப் படபடவென்று கேட்கிறார் : 'பதினாறு திருக்கல்யாண குணங்களை வகைப்படுத்தி நீரும் நானும் பாடும்படியான இந்தக் காலத்திலே, இந்தப் பதினாறு குணங்களையும் உடையவன் ஒருவன் உண்டா...?' என்று அழகாகக் கேட்கிறார்.

அவர் குணங்களாக எதைக் குறிப்பிட்டுக் கேட்டாரோ, அவைதான் சஹஸ்ரநாமத்திலே ராம நாமாவாக வருகின்றன – பதினாறு நாமாக்கள் வருகின்றன... வால்மீகி கேட்ட அந்தப் பதினாறு குணங்கள்தான் இங்கே பதினாறு நாமாக்களாக வருகின்றன! இதற்கு மூலம் பிரமாணம் – எங்கே என்று பார்த்தோமானால், ரிக் வேதத்திலே – பதினாறு மந்திரங்கள் கொண்ட புருஷ சூக்தத்திலே!



ஆகையினாலே, திருநாமத்தைச் சொன்னாலும், குணத்தைச் சொன்னாலும், மந்திரத்தைச் சொன்னாலும் அவன் ஒருவனையே நமக்குக் காட்டிக் கொடுக்கிறதனாலே, இந்த மூன்றிலே எதை வேண்டுமானாலும் நாம் சொல்லலாம்.

**வி**ஷ்ணு என்கிற திருநாமம் காட்டுகிற குணங்களுக்குத் திரும்பவும் வருவோம்... சர்வேசரத்வம் என்று ஒரு குணம். அதற்கடுத்தது ஸ்ரீயப்பதித்துவம்... முதலான குணங்கள்- மொத்தம் ஒன்பது விவரிக்கப்படுகின்றன.

பதினோரு ஒன்பது என்று சொன்னேன் அல்லவா... அதிலே முதல் ஒன்பது இது. இந்த ஒன்பது திருக்கல்யாண குணங்களை விஷ்ணு என்கிற நாமம் நமக்குக் காட்டுகிறது.

முதல் குணமான சர்வேசரத்வத்தை எடுத்துக் கொள்வோம் - எங்கும்

முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

வியாபித்து, சர்வ பதார்த்தங்களிலேயும் நிறைந்து, சர்வத்தையும் நியமிப்பதனாலே அவன்தான் சர்வேஸ்வரன்.

'நிலை தந்த தாரகனாய், நியமிக்கும் இறைவனுமாய்' என்கிறார் சுவாமி தேசிகன். நாம் நிலைத்து நிற்பதற்குக் காரணமானவன் அவன். அவன் அந்தர்யாமியாய் நம்முள்ளிருந்து பிரகாசிக்கவில்லையானால் நம்மால் இப்படிச் செயல்பட முடியுமா?

மனு ஸ்ம்ருதியிலே சொல்லப்படுகிறது :

ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு போகிறவன் கையிலே கொம்பை வைத்துக் கொண்டு 'ஹாய் ஹாய்' என்று ஓட்டுகிறானே.... வேறு திக்கிலே போகிற மாடுகளைத் திருப்பி மந்தையிலே சேர்க்கிறானே... அப்படி பகவான் நம்மை ஓட்டுவதில்லை! யாரை அவன் ரக்ஷிக்க வேண்டும் என்று நினைக்கிறானோ, அவர்களுடைய புத்தியிலே பிரவேசித்து, 'இப்படிப் போ, இதைச் செய்.... அதைச் செய்யாதே...' என்று அவனே ஏவுகிறான். பரமாத்



# அருள்வாக்கு

சமுத்திரம் ஆடாமல் அசையாமல் இருக்கிறபோது ஒரு காற்று அடித்தால் உடனே இதில் ஜலத்துளிகள் குமிழ்களாகத் தோன்றுகின்றன. இன்னொரு காற்று அடிக்கிறபோது அந்தக் குமிழ்கள் உடைந்து போகின்றன. பரமாத்மா ஆடாத அசங்காத சமுத்திரம் மாதிரி. மாயை என்கிற காற்றினால் அதிலே ஜீவாத்மாக்கள் என்கிற நாமெல்லாம் குமிழ் மாதிரி தோன்றியிருக்கிறோம். ஆசாரியருடைய கடாக்ஷம் என்கிற நல்ல காற்று நம்மேல் பட்டால் குமிழ் உடைந்து ஜலத்துளி சமுத்திரத்தோடு ஐக்கியமாகி விடுவது போல், நாமும் பரமாத்மாவிடம் இரண்டறக் கலந்து விடுவோம்.

சமுத்திர ஜலம் என்றென்றும் அளவு குறையாமலேதான் இருக்கிறது. அதிலிருந்து ஆவி பிரிந்து சென்று மழையாகி உலகத்தில் பல விதங்களில் நதி, ஓடை, வாய்க்கால், ஏரி, குளம், கிணறு என்று ஜலாசயங்களாக ஆகின்றன. சமுத்திரம் வற்றுவதில்லை. அதில் புதிதாக வெள்ளம் வருவதுமில்லை. அதிலிருந்து வந்த ஆறு குளங்கள் வற்றலாம்; அல்லது இவற்றில் வெள்ளம் வரலாம். வெயில் நாளானால் வீட்டுக் குழாயில் ஜலம் இல்லை: ரெட்ஹில்ஸில் ஜலம் இல்லை என்கிறோம். மழைக்காலத்தில் கோதாவரியில் வெள்ளம். காவேரியில் உடைப்பு என்று பேசுகிறோம். ஆனால் சிருஷ்டி காலத்தில் இந்த உலகத்தில் எத்தனை ஜலம் இருந்ததோ அதில் ஓர் இம்மிகூட—க்ரெயின்கூட— இன்றுவரை குறையவில்லை, கூடவும் இல்லை. பணக்காரர்கள் சிலர் நிலத்தை விற்று வீடு வாங்குவார்கள்; வீடுகளை விற்று பாங்கில் போடுவார்கள்; பாங்குப் பணத்தை 'ஷேர்'களாக மாற்றுவார்கள். மொத்த சொத்து மாறாது. அவற்றின் ரூபம் தான் பலவிதத்தில் மாறும். எல்லாவற்றையும் கூட்டினால் கணக்கு சரியாக இருக்கும். அப்படியேதான் லோகத்தில் உள்ள மொத்த ஜலம் சமுத்திரத்தில் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் மேகத்தில் இருக்க வேண்டும், அல்லாது போனால் மழையாக இருக்க வேண்டும், அல்லது நதியாக, ஏரி குளங்களாக இருக்க வேண்டும்.

பரமாத்மா பலவாகத் தோன்றியிருக்கிறார். தோன்றிய பின்னும் சமுத்திரம் மாதிரி கூடாமல், குறையாமல் இருக்கிறார். நமக்குக் கூடுதல், குறைவு எல்லாம் உண்டாகிறதாகத் தோன்றுகிறது. ஆனால் உள்ளது ஒன்றேதான் என்ற ஞானம் வந்தால் எங்குமே கூடுதலும் இல்லை, குறைவும் இல்லை.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

மாவினுடைய பிரேரணையினால்தான் எல்லா கர்மாவும் நடக்கிறது.

– இது மனு ஸ்ம்ருதியிலே சொன்னது.

இதுவே நிஜம் என்பதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சி – ஸ்ரீரங்கத்திலே நடந்தது : எம்பார் என்கிற ஆசார்யர் காலக்ஷேபம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ஒருத்தர், வாசல் திண்ணையிலே காலை ஆட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். 'காலக்ஷேபத்துக்கு வந்தால் நல்ல விஷயங்கள் காதில் விழுமே... இப்படி வீணாகத் திண்ணையிலே உட்கார்ந்திருக்கிறீரே...?' என்று கேட்டும், அவர் வரவேயில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தார்!

ஒருநாள் விடாப்பிடியாக அவரைத் திரும்பவும் கூப்பிட்டார்கள் : 'காலக்ஷேபத்துக்கு வாருங்களேன்...' அன்றைக்கு அவர் திடீரென்று கூப்பிட்டவுடனே வந்து விட்டார். முன் வரிசையிலே போய் உட்கார்ந்து கொண்டார். கண்ணிலிருந்து தாரை தாரையாக அவருக்குக் கண்ணீர் பெருகியது! அப்படி அனுபவிக்கிறார் காலக்ஷேபத்தை. 'ஐயோ! இவ்வளவு நாளும் கேட்காது விட்டு விட்டோமே; வீணாகப் போயிற்றே...' என்று ரொம்ப வருத்தம் அவருக்கு!

மறுநாளிலிருந்து பத்து நிமிஷம் முன்னதாகவே வந்து அவர் முன் வரிசையிலே உட்கார ஆரம்பித்தார்! தினமும் வந்தார். பெரிய ஞானியாக, பக்தராகப் போய் விட்டார்!

அப்போது எம்பார், காலக்ஷேபத்துக்கு வந்த அனைவரையும் கேட்டார் :

"இவர் இத்தனை நாட்களாக இல்லாமல் திடீரென்று இப்போது பக்தரானதற்கு இவரை விடாமல் கூப்பிட்டவர்கள்தான் காரணம் என்று நினைப்பவர்கள் கையை உயர்த்துங்கள்..."

உடனே சில பேர் கை உயர்த்தினார்கள்.

"கூப்பிட்டவர்கள் கூப்பிட்டாலும் அவர் அல்லவா வரவேண்டும்; எனவே இந்த மனமாற்றத்துக்கு வந்தவரேதான் பொறுப்பு என நினைப்போர் கையுயர்த்தலாம்..." என்று மீண்டும் எம்பார் கேட்டார்.

வேறு சில பேர் கையுயர்த்தினார்கள்.

மூன்றாவதாக மீண்டும் எம்பார் கேட்டார் : "நீங்கள் கூப்பிட்டாலும்,

இவர் வந்தாலும் காலக்ஷேபத்தைச் சொல்கிறவர் நன்றாகச் சொன்னால்தானே விஷயம், கேட்பவர் மனத்தில் ஏறும்...? அதனால் காலக்ஷேபம் செய்கிறவரே இந்த மாற்றத்துக்குக் காரணம் என்போர் கையுயர்த்துக...'' என்றார்.

சொல்வதைப் புரியும்படி சொல்வதே ஒரு கலை... அதற்கு உதாரணமாய் ஒரு பாட்டு. திருமங்கையாழ்வாருடையது – சொல்லலாம். அந்தப் பாடலிலே அவர் ஊரை ஏராளமாய் வர்ணிக்கிறார்; வயல் ரொம்ப அழகாக இருக்கிறது. தீர்த்தமெல்லாம் அழகாய் இருக்கிறது. நீர் வளம், நிலவளம் சொல்லி முடியாது... அப்படிப்பட்ட இடத்திலே ஒவ்வொரு மீனும் எருமை கன்னுக்குட்டியைப் போலே இருக்கிறதாம்! அவ்வளவு வளமை என்று வர்ணித்துக் கொண்டே போகிறார்... 'அப்படிப்பட்ட ஊரிலே பறவைகளெல்லாம் குஞ்சுகளுக்கு இரை தேடி அலைந்தன' என்று பாட்டை முடிக்கிறார்!

இது என்ன...? முன்னுக்குப் பின் முரணாக அல்லவா இருக்கிறது பாசுரம்...? என்று நினைப்போம். மீன்கள் கொழுத்திருக்க பறவைகள் ஏன் இரை தேட வேண்டும்...?

இந்தக் கேள்விக்கு பதில் இருக்கிறது... மீன்கள் பெரிது பெரிதாக இருந்தால் பறவைகளால் அவற்றைத் தூக்கிக் கொண்டு போக முடியுமா? அந்தக் குஞ்சுகளின் வாய்க்குள்தான் அவை கொள்ளுமா...? ஆகையினாலே, குஞ்சுகளின் வாய்க்குள்ளே வைக்கக்கூடிய சிறிய அளவிலான மீன்களை, பறவைகள் தேடி அலைந்தனவாம்...!

எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், விஷயங்கள் நிறைய இருக்கின்றன. அதைப் புரிந்து கொள்கிற மாதிரி – மற்றவர்கள் கிரஹித்துக் கொள்கிற மாதிரி எடுத்துச் சொல்ல வேண்டும் அல்லவா...? அதனால் தான் எம்பார் கேட்டார்.... 'சொல்கிறவரின் திறன்தான் இந்த மனிதரை வரவழைத்ததா...?'

அதற்கும் சில பேர் கைதூக்கினார்கள்! இப்படி மூன்று காரணங்களுக்கும் சிலர் கையை உயர்த்தினார்கள். கடைசியில் எதிரில் கை தூக்க ஒருவரும் இல்லை என்கிற நிலையில், எம்பார் சுவாமி தாமே கையைத் தூக்கினார்!

"நான் கேட்காததும் நீங்கள் சொல்லாததுமான நான்காவது காரணத்துக்காக கையை உயர்த்துகிறேன்....'' என்றார்!


என்ன அந்த நான்காவது காரணம்...?

(தொடரும்)




மத்திய பிரதேசம் குவாலியர் நகரில் பெண்களுக்குப் பெண்களாலேயே நடத்தப்படும் வங்கி ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் 'லட்சுமிபாய் மகளிர் கூட்டுறவு வங்கி'. இந்த வங்கியில் காவலாளி முதல் மானேஜர் வரை அனைவருமே பெண்கள். இந்த வங்கி சர்வதேச மகளிர் தினத்தில் தொடங்கப் பெற்றது. ஆனாலும் பெண்கள் மட்டுமே இந்த வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ள முடியும் என்பது கொஞ்சம் 'ஓவர்' இல்லையோ!

நன்றி: பிசினஸ் இந்தியா
தகவல்: வி. பரமசிவம்



''பயம்கற வார்த்தையே என் அகராதில கிடையாது...''


''நல்ல அகராதியா பார்த்து வாங்கியிருக்கக் கூடாது...?''

– ஜெ. முருகன்

''தொழிலை விட்டுடலாம்னு இருக்கேன் சார்...''

''அவசரப்பட்டு ஏதாவது முடிவெடுக்காதேப்பா... பிறகு ரெண்டு பேருக்குமே கஷ்டமாயிடும்!''

– சீர்காழி வி.ரேவதி





# THE FIFTH ELEMENT

கலியுக முடிவில் பஞ்சபூதங்களும் முழு வேகம் காட்ட, பிரளயம் தோன்றும் என்று இந்து மதத்தில் நம்பிக்கை உண்டு. கொஞ்சம் வேறுபட்ட கோணத்தில் ஹாலிவுட் இதைத் தனது பிரம்மாண்டத்திற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. மூன்று நூற்றாண்டுகள் கழித்து நடக்கும் கதை. லாரி, கார் எல்லாம் ஆகாயத்தில் பறக்கின்றன. டிராபிக் சிக்னலிலிருந்து நடமாடும் பழக்கடை வரை எல்லாமே அந்தரத்தில். இதற்கெல்லாம் சம்பந்தமே இல்லாமல் வேறொரு கிரகத்தில் ஓநாய் முகங்களோடு ஒரு கூட்டம் உலகை அழிக்க நாள் பார்க்கிறது. இதை உணரும் பாதிரியார் ஒருவர், "பூமி, காற்று, நெருப்பு, நீர் இவற்றுடன் ஒரு ஐந்தாவது சக்தியும் (டைட்டில்!) இணைந்தால்தான் உலகைக் காப்பாற்றலாம்" என்கிறார்.

அந்த ஐந்தாவது சக்தி ஒரு பெண்மணி. வானில் டாக்ஸி ஓட்டும் ஹீரோவிடம் (புரூஸ் வில்லிஸ்) அடைக்கலம் கேட்கிறாள். அமெரிக்க ஜனாதிபதியும் தீய சக்திகளின் தலைவனும், மேற்படி பாதிரியாரும் அவளை வேறுபட்ட நோக்கங்களுக்காகக் குறி வைக்கிறார்கள். முடிவில் (வேறென்ன!) உலகம் காக்கப்படுகிறது.

வெட்டப்பட்ட கையொன்றில் உள்ள மாறுபட்ட செல் அமைப்புகளைக் கண்ட விஞ்ஞானிகள் குழு, அதிலிருந்தே மொத்தமாக ஒரு பெண்ணை உருவாக்கும் காட்சியும், க்ளைமாக்ஸில் இடம் பெறும் பிரம்மாண்டமான இசைக்கூடமும் கண்ணைக் கவருகின்றன.

அமெரிக்காவில் படம் பிய்த்துக் கொண்டு ஓடுகிறதாம். "உலகைக் காப்போம்" என்ற கோஷத்தையோ, கொள்கையையோ இனி சுற்றுப்புற சூழல் அபிமானிகள் எழுப்ப வேண்டாம். அதுதான் ஹாலிவுட்காரர்கள் அதைக் குத்தகை எடுத்துக் கொண்டு பிரம்மாண்டமாக கட்டுத் தள்ளுகிறார்களே! ○

— ஜி.


Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

சிலர் இதை ஒரு **வரி சேமிப்புத்** திட்டமாகக் கருதுகின்றனர்





மற்றவர்களுக்கு இது ஒரு **வளர்ச்சித் திட்டமாகத்** தோன்றுகிறது



நாங்கள் இதில் **இரண்டையும்** காண்கிறோம் !

யூடிஐ – ன்

# MEP 98

**மாஸ்டர் ஈக்விடி பிளான்**

ஒரு வரிசேமிப்பு வளர்ச்சித் திட்டம்

40 இலட்சத்துக்கும் அதிகமான முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்றது.

## சிறப்பம்சங்கள்

- இந்திய அரசாங்கத்தின் ஈக்விடியோடு இணைந்த சேமிப்புத் திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு 10 வருட காலவரை கொண்ட திட்டம்.
- வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 88-ன் கீழ் ரூ. 10,000 வரையிலான முதலீட்டிற்கு 20% வருமான வரி தள்ளுபடி.
- 3 வருடங்களுக்குப் பிறகு என்ஏவி விலையில் 3% தள்ளுபடிக்கு அதிகமாகாமல் மறு கொள்முதல் வசதி.
- வருமான வரிச் சட்டம் 1961 பிரிவு 54EA/54EB -ன் கீழ் மூலதன ஆதாய வரி விலக்கும் கிடைக்கிறது. ஆனால், இந்த விலக்கைப் பெறும் முதலீட்டாளர்கள் வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 88-ன் கீழுள்ள சலுகையைப் பெற முடியாது.
- குறைந்தபட்ச முதலீடு ரூ.500/- மற்றும் அதன் மடங்குகளில், உச்ச வரம்பு கிடையாது.
- முதலில் சேர்பவர்களுக்கு ஈட்டுத் தொகை.

| காலம் | ஈட்டுத்தொகை |
|---|---|
| 1 முதல் 31'98 ஜனவரி வரை | 2.50% |

**யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா**

உ ங் க ள் வ ள மா ன நா ளை க் கு

**பிளான் நடப்பிலிருக்கும் : — 31 மார்ச்'98 வரை.**

**மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள யூடிஐ கிளை அலுவலகம், முதன்மை பிரதிநிதி அல்லது ஏஜென்டை அணுகவும்.**

முதலீடு நோக்கங்கள், மதிப்பீட்டு கால அளவு மற்றும் முறைகள், விற்பனை, திரும்ப வாங்குவது அனைத்தும் செபி சட்டங்களின் கீழ்.

பரஸ்பர ஃபண்ட் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகளும் மார்க்கெட் ஏற்றத்தாழ்விற்கு உட்பட்டவை. திட்டத்தின் என்ஏவி செக்யூரிட்டிகள் மார்க்கெட்டை பாதிக்கும் காரணிகளை ஏறவோ, இறங்கவோ செய்யலாம். கடந்தகால செயல்பாடுகள் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுவதாகாது. மாஸ்டர் ஈக்விடி பிளான் '98 என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரத்தையோ, எதிர்கால ஆதாயங்களையோ குறிப்பிடுவதாகக் கருதலாகாது. திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் என்று எந்த உத்தரவாதமும் இல்லை. முதலீடு செய்யுமுன் தயவுசெய்து விவரப் பத்திரத்தைப் படிக்கவும்.

**மண்டல அலுவலகம்:** 29, இராஜாஜி சாலை, **சென்னை** 600 001. போன்: 517101.

**கிளை அலுவலகங்கள்:** ● **கோயம்புத்தூர்** போன்: 214973 ● **சென்னை** போன்: 517101, 517190 ● **மதுரை** போன்: 38186 ● **திருச்சி** போன்: 760060

0241/97 M TAM B